# விதைகள்...

பகுதி-13

சகோதரி. லதா டேவிட்

# விதைகள்...

## பகுதி - 13

### *என்னுரை:*

விதைகள் பகுதி பதிமூன்றுடன் மீண்டும் உங்களிடம் வர உதவி செய்த பரிசுத்தாவியானவரை மகிமைப்படுத்துகிறேன். வார்த்தைகளின் தேவனாகிய இயேசு தன்னுடைய ஆவியானவரைக் கொண்டு எனக்கு வெளிப்படுத்திய இரசியங்களுக்காக அவரை வாழ்த்துகிறேன். சகலத்தையும் தன் குமாரன் இயேசுவின் மூலமாக சிருஷ்டித்த என் அப்பா பிதாவாகிய தேவனை ஸ்தோத்தரிக்கிறேன். அவருக்கே எந்நாளும் இயேசுவின் நாமத்தினாலே துதியும், கனமும், புகழ்ச்சியும், மேன்மையும், வல்லமையும், மகிமையும் இன்றுமென்றுமுள்ள சதாகாலங்களிலும் உண்டாவதாக, ஆமென்!

### *உங்களோடு மனசுவிட்டு சில நிமிடங்கள் ... :*

விதைகள் பகுதி **1–க்கு** நல்ல வரவேற்பு இருந்தது. வரவேற்பு கொடுத்த அனைத்து தேவபிள்ளைகளுக்கும் இயேசுவின் நாமத்தில் எங்கள் வாழ்த்துதலைத் தெரிவித்துக் கொள்கிறோம். விதைகள் பகுதி–1 என்னுடைய தேடல்களின் ஆரம்பம். பூமியின் சாபத்தால் தொலைந்து போன என்னைத் தேடி ... என் வாழ்க்கையைத் தேடி புறப்பட்டேன். தேவனைத் தேடி ... அவரால் எனக்கு வைக்கப்பட்டிருந்த ஆசீர்வாதங்களை, ஐசுவரியங்களைத் தேடி புறப்பட்டேன். ... தேடுங்கள், அப்பொழுது கண்டடைவீர்கள்; ... என்றார் இயேசு. அந்த வார்த்தையின்படியே கண்டுபிடித்தேன்.

முதல் அடி முக்கியம் தான்; ஆனால் அங்கேயே நின்றுவிட்டால் ... ? எதையுமே கண்டுபிடிக்க முடியாமல் போய்விடுமே? ஒரு முயற்சியின் ஆரம்பம் எப்போதுமே உற்சாகமாக, சுறுசுறுப்பாக, வித்தியாசமானதாக, புதுமை போலத்தான் இருக்கும். போகப் போகத் தான் பயணத்தின் கஷ்டம் தெரியும், நினைத்தது போல அது அவ்வளவு இலேசானது அல்லவென்று புரியும். நான் முன்பே இதைப் பற்றி சொல்லியிருக்கிறேன். விதைகள் பகுதி 5 வரையிலும் வேதத்தின் பழைய பிரமாணத்தை (நியாயப்பிரமாணம் – 10 கட்டளைகள்) **basement-** ஆகக் கொண்டது தான். ஆனால் அப்போதே புதிய கிறிஸ்துவின் பிரமாணத்தின் ஒளிக்கீற்றுகள் ஒன்றிரண்டு என் கைக்குக் கிடைத்தது. அதைப் பிடித்துக் கொண்டு முன்னேறினேன்.

உம்முடைய வசனம் என் கால்களுக்கு தீபமும், என் பாதைக்கு வெளிச்சமுமாயிருக்கிறது. சங். 119:105. இந்த வசனம் என் வாழ்க்கையில் நிறைவேறியது. கும்மிருட்டில், திக்குத் தெரியாத காட்டில் மலங்க மலங்க விழித்துக் கொண்டு நின்ற போது; பரிசுத்தாவியானவர் **Torchlight-**டுடன் வந்தார்! எனக்கு பாதை காட்டினார்; அவர் காட்டிய பாதை இயேசுவே! (யோவான். 14:6). முதல் அடியை நான் சரியான பாதையில் எடுத்து வைக்கவில்லை என்பது உண்மை தான். ஏனென்றால் நான் நின்று கொண்டிருந்ததே தவறான இடத்தில் தான். தவறான இடத்திலிருந்து தேடல்கள் ஆரம்பித்ததால்; சரியான பாதையை சென்று அடைய கொஞ்சக் காலமானது, கொஞ்சம் தூரம் நடக்க வேண்டியதாயிருந்தது. ஆனால் என்னுடைய உண்மையான நிலையைத் தேடிப் போக வேண்டும் என்று ஆவியானவர் என் இருதயத்தில் கொடுத்த உந்துதலுக்கு நான் கீழ்ப்படிந்தது தான் என் வெற்றியின் ஆரம்பமாக அமைந்தது.

விதைகள் புத்தகங்களை, ஒரு பயணக் கட்டுரையாகவும் எடுத்துக் கொள்ளலாம். என்னுடைய அனுபவங்கள் அதில் வந்து கொண்டே இருக்கும். நான் தேவனை அறியாமலிருந்த நாட்களில் நியாயப்பிரமாணத்திற்குள்ளாக காவல் வைக்கப்பட்டிருந்த காலங்களில் என் தேடல்கள் ஆரம்பித்ததால் புத்தகங்கள் 5 வரையிலும் பழைய உடன்படிக்கையை அஸ்திபாரமாகக் கொண்டிருந்தது. கட்டிடம்

நன்றாகத்தான் இருந்தது; ஆனால் மூலைக்கல் இயேசுவாக இல்லாமல் போனதால் பிரச்சனைக்குள்ளாகிப் போனது.

நான் போய்க்கொண்டே இருக்கும்போது பாதைகள் இரண்டு பிரிந்தது... சந்தித்தது; நான் சிந்தித்தேன்! பரிசுத்தாவியானவரின் வசன **Torchlight-** னால் சரியான பாதையைக் கண்டுபிடித்தேன். அதற்குப் பிறகான அனுபவங்கள் தான் விதைகள்–6 ஆம் பகுதியிலிருந்து ... அதனால் விதைகள் பகுதி 6–லிருந்து வாசிக்கத் துவங்கினால் பிரயோஜனமாக இருக்கும். 13ம் பகுதி வரையிலும் வாசித்துவிட்டு; பிறகு இந்த வெளிச்சத்தில் பகுதி 1 To 5 வரையிலுமாக வாசிக்கலாம். நான் மாற்றுப் பாதையில் போனது போல நீங்களும் போகாதபடி; ஆரம்பத்திலேயே உங்களை சரியான பாதையில் நிறுத்துவதற்காகவே இவைகளை எழுதுகிறேன்.

ஒரு நாள் பிரபல விஞ்ஞானியான ஐன்ஸ்டீன் ரோட்டில் நடந்து போய்க்கொண்டிருந்தார். வழியில் ஒரு பெருங்கூட்ட ஜனங்கள் ஒரு சினிமா நடிகையைச் சூழ்ந்து கொண்டு வேடிக்கை பார்த்து கொண்டிருந்தார்கள். அப்போது அங்கு வந்த ஒருவர் ஐன்ஸ்டீனிடம் சொன்னார்: "நீங்கள் எவ்வளவு பெரிய விஞ்ஞானி? ஆனால் மக்கள் உங்களை விட்டுவிட்டு ஒரு நடிகையை வேடிக்கை பார்க்கிறார்களே?" என்று வருத்தப்பட்டார். அதற்கு ஐன்ஸ்டீன் "பார்ப்பதற்கு மட்டும் என்றால் என்னிடம் என்ன இருக்கிறது?" என்றார்!

பழைய உடன்படிக்கையை சார்ந்த புத்தகங்களுக்கு இருந்த வரவேற்பு புதிய உடன்படிக்கை சார்ந்த புத்தகங்களுக்கு இருப்பதில்லையே என்பது போன்ற கேள்விகளுக்கான பதில்... உண்மை தான், சும்மா வாசிப்பதற்கும், நேரத்தைப் போக்குவதற்கும், பிரசங்கத்தை இரசிப்பதற்கும், மார்க் போடுவதற்கும் மட்டும்தான் என்றால் அதற்கு எங்களுடைய புத்தகங்களில் (விதைகள் 6 **onwards ...**) எதுவுமில்லை!

சாபத்தின் கயிறுகளை அறுத்து, அதில் சிக்கிக்கொண்டிருப்பவர்களை விடுதலையாக்கத்தான் பிரசங்கம் தேவையே தவிர, பிரசங்க இரசிகர்களை திருப்திபடுத்த அல்ல! பிரசங்கங்களை ரசித்து ரசித்து திருப்தியடையும் இரசிகர்கள்; அந்த திருப்தியைத் தவிர வேறெதையும் பெற்றுக்கொள்ளப் போவதில்லை.

உங்களது சந்தேகங்கள் – கேள்விகள் – ஆலோசனைகள் ஏதேனுமிருப்பின் எங்களுக்கு எழுதுங்கள். தொடர்பு கொள்ளுங்கள்.


**எங்கள் முகவரி:**

சகோதரி. **லதா டேவிட்**

**நித்தியர் இயேசு ஊழியங்கள்**

5A/233, கால்டுவெல் காலனி,

2-ம் தெரு, (கிழக்கு)

தூத்துக்குடி-628 008

தொலைபேசி:

+91-461-2377889

அலைபேசி:

+91-09442466250 &

+91-09003456506

**Our Address:**

**Sis. LATHA DAVID**

**SOVEREIGN JESUS MINISTRIES**

**5-A/233, Caldwell Colony,**

**Second Street (East), TUTICORIN-628 008**

**Phone : +91-461-3209737**

**Mobile : +91-0 94424 66250 / +91-0 900034 56506**

**www.tamilchristian.com/ebook/**

## இதுவரை:

தேவனிடமிருந்து பெற்றுக் கொண்ட பல இரகசியங்களை பகிர்ந்து கொள்ள தேவன் உதவி செய்தார்; இன்னமும் உதவி செய்வார். *"நான் அதை ஒரு மனுஷனால் பெற்றதுமில்லை, மனுஷனால் கற்றதுமில்லை, இயேசுகிறிஸ்துவே அதை எனக்கு வெளிப்படுத்தினார். கலா. 1:12."* பூமியைக் குறித்த தேவனுடைய திட்டம் நிறைவேறி முடியப் போகிற கடைசி கால கட்டம் வந்திருக்கிறது. அவருடைய திட்டத்தை நிறைவேற்றப் போகும் பொறுப்பில் நாம் வைக்கப்பட்டிருப்பதால்; நமக்கு தன்னுடைய திட்டங்களுக்கடுத்த இரகசியங்களை வெளிப்படுத்துவதில் தேவன் அதிக விருப்பமுள்ளவராயிருக்கிறார். ஏனென்றால் திட்டம் அவருடையது; அதை நிறைவேற்றி முடிக்க நாம் அவருடைய கருவிகளாயிருக்கிறோம்.

மனிதன் விழுந்து போனதால் பூமிக்கு ஏற்பட்ட பிரச்சனைகளை மாற்றி ஒரே நிமிஷத்தில் எல்லாவற்றையும் தேவனால் ஆரம்பத்தில் இருந்தது போல (ஆதி: 1, 2 அதிகாரங்களில் இருந்த பூமியை) மாற்றி விட **(reset - rearrange - reorganize - retune)** முடியும் தான். என்றாலும் தேவன் அப்படி செய்யவில்லை. ஏனென்றால் பூமி மனிதனின் பொறுப்பில் விடப்பட்டிருக்கிறது, தேவனுக்குப் பதிலாக அவருடைய வேலையைச் செய்ய நாம் இங்கே வைக்கப்பட்டிருக்கிறோம். அதுமட்டுமல்ல பூமியில் மனிதன் தான் வேலை செய்தாக வேண்டும், வேறு வழியில்லை. அதற்கேற்ற விதத்தில் தான் தேவன் பூமியையும் அதன் நிறைவையும் மனிதனையும் வடிவமைத்திருக்கிறார். மனிதனால் முடியவில்லை என்பதற்காக தேவனே நேரடியாக வந்து எல்லாவற்றையும் செய்து முடிக்கும் விதத்தில் பூமியையும் அதன் நிறைவையும் தேவன் வடிவமைக்கவில்லை. அப்படி செய்து முடிக்க முடியுமானால்; பூமி சாபத்திற்குள்ளான பிறகு, இத்தனை ஆயிரமாயிரம் ஆண்டுகளாக பூமியின் மேல் நடக்கிற சீர்கேடுகளை தேவன் பார்த்துக்கொண்டு இருப்பாரா? நிச்சயமாக மாட்டார்! தேவன் பூமியை திட்டமிட்டதே மனிதனை அடித்தளமாக வைத்துத்தானே தவிர தன்னை வைத்து அல்ல.

கண்களால் காண்கின்ற விதத்தில் வடிவமைக்கப்பட்டிருக்கும் பூமியையும் அதன் நிறைவையும் கண்களால் காணத்தக்க விதத்தில் தேவனால் **design** பண்ணப்பட்டிருக்கும் மனிதனால் தான் கையாள முடியும். கண்களால் காணக்கூடாமல் ஆவியாக (கண்களால் காணக்கூடாத விதத்தில்) இருக்கிற தேவனால் பூமியில் நேரிடையாக எதையும் செய்ய முடியாது. அப்படியே அவர் எதையாகிலும் செய்தாலும் அதை மனிதர்களின் மூலமாகவும் பூமியிலுள்ள மற்ற காரியங்களின் மூலமாகவும் தான் செய்ய முடியும் என்பதை புரிந்து கொள்வது மிகவும் அவசியம். நாம் கையில் அணியும் கைக்கடிகாரம் **(Wrist watch)**-ஐ உருவாக்கியவன் மனிதன் தான். அதில் ஒரு கோளாறு ஏற்பட்டு விடுகிறது, உடனே வாட்ச் ரிப்பேர் செய்பவன் அதைத் திறந்து தன்னுடைய விரலை உள்ளே விடமாட்டான்! அப்படி செய்தால் கைக்கடிகாரத்தில் ஏற்பட்டிருக்கும் கோளாறை சரி செய்ய முடியாது; மாறாக கோளாறு அதிகமாகி விடும், பிறகு வாட்சை தூக்கி குப்பைத் தொட்டியில் எறிய வேண்டியது தான்! அந்த கடிகாரத்தை சரி செய்ய அவன் மிக சிறிய அளவிலான உபகரணங்களை உள்ளே செலுத்தி வேலை பார்க்கிறான்; வேலை முடிந்ததும் கோளாறு நீங்கி கடிகாரம் ஓட ஆரம்பிக்கிறது!

இந்த சத்தியம் தெரியாமல் தேவ பிள்ளைகளில் பலர் தேவன் மேல் பாரத்தைப் போட்டுவிட்டு ஈசி சேரில் **(Easy Chair)** உட்கார்ந்து ஆடிக் கொண்டிருக்கிறார்கள்! சிலர் அப்படியே தூங்கியும் போனார்கள்! சில மணி நேரங்களல்ல, வருஷக்கணக்கில் தூங்கிப் போனார்கள். திடீரென்று விழித்துப் பார்த்த போது: விட்டத்தில் சிலந்திப் பூச்சியின் பலமான, அசத்தலான ஆளையே சிக்க வைக்கிற கூடுகள்! வீட்டிலிருந்த எல்லா காரியங்களும் களவு போயிருந்தது, ஒரு பொத்தல் பையும், பிதுங்கிப்போன பித்தளை பாத்திரமும், கிழிந்து போன கந்தல் துணியும் தான் மீதமிருந்தன!

பூமியை ஆளுகை செய்வதற்காக, தன்னைப் போலவே படைக்கப்பட்ட மனிதனின் நிலை தன் கண் முன்பாகவே சின்னாபின்னமாகிப் போனதை பார்க்கும் போது தேவனுக்கு எப்படி இருந்திருக்கும் – இருக்கும் என்று ஒரு நிமிஷம் யோசித்துப் பாருங்கள்! ***"... பூமியிலே மனுஷனை உண்டாக்கினதற்காக கர்த்தர் மனஸ்தாபப்பட்டார்; அது அவர் இருதயத்துக்கு விசனமாயிருந்தது. ஆதி. 6:6." (... it repented the Lord that he had made man on the earth, and it grieved him at his heart)***

பூமியை உண்டாக்கினதற்காக தேவன் வருத்தப்படவில்லை, அது மிகவும் நன்றாகவே இருந்தது. ஆரம்பத்தில் மனுஷனை உண்டாக்கினதற்காகவும் தேவன் வருத்தப்படவில்லை; முதலில் மனிதன் நன்றாகத்தான் இருந்தான். ஆதியாகமம் 6–வது அதிகாரத்தில் தான் தேவன் வருத்தப்பட ஆரம்பிக்கிறார் என்பதை பார்க்கிறோம். காரணம் அதற்குள்ளாக பூமியில் நடந்து முடிந்திருந்த கண்ட்றாவிகள் அந்த அளவுக்கு இருந்தன! ஆதி. 3–ஆம் அதிகாரத்திலிருந்தே சாப நியமம் இயங்க **(activate)** ஆரம்பித்து விட்டது. அதன் விளைச்சல்கள் பூமியை நிரப்ப ஆரம்பித்தன, என்றாலும் தேவன் சகித்துக் கொண்டிருந்தார்.

இனி மேலும் சகித்துக் கொண்டிருந்தால் பூமிக்கும், மனிதர்களுக்கும், மனிதர்களைக் குறித்த தேவனுடைய திட்டத்திற்கும் பிரச்சனையாகும் காரியங்கள் பூமியின் மீது நடக்க ஆரம்பித்து விடும். (ஆதி. 6:1–4). தேவன் தன்னுடைய சாயலின்படி (தன்னைப் போலவே – தேவனைப் போல) உருவாக்கப்பட்ட மனிதன் வாழ்ந்து, ஆளுகை செய்யக்கூடிய விதத்தில் தான் பூமியையும் அதன் நிறைவையும் உருவாக்கியிருந்தார். ஆனால் பூமியின் மீது இயங்க ஆரம்பித்த சாப நியமம் தேவனுடைய திட்டத்திற்கு எதிரிடையாக வேலை செய்ய ஆரம்பித்தது. அப்படி எதிரிடையாக **(Anti-clockwise)** வேலை செய்த சாப நியமத்தின் விளைச்சல்கள் தான் ஆதி. 6:1–4 வசனங்களில் வருகின்ற காரியங்கள்.

சாபத்தால் பூமியின் மீது எத்தனையோ மோசமான சீர்கேடான காரியங்கள் நடந்தது தான். ஆனால் இந்த வசனங்களில் வரும் காரியங்கள் மிகவும் வித்தியாசமானது. தேவனுடைய சாயலில் இல்லாத வேறு எதுவோ ஒன்று; ஆனால் மனிதனைப் போல தோற்றமுடைய உயிரினங்கள் தோன்றுவதைப் பார்க்கிறோம். அதாவது இந்த வசனங்களில் வருகிற இராட்சதர்கள், பலவான்கள் போன்றவர்களின் ஆவி தேவனுடைய சாயலில் இருக்கவில்லை. சொல்லப்போனால் அவை பிசாசினுடைய சாயலில் இருந்தது! அதாவது பூமிக்குரிய கூடாரமாகிய சரீரம் மனிதனை ஒத்திருந்தது: ஆனால் உள்ளான மனிதனின் (ஆவியின்) சாயல் பிசாசை ஒத்திருந்தது. ஒரே வார்த்தையில் சொல்லப்போனால் பூமியின் சாபம் தேவசாயலான மனுஷர்களுக்குப் பதிலாக சாத்தானின் சாயலான மனுஷர்களை பிறப்பிக்க ஆரம்பித்தது. மனிதர்களை உருவாக்க தேவன் உபயோகித்த **formula**-க்குப் பதிலாக வேறு ஒரு சூத்திரம் பயன்பாட்டுக்கு வந்தது! இப்போது என்ன செய்வது? பூமியையும் காப்பாற்ற வேண்டும், தன் சாயலாக இருக்கிற மனிதனையும் காப்பாற்ற வேண்டும்?! அதற்காக தேவன் எடுத்த அதிரடி நடவடிக்கைதான் "நோவாவின் காலத்தில் வந்த உலகளாவிய வெள்ளம்"!

இப்போதும் சொல்கிறேன், தேவன் நல்லவர், அவர் நல்லவர் மாத்திரமே! தேவனுடைய சாயலின்படி பூமியின் மேல் மனிதர்கள் தோன்றுவதற்கு அவர் ஏற்படுத்தியிருந்த **formula** பிரச்சனைக்குள்ளானபோது ... கண்டிப்பாக அதை சரிசெய்யத்தான் வேண்டும். போனால் போகட்டும் என்று விட்டுவிட முடியாதே? அப்படி விட்டுவிட்டால் தேவனுடைய திட்டமே ஆட்டம் கண்டுவிடுமே? **(collapse).** அதுமட்டுமல்ல, தேவன் தனக்குரிய எல்லா பரலோக சொத்து சுகங்களையும் பூமியின் மீது முதலீடாகப் போட்டிருந்தார். ஏனென்றால் பூமி ஒரு சாதாரண கிரகமல்ல, அண்டசராசரத்தையே படைத்த தேவனைப் போன்ற மனிதர்கள் வாழ்வதற்காக தேவனால் ஏற்படுத்தப்பட்ட இன்னொரு பரலோகம்! அதுமட்டுமல்ல, தேவன் தன்னுடைய ஒரே குமாரனாகிய வார்த்தையை (வார்த்தையானவர் – அவர்தான் இயேசு) அனுப்பி தான் பூமியிலுள்ள எல்லாவற்றையும் உருவாக்கினார் என்பது நமக்குத் தெரியும். அப்படியிருக்க தன்னுடைய ஒரு மகத்தான **Project** கெடுக்கப்படுமானால் நிச்சயமாக அது அவரையும் பாதிக்குமில்லையா? நிச்சயமாக தேவனை அது பாதிக்கவே செய்யும்.

உதாரணமாக நீங்கள் செய்து முடித்த ஒரு **Project work-** ல் ஏதாவது பிரச்சனை வந்து அது தோல்விக்குள்ளாகும் போது என்ன செய்வீர்கள்? இது வேண்டாம் என்று அழித்துக் குளித்து ஆடி (!) எல்லா **Files-** ஐயும் மூடி எங்காவது ஒரு மூலையில் தூக்கிப் போட்டு விடுவீர்களா? நிச்சயமாக செய்ய மாட்டோம் இல்லையா? அப்படிச் செய்தால் அது நம் எதிர்காலத்தையே பாதிப்புக்குள்ளாக்கி விடும். அதனால் மீண்டுமாக அதை வெற்றியாக முடிக்க, செய்ய வேண்டியதை செய்வோம் இல்லையா? நமக்கிருக்கும் இந்த சுபாவம் நம் நம்மை சிருஷ்டித்தவரிடமிருந்து வந்தது தான்!

தேவன் பூமி மனிதனிடம் இருந்து பறிபோனதை கண்ட மாத்திரத்தில்; உடனே தேவன் அதை மீட்கும்படி புறப்பட்டு வருகிறார். ஆதி. 3:6–ல் பூலோகம் மனிதனிடமிருந்து பறிபோகிறது. 8ம் வசனத்தில் தேவன் வந்து விடுகிறார், 9ம் வசனத்தில் ஆதாமை கூப்பிடுகிறார். 11–14 வசனங்களில் ஆதாம், ஏவாள், சாத்தான் மூன்று பேரிடமும் **inquiry** நடத்துகிறார். 15 வது வசனத்தில் பூமியின் (அதாவது மனுக்குலத்தின்) மீட்புக்கான நடவடிக்கையிலும் இறங்கிவிடுகிறார். உடனுக்குடன் தன்னுடைய வார்த்தைகளை அனுப்பி விடுகிறார். ஆதியாகமம் 1:15 ல் புறப்பட்ட தேவனுடைய வார்த்தைகள் பூமியை சுற்றி ஓட ஆரம்பிக்கிறது. காலத்தோடு சுழன்று சுழன்று வேலை செய்கிறது **(process - series of actions)**. மத் 2:1ல் அந்த வார்த்தைகள் இயேசுவாக இந்த பூமியில் நிறைவேறுகிறது!

தேவன் பூமியின் மீது எதைச் செய்தாலும் அதை நேரிடையாக செய்ய முடியாது என்பதால்; அதற்கு மனிதனையும், இயற்கையையும் தான் பயன்படுத்துகிறார். சர்வ வல்லமை பொருந்திய தேவனால் பூமியின் மேல் நேரிடையாக எதையும் செய்ய முடியாது என்று சொல்வது எப்படி சரியாகும்? இது தேவனை குறைத்து மதிப்பிடுவதைப் போல ஆகுமல்லவா? என்று தோன்றலாம். நியாயம் தான், ஆனால் பூமியையும், இயற்கையையும், மனிதனையும் படைத்ததே அவர் தான். தன்னுடைய படைப்புகளை பயன்படுத்தி (கருவியாக, ஊடகமாக) பூமியின் மீது தன்னுடைய கிரியைகளை நடப்பிக்கிறார். இதனால்

அவருடைய சர்வ வல்லமை குறைந்து போனதாக அர்த்தமில்லையே? தோட்டத்தில் வேலை செய்து கொண்டிருக்கும் மனிதன் நிலத்தை தோண்ட, பாத்திகள் அமைக்க மண்வெட்டி, அலவாங்கு, கூடை போன்றவற்றை உபயோகிக்கிறான். இவைகள் இல்லாமல் அவனால் தோட்ட வேலை செய்ய முடியாது என்பதற்காக அவனுடைய திறமையை குறைவாக மதிப்பிட முடியுமா? சில மாதங்களில் ஒரு அழகான பூந்தோட்டத்தை உருவாக்கி விடுகிறான். அந்த தோட்டம் அவனுடைய திறமையை வெளிப்படுத்துகிறது; பார்க்கிறவர்களெல்லாம் அவனை புகழ்ந்து பேசுகிறார்கள். ஆனால் மண்வெட்டி, அலவாங்கு, கூடையைப் பற்றி யாரும் பேச்சே எடுக்கவில்லை. தேவனுடைய கிரியைகளுக்கு நாம் பயன்படுத்தப்பட்டாலும்; அவர் தான் அதை செய்ததாக அர்த்தமாகிறது.

> ***... பூமியெங்கும் எந்த ஜாதிகளிடத்திலும் செய்யப்படாத அதிசயங்களை உன் ஜனங்கள் எல்லாருக்கு முன்பாகவும் செய்வேன்; ... உன்னோடேகூட இருந்து, நான் செய்யும் காரியம் பயங்கரமாயிருக்கும். யாத். 34:10***
>
> ***அவர் (கர்த்தர்) ஆகாசுடைய சூரிய கடியாரத்தில் பாகைக்குப் பாதை முன்போன சாயை பத்துப்பாகை பின்னிட்டுத் திரும்பும்படி செய்தார். 2 இரா. 20:11.***
>
> ***மோசே தன் கையைச் சமுத்திரத்தின்மேல் நீட்டினான்; அப்பொழுது கர்த்தர் இராமுழுதும் பலத்த கீழ்காற்றினால் சமுத்திரம் ஒதுங்கும்படி செய்து, அதை வறண்டுபோகப்பண்ணினார்; ஜலம் பிளந்து பிரிந்துபோயிற்று. யாத். 14:21***

மேலே உள்ள வசனங்களில் தேவன் மனிதனையும், கடிகாரத்தையும், காற்றையும், கடலையும் பிரயோஜனப்படுத்தித்தான் தன் கிரியைகளைச் செய்கிறார். தேவன் சந்தேகமே இல்லாமல் சர்வல்லமை உள்ளவர்தான்; இல்லாவிட்டால் அவர் தேவனாயிருக்க முடியாதே? என்றாலும் அவர் பூமியின் மீது செயல்பட பூமியிலுள்ளவைகளைத்தான் பிரயோஜனப்படுத்தியாக வேண்டும். பூமியில் உள்ள காரியங்களில் முதன்மையானது மனிதன் தான்! மனிதன் அவரைப் போலவே இருப்பதால் அவனைக் கையாளுவது தேவனுக்கு மிகவும் எளிதானது, இலகுவானது, பிடித்தமானதாக இருக்கிறது!

## வெளிப்படுத்தல்:

பூமியின் மீது இயங்கி வரும் சாப நியமத்தால் பூமியும் அதன் நிறைவும், மனிதனும் எந்த அளவுக்கு தன்னுடைய மகிமையை இழந்து போனார்கள் என்பதைப் பார்த்து வருகிறோம். கழுதை தேய்ந்து கட்டெறும்பான கதையைக் கூட கொஞ்சம் ஒத்துக் கொள்ளலாம். ஆனால் இது டையனோசார் தேய்ந்து பாக்டீரியாவாக மாறிய கதை! அந்த அளவுக்கு பூமியின் மகிமை சரிந்து கொண்டே குறைந்து கொண்டே வந்தது. இதில் அதிகமாக பாதிக்கப்பட்டது மனிதன் தான். ஏனென்றால் பூமியின் மீது தேவன் தன்னுடைய சாயலை (சாரத்தை) ஏற்றி உருவாக்கியது மனிதனை மாத்திரம் தான். தேவனைப் போல படைக்கப்பட்ட மனிதனுக்கு தான் யார் என்றே தெரியாமல் போனதைப் போன்ற பரிதாபம் வேறெதுவும் இருக்க முடியாது. தன்னுடைய சொந்த வீட்டின் விலாசத்தையே தொலைத்துவிட்டு அழுதபடி தாயின் வயிற்றிலிருந்து வெளிப்படும் சோகம்! அதை வார்த்தைகளால் சொல்ல முடியாது. மனிதனுடைய நிலைமையை தேவபிள்ளைகளைவிட சாத்தானின் ஆளுகைக்குள்ளாக இருக்கிற இந்த பிரபஞ்சத்தின் பிள்ளைகள் நன்றாக புரிந்து வைத்திருக்கிறார்கள். அதன் வலியை நன்றாக அறிந்து வைத்திருக்கிறார்கள். அதற்கு உதாரணமாக ஒரு சில பாடல் வரிகள்:

*பிறக்கும்போதும் அழுகின்றான், இறக்கும் போதும் அழுகின்றான். ஒருநாளேனும் கவலையில்லாமல் சிரிக்க மறந்தாய் மானிடனே! ஒண்ணுமே புரியலே உலகத்திலே. என்னமோ நடக்குது மர்மமா இருக்குது! ... என்னைப் போல ஏமாளி எவனும் இல்லை. எங்கே நிம்மதி? அங்கே எனக்கோர் இடம் வேண்டும். நீ என்பதென்ன? நான் என்பதென்ன? நிலையில்லாத இந்த உலக மேடையில் நானும் வந்ததென்ன? இறைவனின் படைப்பிலே கவிதைகள் உண்டு. காந்தியைப் போலவே காவியம் உண்டு. முடிவு விளங்காத தொடர்கதை உண்டு, முடிக்க வேண்டும் என்று முடிப்பதும் உண்டு! ஆசை போவது விண்ணிலே, கால்கள் போவது மண்ணிலே! பாலம் போடுங்கள் யாராவது ... நதியினில் வெள்ளம், கரையினில் நெருப்பு, இரண்டுக்கும் நடுவே இறைவனின் சிரிப்பு ... ஏன் இந்த சிரிப்பு?*

*ஏன் பிறந்தாய் மகனே, ஏன் பிறந்தாயோ? நான் பிறந்த காரணத்தை நானே அறியும் முன்னே*

***நீயும் வந்து ஏன் பிறந்தாய் செல்ல மகனே!? என்ன தவறு செய்தேன் அதுதான் எனக்கும் புரியவில்லை. வந்து பிறந்துவிட்டேன் ஆனால் வாழத் தெரியவில்லை ... விதியின் இரதங்களிலே நாம் விரைந்து பயணம் செய்தால், மதியும் மயங்குதடா சிறு மனமும் கலங்குதடா ... கடந்த காலமோ திரும்புவதில்லை, நிகழ் காலமோ அரும்புவதில்லை, வருங்காலமோ விரும்புவதில்லை, இதுதானே மனிதனின் நிலை.***

உலக மனிதர்கள் நிறையவே யோசிக்கிறார்கள். மனிதர்களின் வேறுபட்ட வாழ்க்கை நிலைகளை நிறையவே உள்வாங்குகிறார்கள். ஒவ்வொரு மனிதனின் ஆழ்மனதுக்குள்ளும் தன்னைப் பற்றின இரகசியங்கள் புதைந்து கிடக்கின்றன. அவைகளை அவ்வப்போது புகையும் போது ஏன்? எப்படி? என்னாச்சு? எதற்காக? இப்படி பல கேள்விகளை எழுப்பியபடி புகைகிறது. கேள்விகளுக்கு விடை காண முயற்சிக்கிறார்கள். அமைதியான ஒரு வாழ்க்கையை தேடி ஓடி அலை மோதுகிறார்கள். அதே நேரத்தில் கடவுளை மிக மிகத் தவறாகவும் புரிந்து கொள்கிறார்கள். இப்போது கண்களால் பார்க்கிற மோசமான உலகத்தை கடவுள் தான் உருவாக்கினார் என்றும், பூமியின் மீது நடக்கின்ற எல்லா நிகழ்வுகளுக்கும் கடவுள்தான் காரணம் என்றும் நினைக்கிறார்கள். அதனால் கடவுளைக் குறித்த ஒரு நல்ல மனஉரு **(concept)** இருப்பதில்லை. அதுமட்டுமல்ல, சாத்தானின் ஆளுகைக்குள்ளாக இருக்கிற அவர்களுக்கு சாத்தான் அவர்களுடைய தவறான எண்ணங்களுக்கு உருவம் கொடுத்து உதவி செய்கிறான்.

அவர்கள் உருவம் கொடுத்து (அல்லது உருவம் கொடுக்காமல்) வைத்திருக்கும் அவர்களுடைய கடவுள்களை அவர்களுக்கே பிடிப்பதில்லை. என்றாலும் என்ன செய்வது? வேறு வழியில்லை. தாங்கள் தவறாக கற்பனை **(imaginary - existing only in the mind, not in reality)** செய்து வைத்திருக்கும் கடவுளின் நிலைமை அவ்வளவு தான், அவரைத்தான் சேவித்தாக வேண்டும்! இப்படிப்பட்ட கடவுள்களை நம்பினால் உருப்படாது, மோசம் போய்விடுவோம் என்பது அவர்களுக்கே தெரிகிறது! அதனால் அவர்கள் தங்களையே சார்ந்து வாழ்கிறார்கள். அவர்களின் தேவர்களைவிட அவர்களே தேவலாம் என்று அவர்களுக்குத் தோன்றி விடுகிறது! உண்மை தான், தவறேதும் இல்லை, அவர்கள் தேவர்களைவிட அவர்கள் உயர்ந்தவர்கள்தானே?!

உலக மனிதர்களும் தேவனைப் போல, அவருடைய சாயலின்படி சிருஷ்டிக்கப்பட்டிருப்பதால்; அவர்களுக்கும் மனிதனின் நிலை பற்றிய வெளிப்பாடுகள்**(revelation)** ஓரளவுக்கு கிடைக்கத்தான் செய்கின்றன. அதை எடுத்துக் கொண்டு அவர்கள் உலகளவில் தலைசிறந்த அறிஞர்களாக, சிந்தனையாளர்களாக **(Philosopher)** மாறுகிறார்கள். ஆனால் இந்த வெளிப்பாடு அவர்களுக்கு தேவனிடமிருந்து நேரிடையாகக் கிடைப்பதில்லை. தேவனைப் போல படைக்கப்பட்டிருக்கும் அவர்களுக்குள் இயற்கையாகவே தேவன் தந்த ஞானம் இருக்கிறது. அவருடைய சிருஷ்டிப்பில் அவருடைய ஞானம் பதிந்து விடுவதில் ஆச்சரியம் எதுவுமில்லை. அப்படி தேவனால் தங்களுக்கு தரப்பட்டிருக்கும் ஞானத்தை (மூளையறிவு – அதை உபயோகித்து அதிகப்படியான காரியங்களை கிரகிக்கும் ஆற்றல்) உபயோகிக்கிறார்கள். அப்படி அவர்கள் சிந்திக்கும்போது மனிதனைப் பற்றி, மனிதனின் வாழ்க்கையை பற்றி, வாழ்க்கையின் பின்னணியில் செயல்படுகிற சில பிரமாணங்களைப் பற்றி ஓரளவுக்கு கிரகித்து விடுகிறார்கள். ஆனால் சிறந்த சிந்தனையாளர்களாக மாறுவதற்கு இவர்கள் அதிகப்படியான முயற்சிகள் எடுத்து, நிறைய படித்து, நிறைய யோசித்து, நிறைய எழுதி காலத்தை கரைக்க வேண்டியதாக இருக்கிறது.

அறிஞர் பெர்னாட்ஷா சிறுவயதில் வறுமையில் வாடினார். ஒரு அலுவலகத்தில் எடுபிடி வேலையில் சேர்ந்தார். இந்த வேலையினால் தன்னுடைய வாழ்க்கை வீணாகி விடுமோ என்ற பயத்தில் வேலையை விட்டு விலகினார். இவர் தன் தாயாருக்கு எழுதின கடிதத்தில் ***"இறைவன் கொடுத்திருக்கும் ஒரேயொரு வாழ்க்கையை எடுபிடி வேலை பார்த்து வீணாக்க மாட்டேன்"*** என்று எழுதியிருந்தார். அதற்குப் பிறகு வாழ்க்கையில் எதிர்நீச்சல் போட்டார், போராடினார், சலிப்பின்றி தன்னம்பிக்கையோடு விடாப்பிடியாக போராடினார். முடிவில் உலகப்புகழ்பெற்ற நாடக ஆசிரியரானார், இலக்கியத்தில் நோபல் பரிசும் பெற்றார். இந்த வெற்றி அவருக்கு உடனே கிடைத்து விடவில்லை. பல நாவல்கள் தோல்வியடைந்தன. சோதனைகளையும், வேதனைகளையும், தோல்விகளையும் அடுத்தடுத்து சந்தித்து, முடிவில் வெற்றியும் பெற்றார். ***"ஒருமுறை கிடைத்த வாழ்க்கையை வீணாக்க மாட்டேன்"*** என்ற அவருடைய மனவுறுதியிலிருந்து வெளிப்பட்ட வார்த்தைகள் அவரை வெற்றிப் பாதையில் இழுத்துச் சென்றது.

அறிவியலறிஞர்களும், விஞ்ஞானிகளும் கூட அப்படித்தான். ஆண்டாண்டு காலமாக முயற்சிகள் எடுத்து முடிவில் தங்களுடைய கண்டுபிடிப்புகளை உலகத்துக்குத் தருகிறார்கள். அதற்குள்ளாக அவர்களின் நாடிநரம்பெல்லாம் ஒடுங்கி, வயதாகியும் போய்விடுகிறது. "விஞ்ஞானிகளுக்கெல்லாம் விஞ்ஞானி" என்று புகழ்பெற்றவர் ஆல்பர்ட் ஐன்ஸ்டின். சார்பியல் கோட்பாட்டை விஞ்ஞான உலகத்துக்குத் தந்தவர். இது இறவா தத்துவம் என்று அழைக்கப்படுகிறது. இவருடைய **"E=mc2" (Where "E" is the energy, "m" is the particle mass, and "c" is the speed of light)** என்பது விஞ்ஞானிகளின் உயிர்மூச்சானது. ஐன்ஸ்டின் எதைச் சொன்னாலும் அது பத்திரிக்கைகளில் தலைப்பு செய்தியாக வந்தது.

இஸ்ரேல் நாட்டின் ஜனாதிபதி பதவி இவரைத் தேடி வந்தது. இவருடைய சார்பியல் தத்துவத்தின் அடிப்படையில் உருவாக்கப்பட்ட அணுகுண்டுகள் வீசப்பட்டு ஹீரோஷிமாவும், நாகசாகியும் அழிந்தபோது... அன்று முழுவதும் அவர் கையில் முகத்தை புதைத்துக் கொண்டு விம்மி விம்மி அழுதாராம்!

நான்கு வயதில் தன் ஆராய்ச்சிகளைத் தொடங்கி சாகும் வரையிலும் மனுக்குலத்தின் வாழ்க்கைக்கு ஆதாரங்களாகிய பல அரிய கண்டுபிடிப்புகளுக்கு விதை போட்ட இவர் 1955ஆம் ஆண்டு அமெரிக்காவில் இறந்துபோனார். புகழின் உச்சநிலையில் இருந்த ஐன்ஸ்டினிடம் "உங்களுக்கு எதைக் கண்டுபிடிப்பதில் ஆர்வம் அதிகம்?" என்ற கேள்வி கேட்கப்பட்டது. அதற்கு அவர் "கடவுள் இந்த உலகை எப்படி படைத்தார்?" இதை எப்படியும் கண்டுபிடிக்க வேண்டும் என்றார்!

கடைசி வரையிலும் அவரால் அதைக் கண்டுபிடிக்க முடியாமல் போனது. காரணம் அவருக்கு தேவனைப் பற்றின வெளிப்பாடு கிடைக்காமல் போனதே காரணம். ஆனால் ஆவிக்குரிய ரீதியில் **(Supernatural)** வேதத்தை ஆராய்ச்சி செய்யும் நமக்கோ தேவனிடமிருந்து உடனுக்குடன் வெளிப்பாடுகள் கிடைக்கிறது. ஏனென்றால் நாம் மூளையறிவை சார்ந்திருப்பதில்லை, நம் ஆராய்ச்சிகள் மூளையறிவுக்குட்பட்டதும் இல்லை. அதையும் தாண்டி மூளையையும் மூளையறிவையும் வடிவமைத்த தேவனை சார்ந்திருக்கிறோம். நமக்குள் இருக்கிற ஆவியின்படி (பரிசுத்தாவியானவரின் நடத்துதலின்படி) வசனங்களை ஆராய்கிறோம். அதனால் நமக்கு உலகளவில் பெயர் பெற்ற விஞ்ஞானிகள், சிந்தனையாளர்களைவிட அதிகப்படியான ... பரிபூரண நிச்சயமான வெளிப்பாடுகளும், பதிலும் கிடைக்கின்றன. கடவுள் இந்த உலகத்தை எப்படிப் படைத்தார் என்ற கேள்விக்கும் என்னால் உடனுக்குடன் பதில் சொல்ல முடிகிறது. அண்டசராசரத்தையும் **(Universe)** பூமியையும் தேவன் தன் வார்த்தையினால் படைத்தார். இதைக் கண்டுபிடிக்க நான் பைசா எதுவும் செலவழிக்கவில்லை. ஆராய்ச்சிக்கூடத்தில் ஆண்டாண்டு காலங்களாக உறங்காமல் தூங்காமல் விழித்திருக்கவும் இல்லை.

## *மாயத்தோற்றத்தில் சிக்கிய உள்ளான மனிதன்:*

இதில் நாம் தெரிந்து கொள்ள வேண்டிய விஷயம் ஒன்று இருக்கிறது. நாம் ஒரு தினசரி செய்தித்தாளையோ, ஒரு வாராந்திர பத்திரிக்கையையோ வாசிப்பதற்கும் வேதத்தை வாசிப்பதற்கும் நிறையவே வித்தியாசம் உண்டு. அப்படியிப்படிப்பட்ட வித்தியாசமல்ல அது, மலைக்கும் பள்ளத்தாக்குக்கும் உள்ள வித்தியாசம் அது. வானத்திற்கும் பூமிக்குமுள்ள வித்தியாசம் அது. நாம் ஒரு செய்தியேட்டை வாசிக்கும்போது நம்முடைய மாம்சீக கண்களை உபயோகிக்கிறோம். ஆனால் வேதத்தை வாசிக்கும்போது நம் சரீரத்தில் இருக்கிற மாம்ச கண்களினால் வாசிக்க முடியாது! இதென்ன புது கதை? வழக்கமாக **(usual)** அப்படித்தானே வாசிக்கிறோம்? இப்படித்தான் நாம் எல்லோரும் நினைத்து நிறையவே ஏமாந்து போய்விட்டோம்! வேதத்தை வாசிக்க சாதாரண கண்களே போதுமென்றால் ...

*"உமது வேதத்திலுள்ள அதிசயங்களை நான் பார்க்கும்படிக்கு, என் கண்களைத் திறந்தருளும். சங். 119:18"* என்று தாவீது ஏன் ஜெபித்தார்? *"தாம் (பிதாவாகிய தேவன்) கிறிஸ்துவை மரித்தோரி—ருந்து எழுப்பி, அவரிடத்தில் நடப்பித்த தமது பலத்த சத்துவத்தின் வல்லமைப்படியே விசுவாசிக்கிறவர்களாகிய நம்மிடத்திலே காண்பிக்கும் தம்முடைய வல்லமையின் மகா மேன்மையான மகத்துவம் இன்னதென்றும், நீங்கள் அறியும்படிக்கு, அவர் உங்களுக்கு பிரகாசமுள்ள மனக்கண்களைக் கொடுக்க வேண்டுமென்று வேண்டிக்கொள்ளுகிறேன். எபே. 1:19"* என்று பவுல் ஜெபிக்க வேண்டியதில்லையே?

நாம் ஒரு புத்தகத்தை வாசிக்கும்போது நம்முடைய கண்கள் அல்ல, நம் மனது தான் (மூளை – சிந்தனைப் பகுதி) அதை வாசிக்கிறது என்பது ஒரு அறிவியல் உண்மை! நாம் நம்முடைய மூளையினால் பார்க்கிறோம்; கண்களினால் அல்ல என்று சொல்கிறார்கள் உடலியலாளர்கள்! கீழே வரும் படத்தைக் கவனியுங்கள்:



இதில் அகலத்தைவிட உயரம் அதிகமாயிருப்பதாகத் தோன்றுகிறது இல்லையா? இதை ஒளியியல் மாயத் தோற்றம் என்று கூறுகிறார்கள். இதற்குக் காரணம் நாம் இந்த படத்தை பார்த்து உயரத்தை மதிப்பிடும்போது நமது அடிமனத்தில் கருப்பு கூம்புப் பகுதிகளுக்கு இடையிடையே வருகிற வெள்ளையான இடைவெளிகளையும் கூட்டிக் கொள்ளுகிறோம். அதனால்தான் அகலமும், நீளமும் ஒரே அளவுடையதாக இருந்தாலும்; உயரம் அதிகமாக இருப்பதாகத் தோன்றுகிறது.




கீழே வரும் இந்த படத்தையும் பார்ப்போம்:

எந்த நீள்வட்டம் பெரியது? கீழே இருப்பதா, அல்லது மேலே உட்புறமாக இருப்பதா? கீழே இருப்பதுதான் மேலே உள்ளதைவிட பெரிதாகத் தோன்றுகிறது இல்லையா? உண்மையில் இரண்டுமே ஒரே அளவுடையவைகள்தான். வெளியே சுற்றியிருக்கும் பெரிய நீள்வட்டத்தினால்தான் மேலே உள்ளது கீழே உள்ளதைவிட சிறியதாகத் தோன்றுகிறது. வாளியின் இரண்டு பக்கங்களிலும் வரும் கோடுகள் மேலே போகப் போக விரிந்து கொண்டே (அகலம் அதிகமாவதால்) போவதால் நம்மையறியாமல் கோடுகளின் அதிகப்படியான அகலத்தை கீழே இருக்கும் நீள்வட்டத்தின் விட்டமாக மனதில் வரைந்துக் கொள்ளுகிறோம். இங்கே என்ன நடக்கிறது? நம் கண்ணே நம்மை ஏமாற்றுகிறதா? அப்படிச் சொல்ல முடியாது. நமது புலன்கள் நம்மை ஏமாற்றுவதில்லை. காரணம் நம் புலன்கள் (கண், காது, மூக்கு, ) எப்போதுமே சரியான தீர்ப்பை கொடுக்கிறது என்பதனால் அல்ல, அவைகள் எந்த தீர்ப்புமே கொடுப்பதில்லை என்பதே உண்மை!

அப்படியென்றால் நம்மை ஏமாற்றுவது எது? எது நாம் பார்க்கும் தோற்றத்தைப் பற்றி ஒரு முடிவெடுக்க வைக்கிறதோ அதுதான். அதாவது தீர்ப்பளிப்பது நம்முடைய மூளைதான் என்று பார்க்கிறோம். நம்முடைய மூளை எதைத் தீர்ப்பிடுகிறதோ, அதை வெளியே கொண்டுவரும் **channel** ஆக மாத்திரமே கண்கள் செயல்படுகின்றன. நம் கண்கள் மாத்திரமல்ல, நம்முடைய சரீரத்தில் உள்ள எல்லா புலன்களுமே மூளையின் தீர்ப்பைதான் வெளிப்படுத்துகின்றன. மூளையின் உதவியின்றி தானாகவே எதையும் தீர்ப்பிடும் சக்தி நம்முடைய கண்களுக்கு கிடையாது.

இதைப் போலத்தான் நாம் வேதத்தை வாசிக்கும்போதும் ஒரு காரியம் நடக்கிறது. உண்மையில் நாம், கண்களினால் காணமுடியாத ஆவி மனிதர்கள் தான். நாம் கண்களினால் காண்பது அந்த ஆவிமனிதன் தங்கியிருக்கிற கூடாரத்தைத் தான் (சரீரம்) என்பதைப் பற்றி நிறைய பார்த்துவிட்டோம். இப்போது இன்னும் கொஞ்சம் முன்னேறிப் போவோம். நம்முடைய சரீரத்தில் கண்கள் இருப்பதைப் போலவே, நமக்கு உள்ளிருக்கிற ஆவி மனிதனுக்கும் கண்கள் உண்டு. அதைத்தான் பிரகாசமுள்ள மனக்கண்கள் என்றும் இருதயத்தின் கண்கள் என்றும் வேதம் அழைக்கிறது. அந்த உள்ளான மனிதனுடைய கண்களை உபயோகித்து வாசிப்பதற்கேற்றபடிதான் வேதம் (வேத வசனங்கள் – வார்த்தைகள்) எழுதப்பட்டுள்ளன. இந்த ஆவிக்குரிய கண்களை உபயோகிக்காமலும் வேதத்தை வாசிக்கலாம் தான், ஆனால் எதுவும் புரியாது! இதுவரையிலும் தினமும் வேதத்தை வாசித்தும் எதுவும் விளங்காமல் (புரியாமல்) போனதற்குக் காரணம் அது தான்!

அப்படியானால் நம் உள்ளான மனிதனுடைய கண்ணுக்கு என்னவாயிற்று? ஏன் அவைகளால் பார்க்க முடியாமல் போனது? வசனத்தைக் குறித்த கேள்விக்கான பதில் வசனத்திலிருந்தே வருகிறது, கவனியுங்கள்: *“தேவனுடைய சாயலாயிருக்கிற கிறிஸ்துவின் மகிமையான சுவிசேஷத்தின் ஒளி, அவிசுவாசிகளாகிய அவர்களுக்கு பிரகாசமாயிராதபடிக்கு, இப்பிரபஞ்சத்தின் தேவனானவன் அவர்களுடைய மனதைக் குருடாக்கினான். 2 கொரி. 4:4.”* புரியும்படி சொல்கிறேன்: **“இயேசுவினுடைய சிலுவைப்பாடுகளினால் நமக்கு கிடைத்திருக்கும் மகிமையான வாழ்வைக்குறித்த விளக்கத்தைத் தரும் நற்செய்திகளடங்கிய தேவனுடைய வார்த்தைகளை சபை விசுவாசிகள் வாசித்து புரிந்து கொள்ளக்கூடாது என்பதற்காக; சாத்தான் அவர்களுடைய உள்ளான மனிதனுடைய ஆவிக்குரிய கண்களை குருடாக்கி விட்டான்”** என்பதே! இன்னும் **Sharp** ஆக சொல்கிறேன்: **“கிறிஸ்து சிலுவையில் ஏன் பாடுபட்டார் என்ற இரகசியத்தை நாம் கண்டுபிடித்துவிடக்கூடாது என்பதற்காக; சாத்தான் அவர்களின் உள்ளான மனிதனின் கண்களை பார்க்கமுடியாதபடி செய்துவிட்டான்”** என்பதே! இரத்தினச் சுருக்கமாக சொன்னால்: **“சிலுவையில் என்ன நடந்தது என்பதையே மறைத்துவிட்டான்”**! என்பதே. ஆனால் நம் சரீர கண்கள் நன்றாக பார்க்கக் கூடிய நிலையில்தான் இருக்கிறது; சாத்தான் அவற்றை எதுவும் செய்யவில்லை. ஏனென்றால் அவற்றை குருடாக்க வேண்டிய அவசியமே இல்லை, ஏனென்றால் சரீர கண்களை உபயோகித்து வேதத்தை வாசித்தாலும் அவர்களுக்கு ஒன்றும் புரியப்போவதில்லையே! அதனால் வாசித்துவிட்டுப் போகட்டும் என்று விட்டுவிட்டான்!

சிலர் பைபிளை 10 முறை வாசித்து முடித்துவிட்டேன், 50 முறை முழுவதுமாக முடித்திருக்கிறேன் என்று மார்தட்டிக் கொள்கிறார்கள். அதைப் பற்றியெல்லாம் சாத்தானுக்கு கவலையில்லை. அவர்கள் 1000 முறைகள் படித்தால் தான் என்ன? உள்மனிதனின் கண்கள் திறக்காத வரையில் அவர்களுக்கு எதுவுமே புரியப்போவதில்லை. புலனறிவினால் (மூளையறிவினால் – கண்களின் மூலமாக மூளைக்குச் செல்லும் வேத எழுத்துக்களை மூளை கிரகித்து தீர்ப்பு செய்வதை!) அல்ல, நம்முடைய ஆவியறிவினாலேயே வேதத்தை தியானிக்க முடியும் என்று பார்க்கிறோம்.

வேதத்தை வாசிக்கும் போது நம்முடைய சரீரத்திலிருக்கிற கண்களினால் அல்ல, நமக்குள்ளே இருக்கிற ஆவிமனிதனுடைய (inner man) கண்களினாலேயே வாசிக்கிறோம். நம்முடைய ஆவிக்குரிய மனிதன் வாசித்து வெளிப்படுத்துவதை வெளியே கொண்டுவரும் channel ஆக மட்டுமே சரீர கண்கள் இருக்கின்றன. நம்முடைய உள்ளான மனிதன் எதையும் வெளியே கொண்டுவராவிட்டால்; channel செயலற்றதாக இருக்கும். முதலில் நம் உள்ளான மனிதன் பார்வையடைய வேண்டும் என்று பவுல் ஜெபித்ததைப் போல ஜெபிப்போம். வெறும் சரீர கண்களால் பைபிளை வாசித்து விட்டு ஒண்ணுமே புரியவில்லை என்று குறை சொல்லக்கூடாது. நம்முடைய சரீரம் வெறும் கூடாரம் மாத்திரம்தான். அதிலிருக்கும் ஐம்புலன்களை உபயோகித்து ஆவிக்குரிய காரியங்களை கிரகிக்க (absorb) முடியாது என்பதை நினைவில் நிறுத்துவோம்.

ஆவிக்குரிய கண்கள் குருடாக்கப்பட்டிருந்த முன்னாட்களில் நம் சரீர கண்களினால் வேதத்தை வாசித்து; அதைக் கிரகித்து மூளை எதைத் தீர்ப்பிடுகிறதோ அதையே சரியென்று நம்பிக்கொண்டிருந்தோம். வேதத்தை திரும்பத்திரும்ப வாசித்து இப்படிப்பட்ட மாயத்தோற்றங்களால் நம்மை நாமே ஏமாற்றிக்கொண்டு வாழ்ந்துக்கொண்டிருந்தோம். இப்போதோ ... ஆவிமனிதனின் கண்கள் திறக்கப்பட்டு விட்டதால் (பிரகாசமுள்ள மனக்கண்கள்) வேதத்தை வாசிக்கும்போது புரிகிறது! புரிவதினால் தான் இந்த புத்தகத்தை வாசித்துக்கொண்டிருக்கிறீர்கள்; இல்லாவிட்டால் முதல் பக்கத்தோடு மூடியிருப்பீர்கள்!

பிரகாசமுள்ள மனக்கண்களினால் வேதத்தை வாசித்து எழுதப்படும் வேதவிளக்க புத்தகங்களைப் படித்து விளங்கிக்கொள்வதற்கும் பிரகாசமுள்ள மனக்கண்கள் தேவை. பிரகாசமுள்ள மனக்கண்கள் இல்லாமல் வேதத்தை வெறும் மூளையறிவினால் மாத்திரம் வாசித்து எழுதப்படும் வேத விளக்க நூல்கள் ஆயிரக்கணக்கில் சபையைச் சுற்றி வருகின்றன. அவற்றைப் படிக்க பிரகாசமுள்ள மனக்கண்கள் தேவையில்லை, அதற்கு வெறும் சரீர கண்களே போதும்! நீங்களும் நானும் கூட அப்படிப்பட்ட புத்தகங்களை நூற்றுக் கணக்கில் வாசித்துவிட்டுத்தான் வந்திருக்கிறோம். ஆனால் அவற்றையெல்லாம் நான் குறை சொல்வதில்லை. என்னுடைய தேடுதல் பயணத்திற்கு அவைகள் பாதை போட்டன என்பதை மறுக்க முடியாது. என்னுடைய பூர்வ பாதைகளை கண்டுபிடிக்க அவைகள் எனக்கு உதவி செய்தன. சரியான பாதைக்கு வந்துவிட்டேன் தான்; ஆனால் சரியான பாதைக்கு நான் வர, எனக்கு உதவி செய்ததே நான் நடந்து வந்த தவறான பாதைகள் தான்! அதனால் நன்றியறிதலுள்ளவளாய் இருந்து அவர்களும் பிரகாசமுள்ள மனக்கண்களை பெற்றுக் கொள்ள வேண்டும் என்று ஜெபிக்கிறேன்.

## நடந்தது என்ன?:

புதிய உடன்படிக்கையின் மூலமாக நமக்குக் கொடுக்கப்பட்டிருக்கும் பாக்கியங்களைப் பற்றி பார்த்து வருகிறோம். அதில் ஒரு முக்கியமான காரியத்தை இப்போது பார்ப்போம். இக்கால சபையில் பெரும்பாலும் (99%) தோற்றுப்போன பழைய உடன்படிக்கையின் அடிப்படையிலேயே ஊழியங்கள் நடக்கின்றன என்பது தெரிந்த ஒன்று தான். பிரசங்கங்களை கேள்விக்குறியோடு முடித்து விட்டு பதில் தெரியாமலேயே பிரசங்க பீடத்தை விட்டு இறங்க வேண்டிய பரிதாப சூழ்நிலையில் சபை போதகர்களே இருக்கும்போது; வருஷக்கணக்கில் பிரசங்கங்களைக் கேட்டுக் கொண்டிருப்பவர்களின் நிலை என்ன?

நாம் நல்லவர்களாக வாழ்ந்தால் தான், நற்கிரியைகள் செய்தால் தான் பரலோகத்திற்குப் போக முடியும் என்றும்; இல்லாவிட்டால் நரகத்திற்குப் போக வேண்டியதாயிருக்கும் என்கிற ரீதியிலான பிரசங்கங்களைதான் என் நினைவு தெரிந்த நாட்களிலிருந்து சபைகளில் கேட்டு வருகிறேன், நீங்களும் அதைத்தான் கேட்டு வந்திருப்பீர்கள். அது தானே சரி, அதில் என்ன தவறு இருக்க முடியும் என்று தோன்றலாம். ஆனால் இப்படிப்பட்ட போதனைகள் வேதத்தின் அடிப்படையில் சரியானது தானா? அப்படி இல்லையென்றால் எதனடிப்படையில் இப்படிப்பட்ட உபதேசங்கள் சபைக்குள் வந்தன?

தேவனை அறியாத உலக மனிதர்கள் புண்ணியங்கள், தர்ம காரியங்கள் செய்தால் தான் சொர்க்கத்துக்குப் போக முடியும் என்று சொல்லுகிறார்கள். அதனால் பல புண்ணிய ஸ்தலங்களுக்குப் போய் பாவத்தை தொலைக்க முயற்சிக்கிறார்கள். அந்த முயற்சியில் தாங்கள் ஜெயித்து விட்டதாக நினைத்துக் கொண்டு சந்தோஷமாக திரும்புகிறார்கள். பரிதாபம், பாவம் அதே அளவில் இன்னும்

அவர்கள் முதுகில் தொங்கியபடிதான் இருக்கிறது! தங்களுடைய பாவங்களுக்காக தேவனே இந்த பூமியில் வந்து பிறந்து, மரித்து பரிகாரம் செய்து விட்டார் என்ற உண்மையை உணராமல் இருக்கிறார்கள். புண்ணியங்கள் செய்வதினாலும் பரிகாரங்கள் என்ற பெயரில் என்னென்னவோ செய்வதினாலும் (சர்க்கஸ் காட்டுவதினாலும்) எந்தவிதமான பிரயோஜனமும் இல்லையென்பதை அறியாமல் இருக்கிறார்கள். சுய கட்டுப்பாட்டுடன் பாவங்கள் செய்யாமல் சன்மார்க்க நெறியுடன் வாழ்ந்து, நல்லவன் என்று பெயரெடுத்து, நற்காரியங்கள் செய்வதினாலும் தான் சொர்க்கவாசல் திறக்கிறது என்று நினைத்துக் கொண்டிருக்கிறார்கள். ஒரு சிலர் வருடத்தில் குறிப்பிட்ட நாளன்று குறிப்பிட்ட கடவுளைத் தரிசித்தால் சொர்க்கவாசல் திறக்கிறது என்கிறார்கள். இன்னும் ஒரு சிலர் குறிப்பிட்ட சில நாட்களில் மரித்துப் போனால் சொர்க்கவாசல் திறக்கிறது என்கிறார்கள்.

சரி பரவாயில்லை, அவர்கள் உண்மையான தேவனை அறியாதவர்கள், இயேசுவே பாவங்களிலிருந்து இரட்சிக்கிறவர் என்ற உண்மை தெரியாதவர்கள். அதுமட்டுமல்ல அவர்கள் சாத்தானின் ஆளுகைக்குள்ளாக இருப்பவர்கள். அதனால் அவர்களின் சிந்தனையோட்டம் இவ்விதமாக இருக்கிறது, போனால் போகிறதென்று அவர்களை விட்டு விடலாம். ஆனால் உண்மை தேவனை அறிந்து, இயேசுவை இரட்சகராக ஏற்றுக்கொண்டு அவருடைய ஆளுகைக்குள் இருக்கிற தேவ பிள்ளைகளும் இப்படிப்பட்ட சிந்தனையோட்டத்திலேயே இருப்பார்களானால்...

இருக்கிறார்கள், அதில் தான் பிரச்சனையே ஆரம்பிக்கிறது, பிரச்சனையாகவே முடிந்தும் போகிறது! அப்படிப் பார்த்தால் இரட்சிக்கப்பட்ட தேவ பிள்ளைகளுக்கும் தேவனை அறியாத உலக மக்களுக்கும் எந்தவிதமான வித்தியாசமும் இல்லாமல் போய் விடுகிறதே? பரலோகம் சேர இந்த இருதரப்பினருடைய முயற்சிகளும் ஒரே மாதிரியாக இருக்குமானால் நாம் இரட்சிக்கப்பட்டு பிரயோஜனமென்ன? இயேசு மரித்தது வீணாக இருக்குமல்லவா?

நாம் இரட்சிக்கப்படும்போது என்ன நடக்கிறது என்பதை அறிந்து கொண்டோமானால் இந்தக் கேள்விகளுக்கெல்லாம் பதில் கிடைத்துவிடும். *“அக்கிரமங்களில் மரித்தவர்களாயிருந்த நம்மைக் கிறிஸ்துவுடனேகூட உயிர்ப்பித்தார்; கிருபையினாலே இரட்சிக்கப்பட்டீர்கள். கிருபையினாலே விசுவாசத்தைக்கொண்டு இரட்சிக்கப்பட்டீர்கள்; இது உங்களால் உண்டானதல்ல; இது தேவனுடைய ஈவு; ஒருவரும் பெருமைபாராட்டாதபடிக்கு இது கிரியைகளினால் உண்டானதல்ல; எபே. 2:5, 8, 9”*

ஒரு சுவிசேஷக்கூட்டத்தில் ஒரு சுவிசேஷகரின் பிரசங்கத்தைக் கேட்டு இரட்சிக்கப்படுகிறோம். இது எல்லோருக்குமே உள்ள பொதுவான அனுபவம் தான். இந்த இரட்சிப்பு விஷயத்தில் நம்முடைய பங்களிப்பு ஏதாவது இருக்கிறதா? நம்முடைய பங்கு கொஞ்சம் இருப்பதாகத்தான் இது வரை எல்லோரும் நினைத்துக் கொண்டிருந்தோம். இந்த நிமிடம் முதல் அப்படிப்பட்ட நினைப்பை மாற்றிக் கொள்ளுங்கள். நம்முடைய பங்களிப்பு எதுவுமே இல்லையென்பதும்; இங்கே 100% செயல்படுவது தேவன் மாத்திரமே என்பதையும் திட்டவட்டமாக அறிந்து கொள்ள வேண்டும். இது தெரியாவிட்டால், இந்த சத்தியத்தின் மீது கட்டப்பட்டிருக்கிற நம்முடைய இரட்சிப்பு மற்றும் அதை சார்ந்த எல்லா விஷயங்களுமே ஆட்டம் கண்டு விடும்!

நாம் இரட்சிக்கப்படுவதற்கு முன்னதாக உலக ஜனங்களைப் போலவே தான் இருந்தோம். அக்கிரமங்களினாலும் பாவங்களினாலும் மரித்துப் போய் இருந்தோம் என்று வேதம் சொல்லுகிறது. அதாவது நம்முடைய உள்ளான மனிதன் **(inner man - inward man)** செத்துப்போன நிலைமையில் தான் இருந்தான். செத்துப்போன பிரேதத்தை சுமந்து கொண்டு நடைபிணமாக நம்முடைய சரீரம் பூமியில் நடமாடிக்கொண்டிருந்தது! செத்துப்போன மனிதனால் விசுவாசிக்க முடியுமா? நிச்சயமாக முடியாது! விசுவாசிக்க முடியாவிட்டால் எப்படி இரட்சிக்கப்பட்டோம்? விசுவாசத்தினாலே கிருபையைக் கொண்டு இரட்சிக்கப்பட்டீர்கள் என்று வசனம் சொல்லுகிறதே? அப்படியானால் என்ன நடந்தது?

நாம் விசுவாசிக்க ஆரம்பிப்பதற்கு முன்னதாகவே நம்மில் வேறெதுவோ ஒன்று நடக்கிறது, அது என்ன? அதாவது செத்துப்போயிருந்த நம்மை உயிரோடு எழுப்புகிறார் என்பதை பார்க்கிறோம்! அடுத்த கட்டமாகத்தான் விசுவாசத்தால் நாம் இரட்சிப்படையும்படி செய்கிறார். அது சரி, இந்த விசுவாசத்திலாவது நம் பங்கு ஏதாவது இருக்கிறதாவென்றால்; அதுவும் கிடையாது! சுவிசேஷ பிரசங்கியாரின் பிரசங்கத்தைக் கேட்டு நாம் இரட்சிக்கப்படுவதற்கேதுவாக அவரே (இயேசுவே) விசுவாசத்தை நமக்குள் துவங்கியும் வைக்கிறார் என்று பார்க்கிறோம்! *(எபி. 12:1)* நம்மில் இருக்கிற எந்த காரியமும் தேவனை செயல்பட வைக்கவில்லை. அன்பே உருவான தேவன், இரக்கங்களில் ஐசுவரியமுள்ளவராயிருக்கிற நம் தேவன்; நம்மேல் வைத்த மகா அன்பினாலே இந்தக் காரியங்களையெல்லாம் அவராகவே முன் வந்து செய்கிறார்.

நான் இரட்சிக்கப்பட்டு விட்டேன் என்று சொல்லி பெருமைப் பட்டுக் கொள்ளவும் முடியாது.

ஏனென்றால் இதில் தான் நம் பங்களிப்பு எதுவுமே இல்லையே? *(எபே. 2:9)* அதனால் இரட்சிப்பின் மூலம் நம்முடைய ஜென்ப சுபாவங்களில் ஒன்றான பெருமையும் ஒழிக்கப்படுகிறது. தேவனுடைய கிருபையினால்தான் விசுவாசத்தைக் கொண்டு இரட்சிக்கப்படுகிறோம் **(through faith)**. இங்கே விசுவாசம் **channel** ஆக, ஒரு கருவியாக உபயோகப்படுத்தப்படுகிறது. நாம் விசுவாசித்ததினால் தான் இரட்சிக்கப்பட்டோம் என்று தவறாக நினைத்து விசுவாசத்தை ஒரு கிரியையாக மாற்றிவிடக்கூடாது!

அடுத்தபடியாக இரட்சிக்கப்பட்ட பின்பு நம்மிடத்தில் மாற்றங்கள் தெரிய ஆரம்பிக்கின்றன, நற்கிரியைகள் செய்ய ஆரம்பிக்கின்றோம். இந்த நற்கிரியைகளையாவது நாமாகத்தான் செய்கிறோமா என்றால் அதுவும் இல்லை! *"நற்கிரியைகளைச் செய்கிறதற்கு நாம் கிறிஸ்து இயேசுவுக்குள் சிருஷ்டிக்கப்பட்டு தேவனுடைய செய்கையாயிருக்கிறோம்; அவைகளில் நாம் நடக்கும்படி அவர் முன்னதாக அவைகளை ஆயத்தம்பண்ணியிருக்கிறார்." எபே.2:10.(!)*

ஆவியின் கனிகள்? ஊகூம்! அதிலும் நம் பங்கு **portion** எதுவுமில்லை. *"நானே (இயேசுவே) திராட்சச்செடி, நீங்கள் கொடிகள். ஒருவன் என்னிலும் நான் அவனிலும் நிலைத்திருந்தால், அவன் மிகுந்த கனிகளைக் கொடுப்பான்; என்னையல்லாமல் உங்களால் ஒன்றும் செய்யக்கூடாது. யோவான். 15:5."* எப்படியாவது நானும் இரட்சிக்கப்பட்டுவிட வேண்டும் என்று தீர்மானம் எடுத்து; அதனால் இரட்சிப்புக்குள்ளாக கடந்து போக முடியுமாவென்றால்; அதுவும் முடியாது. செத்துக் கிடக்கும் மனிதனால் தீர்மானம் **(decision)** எதுவும் எடுக்க முடியாது! தீர்மானத்தையும் தேவன்தான் எடுக்கிறார்! *"... அவருடைய தீர்மானத்தின்படி அழைக்கப்பட்டவர்களாய் ... ரோமர். 8:28."*

ஆக, இரட்சிப்பு 100% தேவனுடைய செயலே தவிர, நம்முடையதல்லவென்று தீர்க்கிறோம். இரட்சிப்பின் விஷயத்தில் 99% காரியங்களை, தானே செய்துவிட்டு; 1% ஐ மட்டுமாவது மனிதன் பொறுப்பில் விட்டுவைத்தாராவென்றால்; அதுவும் இல்லை. விழுந்து போன மனிதன் அந்த ஒரு சதவிகிதத்தை நிறைவேற்றி கிழிக்கப் போகிறேன் என்று சொல்லி; மீண்டுமாக எல்லாவற்றையும் குப்புற கவுத்துப் போட்டுவிடக்கூடாதே! தேவன் எவ்வளவு ஞானமாய் எல்லாவற்றையும் செய்தார் பாருங்கள்! *"கிறிஸ்துவுடனே கூடச் சிலுவையிலறையப்பட்டேன்; ஆயினும், பிழைத்திருக்கிறேன்; இனி நான் அல்ல, கிறிஸ்துவே எனக்குள் பிழைத்திருக்கிறார்; ... கலா. 2:20"*

1921ம் ஆண்டில் முதலாம் உலகப் போரில் ஜெர்மனி தோற்கடிக்கப்பட்டது. அதனால் பாதிக்கப்பட்ட நாடுகளுக்கு பல கோடி மார்க்குகள் உள்ள ஜெர்மானியப் பணமான தங்க நாணயங்களை இழப்பீடாக கொடுக்க வேண்டும் என்று உத்தரவு பிறந்தது. அப்போது ஜெர்மானிய வேதியியல் விஞ்ஞானியான பிரிட்ஜ்ஹேபர் என்பவர் தன் தாய்நாட்டுக்கு உதவ நினைத்தார். கடல் நீரிலிருந்து தங்கத்தை பிரித்தெடுக்கும் தனது யோசனையை அவர் தெரிவித்தார். ஆனால் அந்த யோசனையை செயல்படுத்த முயற்சித்த போதுதான் அது நடைமுறைபடுத்த சாத்தியமில்லாத ஒரு யோசனை என்பது புரிந்தது. காரணம், 1000 கிலோ தண்ணீரிலிருந்து வெறும் 0.004 மில்லி கிராம் தங்கத்தைத்தான் பிரித்தெடுக்க முடிந்தது! மிகவும் வருத்தத்துடன் தன் முயற்சியை கைவிட்டார் ஹேபர். இரட்சிப்பின் காரியத்தில் தங்களுடைய பகுதியும் இருக்கிறது என்று தவறாக நினைத்துக் கொண்டிருக்கும் தேவ பிள்ளைகளே, உங்களுடைய முயற்சிகளையும் நீங்கள் கைவிடும் நேரம் வந்துவிட்டது!

இரட்சிப்பின் விஷயத்தில் தேவன் செயல்படும் விதத்தைப் பார்க்கும் போது; விழுந்து போன மனுக்குலத்தை மீண்டுமாக எழுப்பி நிறுத்துவதில் அவர் காட்டும் தீவிரம் புரியும். மனிதகுலம் மீண்டுமாக எழும்பினால் தான் பூமியைக் குறித்ததான திட்டத்தை வெற்றியாக முடிக்க முடியும். திட்டம் வெற்றியாக முடிந்தால் அதனால் மனிதனுக்குத்தான் லாபம். ஏனென்றால் பூமியை மனிதனுக்காகவே உருவாக்கி, மனிதனுக்கேற்றபடி **design** பண்ணி, மனிதனிடம் கொடுத்தார் என்று பார்க்கிறோம். அதனால் மனிதனைக் கொண்டு தான் எடுத்த **assignment**-ஐ முடிக்க வேண்டும். அதற்கான தகுதியை மனிதன் இழந்து போனதால்; எல்லா விதத்திலும் தகுதியான தன்னுடைய குமாரன் இயேசுவைக் கொண்டு தேவன் செயல்பட்டு வருகிறார்.

சிலுவையின் மூலமாக இயேசுவின் தகுதியை நம்முடைய தகுதியாக மாற்றி; அவரையே நமக்குள்ளாக வைத்து வேலை செய்து வருகிறார். அதனால் **project** தோற்றுப் போய் விடுமோ என்ற பயமே தேவையில்லை. தேவனுடைய திட்டத்தைச் சரிவர புரிந்து கொண்ட ஒரே ஒரு நபர் தேவனுக்குப் போதும்! அவனை அல்லது அவளைக் கொண்டு தேவன் தன்னுடைய திட்டத்தை வெற்றிகரமாக முடித்துவிடுவார். அந்த ஒரேயொரு நபர் ஏன் நீங்களாக இருக்கக்கூடாது? அதெப்படி, என்னால் என்ன செய்துவிட முடியும்? இந்த பேச்சு தானே வேணாங்கிறது!

*"... விசுவாசிக்கிறவனுக்கு எல்லாம் கூடும் ... மாற். 9:23"*

*"... என்னை (இயேசுவை) விசுவாசிக்கிறவன் நான் செய்கிற கிரியைகளை தானும் செய்வான், இவைகளைப்பார்க்கிலும் பெரிய கிரியைகளையும் செய்வான். யோவான். 14:12"*

*"... உங்களால் கூடாத காரியம் ஒன்றுமிராது என்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன். யோவான். 17:20"*

தேவனுக்குப் பதிலாக இப்போது நாம் பூமியில் வைக்கப்பட்டிருக்கிறோம். அவருடைய வேலையைச் செய்வதற்காக அழைக்கப்பட்டிருக்கிறோம். நம்மால் முடியாமல் போனதால் நமக்குப் பதிலாக வேலை செய்து கொண்டிருக்கிறார் இயேசு! அவருக்கு உபயோகமாக இல்லாவிட்டால் பரவாயில்லை, உபத்திரவமாய் மாறாமல் இருக்கலாம் அல்லவா? தேவன் நம்மை எதுவுமே செய்யச் சொல்லவில்லை, சும்மாயிருக்கத்தான் சொல்கிறார்! (யாத். 14:14) ஆனால் இன்றைக்கு அது மட்டும் தான் தேவபிள்ளைகளால் முடிவதில்லை! சும்மா இருந்தால் தன்னை பொறுப்பில்லாதவன் என்று மற்றவர்கள் நினைத்துவிடுவார்களோ என்ற பயம்; அதனால் ஒன்று கிடக்க ஒன்றைச் செய்து கொண்டிருக்கிறார்கள்! தேவனுக்கே உதவி செய்ய கிளம்பி விடுகிறார்கள்! நீச்சல் தெரியாமல் ஆற்றில் மூழ்கிக் கொண்டிருக்கும் ஒருவனுக்கு உதவி செய்ய நினைக்கிறான் ஒருவன். ஆற்றில் குதித்து அவனைக் காப்பாற்றி, கரையை நோக்கி இழுத்துக் கொண்டு வருகிறான். தன்னை காப்பாற்றிக் கொண்டிருப்பவனுக்கு நீச்சல் தெரியாதவன் உதவி செய்ய முற்பட்டால் ... ! என்னவாகும் என்பது உங்களுக்கே தெரியும்! பிறகு தேவன் எங்களை கைவிட்டுவிட்டாரே என்று புலம்புகிறார்கள். நமக்கு நல்லதை மாத்திரமே செய்ய விரும்புகிற தேவனுக்கு கடைசியில் கெட்ட பெயர்!

தேவனுக்கு மகிமையைக் கொண்டுவர வேண்டிய அவருடைய பிள்ளைகள் அவரைக்குறித்த சரியான அறிவில்லாததினால்; அவருடைய நாமம் தூஷிக்கப்பட ஏதுவுண்டாக்கி விடுகிறார்கள். எழுதியிருக்கிறபடி, *(ஏசா. 52:5) தேவனுடைய நாமம் புறஜாதிகளுக்குள்ளே உங்கள் மூலமாய்த் தூஷிக்கப்படுகிறதே. ரோம. 2:24.* இரட்சிக்கப்பட்ட பின்பும் தேவபிள்ளைகள் பாவம் செய்வதற்கு (அதாவது இரகசியமாக) காரணம்; தேவனைக் குறித்த சரியான அறிவில்லாததினால்தான். தேவனை சரியாக புரிந்து வைத்திருப்போமானால் பாவம் செய்ய மாட்டோம் என்பது தான் புதிய உடன்படிக்கையின் நற்செய்தி! புரியாத புதிர்களுக்கு விடை கொடுக்கவே இயேசு வந்தார். நியாயப்பிரமாணத்தின் சட்டதிட்டங்களின்படி நடப்பதாலோ, சுய கட்டுப்பாடுகளினாலோ, தேவனை அறியாத புறமதஸ்தர்களின் சன்மார்க்க நெறிகளில் நடப்பதினாலோ பாவம் செய்யாமல் நம்மைக் காப்பாற்றிக் கொள்ள முயற்சிப்பது நடக்காத காரியம் என்பதையும் அனுபவ பூர்வமாக (**practical** ஆக) பார்த்து வருகிறோம். இதைப் பற்றி முந்தைய புத்தகங்களிலும் நான் எழுதியிருக்கிறேன்.

## குயில்கள் கூவும் காலமிது!:

ஆக, தேவனைக் குறித்து அதிகமதிகமாக அறிந்து கொள்ளுவோம். அவருடைய திட்டங்கள் வெற்றியாக முடிவதற்கு அவருடன் ஒத்துழைப்போம். சாத்தானுக்கு எதிராக ஒத்துழையாமை இயக்கம் நடத்துவோம்! அவனிடமிருந்து இந்த பூமியை பிடுங்குவோம்! நாம் ஒருவராக தனியாக நின்று கூட இந்தக் காரியத்தைச் செய்ய முடியும். ஏனென்றால் ஒருவராய் பெரிய காரியங்களை செய்கிறவருடைய சாயலில் படைக்கப்பட்ட அவருடைய பிள்ளைகள் நாம்! என்றாலும் எல்லோருக்கும் **chance** கொடுப்போம், **team** ஆக செயல்படுவோம். சொல்லப்போனால் பூமியில் வாழ்கிற ஒவ்வொரு மனிதனும் (ஒட்டுமொத்த மனுக்குலமும்) சேர்ந்து செயல்பட வேண்டிய **Team work** இது. ஆனால் தேவனை அறியாத ஜனங்களால் நம்முடன் ஒத்துழைக்க முடியாது; அதனால் அவர்களை விட்டுவிடுவோம். இரட்சிக்கப்பட்ட பிறகும் உள்ளான மனிதனின் ஆவிக்குரிய கண்கள் திறக்கப்படாததினால் (பிரகாசமான மனக்கண்கள் இல்லாததினால் – சாத்தானால் அவைகள் குருடாக்கப்பட்டதினால்) இன்னமும் சிலுவைக்கு முன்னதான பழைய உடன்படிக்கையின் அடிப்படையில் வாழ்க்கை நடத்தும் நியாயப்பிரமாணிக்கர்களாலும் நம்முடன் ஒத்துழைக்க முடியாது. அதனால் அவர்களையும் விட்டு விடுவோம்!

உள்ளான மனிதனின் கண்கள் திறக்கப்பட்டு, சிலுவையின் இரகசியங்களை அறிந்து கொண்டு, புதிய உடன்படிக்கையின் சத்தியத்திற்குள் காலடி எடுத்து வைத்திருப்பவர்களையும், சுயாதீன பிரமாணத்தின்படி விசுவாசித்து வாழ ஆரம்பித்திருப்பவர்களையும், விசுவாசத்தினால் ஒரு செழிப்புள்ள வாழ்க்கைக்குள் பிரவேசித்திருப்பவர்களையும், செழிப்பை உபயோகித்து தேவ திட்டத்தை நிறைவேற்ற ஆரம்பித்திருப்பவர் களையும் விட்டுவிடக்கூடாது!

**"கூவத்தெரிந்த குயில்கள் தான் கூவ வேண்டுமென்றால் காடே நிசப்தமாகிவிடும்!**

**அதனால் எல்லோரும் வாருங்கள் இயேசுவை அறிவிக்க!"**

எனக்கு மிகவும் பிடித்துப் போன இந்த கவிதை வரிகளை இப்போது மறுபரிசீலனை செய்கிறேன்.

இந்தக் கவிதை இயேசுவை அறிவிப்பதற்காக புறப்பட்டுப் போகிற சுவிசேஷகர்களுக்கு வேண்டுமானால் ஓரளவுக்கு பொருத்தமாக இருக்கலாம்; என்றாலும் முழுமையாக அல்ல. எப்படியென்றால், இயேசுவையே அறியாத ஒருவன் இன்னொருவனுக்கு எப்படி இயேசுவை அறிவிக்க முடியும்? சட்டியில் இல்லாததை கரண்டியில் எடுப்பதெப்படி? ஆனால் இரட்சிக்கப்பட்டவர்கள் இருக்கிற சபைக்குள் போய்; அவர்களின் கண்கள் திறக்கப்படத்தக்க ரீதியில் சத்தியத்தை அறிவிக்க வேண்டுமானால் ... அதற்கு இந்தக் கவிதை பொருத்தமாக வராது! அதனால் **"கூவத் தெரிந்த குயில்கள் மாத்திரம் வாருங்கள்; சத்தியத்தை அறிவிக்க!"** அப்படியானால் கூவத்தெரியாத குயில்களின் நிலைமை? அப்படியே அந்தக் குயில்களை சோகத்தில் மூழ்கடித்துவிட்டுப் போக நாங்கள் வரவில்லை.

**"கூவத் தெரியாத குயில்களே முதலில் கூவக் கற்றுக் கொள்ளுங்கள்,**

**பிறகு எங்களுடன் சேர்ந்து கொள்ளுங்கள். சேர்ந்து சத்தியத்தை அறிவிப்போம்!"**

## மனிதனின் கேள்விக்குறிகளுக்குள் சிக்கிக்கொண்ட தேவன்!:

தேவனுடைய குணாதிசயங்களை சாத்தானுடையதாக மாற்றி; சாத்தானுடைய குணாதிசயங்களை தேவனுக்குரியதாக சித்தரித்து ... இப்படியே ஆண்டாண்டு காலமாக செய்யப்பட்டு வருகிற பிரசங்கங்களினால் ஜனங்கள் ரொம்பவும் குழம்பிப் போய் இருக்கிறார்கள். தேவபிள்ளைகளே, உங்கள் குழப்பங்கள் முடியுங்காலமிது! தேவனைப் பற்றி சரியாக புரிந்து வைத்திருப்பது மிகமிக அவசியமாயிருக்கிறது. ஏனென்றால், தேவனைப் பற்றி எசகுபிசகாக புரிந்து வைத்திருப்பவன் தன்னைப் பற்றியும் அப்படித்தான் நினைத்துக் கொண்டிருப்பான். ஏனென்றால், நாம் அவரைப்போலிருக்கிறோம்!

நம்மால் தவறாக புரிந்து கொள்ளப்பட்ட தேவனிடம் நம்மால் சரியான ரீதியில் சேரவே முடியாது. ஒருமனம் **(Mutual understanding)** இல்லாத நண்பரிடம் நம்மால் மனசுவிட்டு பேசமுடியாமல் போவதைப் போலத்தான் இதுவும். தேவனை நினைக்கும்போதே மனதை இறுக்கமாக்கிக் கொண்டால்; பிறகு ஜெபம் ஜெபமாகவே இருக்காது. இப்படிப்பட்டவர்களின் ஜெபம் எப்படியிருக்குமென்றால்; மதம் சார்ந்த ஒரு காரியமாக, சடங்காக, சம்பிரதாயமாக, கேலிக்கூத்தாக, நடிப்பாகத்தான் இருக்கும்.

*"... நான் உபவாசத்தால் என் ஆத்துமாவை உபத்திரவப்படுத்தினேன்; என் ஜெபமும் என் மடியிலே திரும்ப வந்தது. சங். 35:13." "வேதத்தை கேளாதபடி தன் செவியை விலக்குகிறவனுடைய ஜெபமும் அருவருப்பானது. நீதி. 28:9."* இப்படிப்பட்ட அனுபவத்தினூடேதான் தேவனைத் தவறுதலாக புரிந்து கொண்ட தேவபிள்ளைகள் கடந்து போய்க் கொண்டிருக்கிறார்கள். *"... தேவன் அன்பாகவே இருக்கிறார். (1யோ. 4:8)"* என்று வேதம் சொல்லியிருக்க, அதற்கு நேர் எதிரிடையான ரீதியில் தேவனை புரிந்து கொண்டதினால்; பெரும்பான்மையான தேவபிள்ளைகளின் வாழ்க்கையே சோகக் கதையாகிப் போனது. சத்தியம் தெரிந்த சிறுபான்மையான தேவ பிள்ளைகள் பிழைத்துக் கொண்டார்கள். மனிதனின் விழுகைக்குப் பிறகு தான் (ஆதி. 3 ம் அதிகாரத்திற்குப் பிறகு) மனிதன் தேவனை தவறாக விளங்கிக் கொள்கிற இந்தப் பிரச்சனையே ஆரம்பமானது.

இந்தப் பிரச்சனைக்கு காரணமே உள்ளான மனிதனின் கண்கள் பிசாசினால் குருடாக்கப்பட்டது தான் காரணம். யாரோ சொல்லி, அல்லது வேறு ஏதோ புத்தகங்களில் வாசித்து தேவனைத் தவறாகப் புரிந்து கொண்டிருந்தார்களானால்; அதை விட்டுவிடலாம். ஆனால் தேவபிள்ளைகள் தேவனை இப்படி தவறாக புரிந்து கொள்வதற்கு வேதமே காரணமாகிப் போனது என்பதுதான் அதிர்ச்சியானது. மனிதன் கண்களால் காணக்கூடாத ரீதியில் படைக்கப்பட்ட ஒரு ஆவி என்று பார்த்தோம். வேதம் இந்த ஆவியை (மனிதனை) உள்ளான மனிதன் **(inward man, inner man)** என்று அழைக்கிறது. இந்த உள்ளான மனிதன் வாசித்து புரிந்து கொள்கிற வகையில்தான் வேதம் எழுதப்பட்டிருக்கிறது. ஏனென்றால் உள்ளான மனிதன்தான் உண்மையான மனிதன். நாம் கண்களால் காண்கின்ற சரீரம் மனிதன் அல்ல, அது மனிதன் தங்கியிருக்கிற கூடாரம் மாத்திரம் தான் என்று பார்த்து வருகிறோம். இதை நான் திரும்பத் திரும்பச் சொல்வதற்கு காரணம் இருக்கிறது. தான் கண்களால் பார்க்க முடியாத ஒரு ஆவி மனிதன் என்ற உண்மையை ஒவ்வொருவரும் இருதயத்திற்குள் பதியன்போட வேண்டியது மிக மிக அவசியமாயிருக்கிறது. ஏனென்றால் இந்த உண்மையை அஸ்திபாரமாகக் கொண்டு தான் விசுவாசத்தை இயக்க முடியும். விசுவாசப்பிரமாணத்தை புரிந்து கொண்டு அதை நடைமுறைப்படுத்தவும் முடியும். *"... எழுதினவைகளையே எழுதுவது எனக்கு வருத்தமல்ல, அது உங்களுக்கு நலமாயிருக்கும். **(it is safe, profitable, sure to be successful)** பிலி. 3:1"*

உள்ளான மனிதன் தன் ஆவிக்குரிய கண்களினால் வாசித்து புரிந்து கொள்ள வேண்டிய வேதத்தை வெறும் மாம்ச கண்களினால் வாசித்து; ஐம்புலன்களின் அறிவினால் புரிந்து கொள்ள முயற்சித்த போதுதான்

பிரச்சனை வந்தது. பிரகாசமுள்ள மனக்கண்கள் இல்லாமல், சரீரக்கண்களினால் வேதத்தை வாசித்து, வெறும் மூளையறிவில் தேவனை அறிந்து கொள்ள முயன்ற போது ... தேவன் புரியாத புதிராகிப் போனார், கேள்விக்குறியாகிப் போனார்! கேள்விக்குறியான தேவனிடம் பதிலைப் பெறுவதும் கேள்விக்குறியாகிப்போனது! நம் சரீரத்திலுள்ள ஐம்புலன்கள் தேவனை அறிந்து கொள்வதற்காக கொடுக்கப்படவில்லை. அவைகள் நம்முடைய பூமிக்குரிய கூடாரமாகிய சரீரத்தை இந்தப் பூமியின் மீது இயக்குவதற்காக கொடுக்கப்பட்டிருக்கிறது.

நம்முடைய தேவன் பிரமாணங்களின் அடிப்படையில் இயங்குகிற தேவன். பூமியையும் அதன் நிறைவையும் அப்படித்தான் இயங்க வைத்திருக்கிறார். விசுவாசம் என்பது ஒரு பிரமாணம் **(Law).** இந்த விசுவாச **law**-ஐ **base** பண்ணித்தான் ஜெபித்தாக வேண்டும். கண்களினால் பார்க்க முடியாமலிருக்கிற காரியங்களை, பார்ப்பதைப் போலவே கற்பனை செய்து நம்பக்கூடிய ரீதியில் இந்த விசுவாசம் செயல்படுகிறது. மாம்சக் கண்களினால் பார்க்க முடியாமலிருக்கிற தேவனை; அவர் இருக்கிறார் என்று விசுவாசித்து, ஜெபத்தை கேட்கிறவர் என்று விசுவாசித்து, பதில் தருகிறவர் என்றும் விசுவாசித்து ஜெபிக்க வேண்டும். அதற்கு இந்த **law (rule)** நமக்கு உதவி செய்கிறது.

இவ்வளவு முக்கியமான விசுவாசத்தை விட்டு விட்டு; வெறும் ஐம்புலன்களின் உணர்வுகளினால் தேவனைத் தேட முயன்ற போது; தேவன் தவறானவராக, பயங்கரமானவராக, கெட்டவராக இருப்பாரோ என்று சந்தேகம் வரும் அளவில் மாறிப் போனார். *"புனிதனுக்கு நீர் புனிதராகவும், மாறுபாடுள்ளவனுக்கு* ***froward, disobedient, contrary, conflicting, opposite,)*** *நீர் மாறுபடுகிறவராகவும் தோன்றுவீர். சங். 18:26."* தேவன் நல்லவர் மாத்திரமே, அவர் மாறப்போவதில்லை, கெட்டவராகப் போவதும் இல்லை. அப்படியானால் வேதத்தில் அவர் பயங்கரப்படத்தக்கவர் போல சித்தரிக்கப்பட்டிருக்கிற வசனங்கள்? தேவன் ஆதியிலே நியமித்த நல்ல நியமங்களினடிப்படையில் இயங்காமல்; அதை விட்டு வெளியேறுகிற எந்த வொரு மனிதனையும் பூமியின் மீது இயங்கிவருகிற சாபநியமம் தாக்கவே செய்யும்; இது தவிர்க்க முடியாத ஒன்று. பூமியின் மீது நடக்கிற சகல நிகழ்வுகளுக்கும் தேவன்தான் காரணம் என்பது புறமதஸ்தர்களின் நம்பிக்கை. நம் நம்பிக்கையும் அதுவாகவே இருக்குமானால்; தேவபிள்ளைகளே நாம் தேவனை அறிந்ததினால் வந்த பிரயோஜனம் என்ன?

மனிதன் விழுந்த போது பூமியின் மீது சாபம் சூழ்ந்து கொண்டது உண்மை தான். என்றாலும் மனிதன் அந்த சாபத்தினால் தாக்கப்படாத அளவில் வாழ, தப்பித்து பிழைத்துக் கொள்ள ஏதுகரமான காரியங்களை ஏற்படுத்தி வைத்திருந்தார். தாயின் சிறகுக்குள் இருக்காமல் வெளியே போன கோழிக்குஞ்சுகளை கழுகு கொத்திக் கொண்டு போனது. தொழுவத்தை விட்டு வெளியே போன ஆட்டுக்குட்டியை ஓநாய் பிடித்துக் கொண்டு ஓடியது. வேலியைத் தாண்டிப் பாய்ந்த மாட்டை சிங்கம் குறி வைத்தது. இப்படித்தான் மனிதனுக்கும் நடந்தது. மனிதனின் கீழ்ப்படியாமையினால், அடங்காபிடாரித்தனத்தினால் தேவன் நிர்ப்பந்திக்கப்பட்டார்; அவருக்கு வேறு வழியில்லை என்று சொல்லி பழியை தேவன் மீது திருப்புவது சரியில்லை. தேவனுடைய சுபாவங்களைக் குறித்து நம்முடைய இருதயத்தில் வரைந்து வைத்திருக்கும் படத்துக்கேற்ப காரியங்கள் நடக்கிறது. தேவனைத் தவறாக புரிந்து வைத்திருந்தால் தவறான காரியங்கள் வாழ்க்கையில் நடக்கும். அதற்காக அதையெல்லாம் தேவன் செய்தார் என்று சொல்வது எப்படி சரியாகும்? உங்கள் தவறான சிந்தனை மனதில் தவறான படத்தை வரைந்தது. அந்த தவறான படத்திற்கு உங்கள் வாய் உயிரோட்டம் கொடுத்தது, தவறானதைப் பேசினீர்கள். பேசிய வார்த்தைகள் கடந்து சென்று; அது அனுப்பப்பட்ட நோக்கத்தை நிறைவேற்றியது! அதாவது வார்த்தைகள் நிகழ்வுகளாக உருக்கொண்டன. ஏறக்குறைய இப்படிப்பட்ட காரியங்கள்தான் பழைய ஏற்பாட்டின் காலங்கள் முழுவதிலுமாக நடந்தது. பிரகாசமுள்ள மனக்கண்களோடு பழைய ஏற்பாட்டை வாசித்துப் பாருங்கள்; உங்களுக்கே புரியும்.

மனிதனின் விழுகைக்குப் பிறகு; உள்ளான மனிதனின் ஆவிக்குரிய கண்கள் குருடான நிலைமையில்; வழி தெரியாமல் திசைகெட்டு, பாதைமாறிப் போன மனிதர்கள் இப்படி மாறுபாடான, எதிரிடையான நியமங்களுக்குள் சிக்கிக் கொண்டார்கள். அது அவர்களுக்கு கேட்டை, அழிவை, முடிவைக் கொண்டு வந்தது. மனிதன் மாத்திரமல்ல, சாப சுழற்சியில் சகல ஜீவராசிகளும், தாவர வகைகளும், நில நீர் காற்று மண்டலங்களிலுள்ள காரியங்களும் கூட சிக்கிக்கொண்டு அல்லோல கல்லோலப்பட்டன. நான் முன்பே சொன்னது போல, ஆவியானவருடைய எழுத்து நடையை புரிந்து கொள்ளும் அளவுக்கு மனிதன் இல்லாததினால்; தேவன் மனிதனால் தவறாக வாசித்து, புரிந்து கொள்ளப்பட்டார் என்று பார்க்கிறோம்!

## தேடுவோம் வாருங்கள்:

ஏதாவது ஒரு பொருளை எங்கேயாவது வைத்துவிட்டு; அதைத் தேடித்தேடி அலைமோதுவது

எனக்கு கைவந்த கலையாகிப் போனது! இப்படிப்பட்ட தேடல்களின் நேரத்தை கணக்கெடுத்துப் பார்த்தால் அது ஏறக்குறைய ஒரு வருட அளவிலாவது இருக்கும் என்பது என் அனுமானம்! தன்னையே தொலைத்துவிட்டு நிற்கிற பரிதாப நிலையிலிருக்கும் மனிதனால் தேவனை எப்படி கண்டு பிடிக்க முடியும்? மனிதன் தன்னை தொலைத்து விட்டு நின்றது எப்போது? பதில் உங்களுக்கே தெரியும். ஏதேனின் வாசல் பூட்டப்பட்டப் பிறகு, மனிதன் வெளியே தன்னுடைய காலை எடுத்து வைத்த அந்த வினாடி பொழுதிலிருந்து மனிதன் தொலைந்து போனான் ... அதாவது காணப்படாமல் போனான் என்று பார்க்கிறோம். அது மட்டுமல்ல, தான் யார் என்பதையே மறந்தும் போனான். முதல் மனிதர்களாகிய ஆதாம் ஏவாளோடு இந்த பிரச்சனை நின்றுவிடவில்லை. சந்ததியிலிருந்து சந்ததியாக இந்த மறதி குணம் மனிதர்களுக்கு கடத்தப்பட்டது.

ஹாலி வால் நட்சத்திரத்தை கண்டுபிடித்த விஞ்ஞானி ஹாலியும் அவரது நண்பர்கள் சிலரும் ஹெப்லரின் மூன்றாவது கொள்கையை **(Kepler's third law)** பற்றி விவாதித்துக் கொண்டிருந்தார்கள். சூரியனுக்கும் கோள்களுக்கும் இடையில் இருக்கும் தொலைவின் இருமடங்கிற்கு எதிர்மறையாக அதன் சுற்றுப்பாதை அமைந்து இருப்பது தெரியவந்தது. ஆனால் அது எந்த அளவிற்கு உண்மை என்பதை அவர்களால் தீர்மானம் செய்ய முடியவில்லை. சில மாதங்கள் கழித்து கேம்பிரிட்ஜில் நியூட்டனை சந்தித்த ஹாலீ இதைப் பற்றி கேட்டார். சூரியனால் கோள்களின் மேல் ஏற்படும் ஈர்ப்பு விசை தொலைவின் இரண்டு மடங்கிற்கு எதிர்மறையாக இருக்கும் என்றால் அவற்றின் சுற்றுவட்டப்பாதையின் வடிவம் எப்படி இருக்கும் என்று கேட்டார். அதற்கு நியூட்டன் கொஞ்சமும் யோசிக்காமல் சட்டென்று நீள்வட்ட பாதை என்றார்.

ஹாலி ஆச்சரியத்துடன் அது எப்படி தெரியும்? என்று கேட்டார். அதற்கு நியூட்டன்: கண்டுபிடிப்பின் மூலம் இதை என்னால் கணிக்க முடிந்தது என்றார். அனுமானமோ வியூகமோ என்று சொல்லாமல் முற்றிலும் கணித்து இருக்கிறேன் என்று சொன்ன நியூட்டனின் ஆற்றலைக் கண்டு மலைத்துப் போனார் ஹாலி! அந்தக் கணித முறையை கேட்ட போது நியூட்டன் அதை தொலைத்துவிட்ட காரியம் தெரிய வந்தது! மனித இனத்திற்கு முன் நிற்கும் மிகச் சிக்கலான கேள்விகள் அனைத்துக்கும் பதில் கூறும் சூத்திரத்தை கண்டுபிடித்தது மட்டுமல்லாமல் அதைத் தொலைக்கவும் செய்திருந்தார். ஹாலி கேட்டுக் கொண்டதினால் மீண்டும் தன் கண்டுபிடிப்பை நினைவில் கொண்டு வந்தார்!

தேவனுடைய சிருஷ்டிப்பில் **No. 1.** மனிதனாகத்தான் இருக்க முடியும்; ஏனென்றால் அவன் தேவனைப் போலிருக்கிறானே! தேவனுடைய படைப்பின் சிகரமான தன்னையே (அதாவது தான் யார் என்கிற உண்மையை) மனிதன் தொலைத்து விட்டு நின்றானானால் ... ? சும்மா சொல்லக்கூடாது; நிஜமாகவே மனிதன் பெரிய சாதனையாளன்தான்! வரவர மனிதன் மறதியில் மன்னனாகிப் போனான்! கடைசியில் எதுவுமே ஞாபகமில்லாமல் தன்னைப் புழு, தூசு, குப்பை, சேறு, மரவட்டை என்று சொல்லி புலம்பித் திரிகிறான். சாத்தான் பூமியின் மீது எத்தனையோ விதமான கிரியைகளைச் செய்து வருகிறான். அவனுடைய கிரியைகளில் மிகமிக மோசமானது எது என்றால்; மனிதனுக்கு அவன் யார் என்ற உண்மையை மறைத்து விடுகிற நயவஞ்சகம் தான். இந்த வஞ்சகத்தை அஸ்திபாரமாக போட்டுவிட்டு அதன் மேல் நின்று கொண்டு தான் இப்போது நாம் பூமியின் மீது பார்க்கிற சகலவிதமான பாழ்க்கடிப்புகளையும் செய்து வருகிறான். தேவபிள்ளைகளின் அறியாமை அவனுடைய சகல கலா வித்தைகளுக்கு தீனி போட்டு வருகிறது. எப்படியென்றால்; அந்த அறியாமையினால் சாத்தானுக்கே உதவி செய்துக் கொண்டிருக்கிறார்கள் நம் தேவ பிள்ளைகள்!

ஜனங்களின் அறியாமையைக் குறித்த தீர்க்கதரிசன வார்த்தைகள்: *"என் ஜனங்கள் அறிவில்லாமையினால் சங்காரமாகிறார்கள்; ... ஓசியா 4:6* ***(My people are destroyed for lack of knowledge;...)'*** அதாவது தேவனைக் குறித்த அறிவில்லாததினால்; அறிந்து கொள்ள பிரகாசமுள்ள மனக்கண்கள் இல்லாததினால்; மனக்கண்களை சாத்தான் குருடாக்கிப் போட்டதினால் சங்காரமாகிறார்கள். அதாவது அவர்களுடைய வாழ்க்கையே கேள்விக் குறியாகிப் போனது. கேள்விக்குச் சரியான பதில் கிடைக்காமல் போனது. அதுமட்டுமல்லாமல் தவறான பதில்கள் கிடைத்தது. அவற்றைச் சரியானது என்று நம்பி எடுத்து; அதை வாழ்க்கைக்குள் கொண்டு வந்து கணக்குப் போட்டபொழுது சரியாக பொருந்தி வரவில்லை. இப்படியே ஏகப்பட்ட தவறான கணக்குகளிலேயே காலங்கள் கால் வலிக்க வேகமாக ஓடியது. சீக்கிரமாக முடிவை நெருங்கி விட மாட்டோமா என்ற ஆசை அதற்கு! ஏனென்றால் உலக வாழ்க்கையில் நல்லதாக உருப்படியாக எதுவுமே நடக்கவில்லை. அதனால் வாழ்க்கையைச் சீக்கிரமாக முடித்துவிட்டு; தேவனிடம் போய்விடுவது தான் நல்லது என்ற முடிவுக்கு வந்துவிட்டார்கள்.

## புகுந்த வீடு!:

பரலோகம் தான் தாய்வீடு என்கிறார்கள்; அது ரொம்பவும் சரி தான்... இல்லையென்று யார்

சொன்னது? தன்னுடைய மகளுக்கு திருமணம் முடித்து, அவளை பிறந்த வீட்டிலிருந்து வெளியே அனுப்புகிறான் ஒரு தகப்பன். அவளும் போகிறாள்; இனிமேல் புகுந்த வீடுதான் அவளுக்கு எல்லாமே! அங்கே போய், அங்கே இருக்கிற தன்னுடைய கணவனின் குடும்பத்தாருடன் சேர்ந்து, பழகி, அவர்களை நேசித்து, கடமைகளைச் செய்து, தான் அங்கே அனுப்பப்பட்டதன் நோக்கத்தை பூரணமாக நிறைவேற்ற வேண்டியது அவளுடைய கடமை. அங்கே உள்ள சூழ்நிலை அவளுக்கு எதிரிடையாக இருக்கலாம். என்றாலும் அந்த சூழ்நிலைக்குள் புகுந்து, அதனோடு சவால் விட்டு, சமாளித்து, எதிர்நீச்சல் போட்டு, போராடி ஜெயிக்க வேண்டும்! அது தான் சரி! அதை விட்டுவிட்டு ஒரு மாதத்திற்குள்ளாகவே மாமியாரின் மிரட்டலுக்கும் புருஷனின் உருட்டலுக்கும் பயந்து போய்; சூட்கேசிற்குள் துணிகளை அடைத்துக் கொண்டு அம்மா வீட்டுக்குப் போக ஆயத்தமானால்... ! வாழ்வதற்காக அனுப்பப்பட்ட மகள் புகுந்த வீட்டின் அடாவடித்தனங்களுக்குப் பயந்து பெட்டி படுக்கையோடு பிறந்த வீட்டுக்கு வந்து இறங்கினால்; அவளை பெற்ற தகப்பனுக்கும் தாய்க்கும் எப்படி இருக்கும்?

இது ரொம்ப ரொம்ப தப்பு, ஒரு பெண்பிள்ளை இப்படியெல்லாம் நடந்து கொள்ளக்கூடாது என்று சொல்லுகிறோம் இல்லையா? தேவனை அறிந்த நாம் மாத்திரமல்ல, தேவனை அறியாத உலக மக்களும் இதைத்தான் சொல்லுகிறார்கள். இனிமேல் பிறந்த வீட்டையே நினைத்துக் கொண்டு இருக்கக் கூடாது; இனிமேல் புகுந்த வீடுதான் இனி மேல் உனக்கு எல்லாம் என்று சொல்லுகிறானே, உலக மக்களுக்கு கூட தேவனுடைய நியமங்கள் ஓரளவுக்கு புரிகிறது. சொல்லப்போனால் தேவபிள்ளைகளை விட நன்றாகவே புரிகிறது! எப்படியென்றால், அவர்கள் பூமியைச் சுதந்தரிப்பதில் அதிக தீவிரம் காட்டுகிறார்களே!

உலகத்தை சுதந்தரிப்பாய் என்ற வாக்குத்தத்தம் அவர்களுக்கு அல்ல, நமக்குத்தான் கொடுக்கப்பட்டிருக்கிறது. *"... கர்த்தருக்கு காத்திருக்கிறவர்களோ பூமியைச் சுதந்தரித்துக் கொள்வார்கள். (Ref: சங். 25:13, 37:11, 22, 29, 34, ஏசா. 60:21, மத். 5:5)"* ஆனால் வாக்குத்தத்தங்களுக்கு வெளியே இருக்கிற உலக ஜனங்கள்தான் பூமியை, தங்கள் ஆளுகைக்கு கீழாக வைத்திருக்கிறார்கள். தேவன் நம்மை இந்தப் பூமியை சுதந்தரிப்பதற்காகத்தான் வைத்திருக்கிறார். ஆரம்பத்தில் பூமி நம்முடைய சுதந்திரமாகத்தான் இருந்தது. பூமியின் மீது இருந்த சகல செழிப்பான காரியங்களும், ஐசுவரியங்களும் நம்முடைய சுதந்திரமாக (சொத்தாக) இருந்தது. தேவன் தந்த சொத்தை சாத்தானுக்கு பட்டா போட்டுக் கொடுத்த ஏமாந்த சோணகிரிகளான தேவபிள்ளைகளால் தான் இன்னமும் பூமியின் மீது தேவதிட்டம் நிறைவேறாதபடி தடைபட்டு வருகிறது.

பூமியின் மீது தேவதிட்டத்தை நிறைவேற்ற வேண்டுமானால் அதற்கு ஐசுவரியம், ஆஸ்தி, பணம் எல்லாம் வேண்டும். வெறும் கை முழம் போடாது. தேவன் சிலுவையின் மூலம் நமக்கு தந்த இரட்சிப்பு, செழிப்பு, சுகம், வெற்றி, சமாதானம்... **etc.**, எல்லாமே இலவசம் தான். ஆனால் இதைக் குறித்த மகிமையான சுவிசேஷத்தை பூமியெங்கும் கொண்டு செல்ல பணம் வேண்டும்! பூமியெங்குமுள்ள ஜனங்கள் இயேசுவை ஏற்றுக் கொள்ள வேண்டும். அவர்களுக்கு சுவிசேஷத்தைக் கொண்டு செல்ல செலவு பிடிக்கும். ஆனால் இதனால் மட்டும் தேவதிட்டம் நிறைவேறாது. இரட்சிக்கப்பட்ட ஜனங்கள் பரலோகம் போய்விடுவார்கள் அவ்வளவுதான்! ஆனால் பூமியின் மீது தேவனுடைய திட்டத்தை நிறைவேற்றி முடிக்க வேண்டுமானால்; இரட்சிக்கப்பட்ட ஜனங்கள் சத்தியத்தை அறிய வேண்டியது மிக முக்கியம். எல்லா மனிதர்களின் ஆவிக்குரிய உள்ளான மனிதனின் கண்கள் திறக்கப்பட வேண்டும்.

பார்வையற்ற ஒருவர் சாலையை கடந்து செல்ல முயற்சிக்கிறார். பார்த்துக் கொண்டிருந்த நீங்கள் ஓடிப்போய் அவருக்கு உதவி செய்கிறீர்கள். நல்லது, கண்டிப்பாக இது நல்ல காரியம், நிச்சயமாக இப்படிப்பட்ட நல்ல காரியங்களை ஒவ்வொரு மனிதனும் செய்ய வேண்டும். இதற்காகத்தான் தேவன் நம்மை வைத்திருக்கிறார். ஆனால் சாலையை கடந்தபிறகு; அவரிடம் விடைபெறும்போது "பார்த்துப் போங்க சார், நான் வருகிறேன்" என்று சொல்லிவிட்டு நீங்கள் திரும்பி வருகிறீர்கள். சரி, நீங்கள் அந்த நபரிடம் கடைசியாக சொன்ன வார்த்தைகளை மீண்டும் நினைவிற்குள் கொண்டு வாருங்கள். பார்வையில்லாத அவர் எப்படி "பார்த்துப் போவார்"! இரட்சிக்கப்பட்ட பிறகும் சத்தியம் தெரியாததினால் பிரகாசமுள்ள மனக்கண்கள் இல்லாததினால் ஏற்படுகிற பிரச்சனை என்னவென்று இப்போது புரிகிறதா? அவருக்கு கண் பார்வை வரும் வரைக்கும் அவரால் "பார்த்துப்" போகவே முடியாது இல்லையா!

*"எந்த மனுஷனையும் கிறிஸ்து இயேசுவுக்குள் தேறினவனாக நிறுத்தும்படிக்கு, அவரையே நாங்கள் அறிவித்து, எந்த மனுஷனுக்கும் புத்தி சொல்லி, எந்த மனுஷனுக்கும் எல்லா ஞானத்தோடும் உபதேசம் பண்ணுகிறோம். கொலோ.1:28." (Preaching, warning, teaching)* இரட்சிக்கப்பட்ட நபருக்கு தொடர்ச்சியாக வேத வசனங்களை உபதேசம் செய்யும் போது; அது அவரை சத்தியத்திற்குள் நடத்துகிறது, அவனுடைய கண்கள் திறக்கப்பட்டு பார்வை கிடைக்கிறது. பிறகு அவனாகவே அந்த பிரகாசமுள்ள மனக்கண்களை பிரயோஜனப்படுத்தி வேதத்தை வாசிப்பான். அதற்குப் பிறகு அவனால் சுயாதீனப்பிரமாணத்தை

(சிலுவையில் ஏற்படுத்தப்பட்ட புதிய பிரமாணம்) உற்றுப் பார்க்க முடியும். கடைசியில் சிலுவையின் இரகசியங்களை அறிந்து கொள்ளுவான். இந்த ஊழியத்தைச் செய்ய சுவிசேஷ ஊழியத்தைவிட அதிகம் செலவு பிடிக்கும். உண்ண, உடுக்க, இருக்க இருந்தால் போதும் ஆண்டவரே என்று ஜெபித்துக் கொண்டிருந்தால் இது நடக்காது! தான் உண்டு, தன் வீடு உண்டு என்று வாழ்கிற சுயநல கிறிஸ்தவர்களால் ஒரு பிரயோஜனமுமில்லை, மாறாக தொல்லைதான்!

## *தேவனுடைய திட்டம் மிக பெரியது, விஸ்தாரமானது, அற்புதமானது, ஆனந்தமானது!:*

அது: பூமி முழுவதையும் ஏதேனைப் போலாக்கும் ஒரு காரியமாகும். தேவனுடைய திட்டத்தை 4 பகுதிகளாக பிரிக்கலாம். அது: **1)** நீங்கள் **பலுகிப் பெருகி, 2)** பூமியைக் **கீழ்ப்படுத்தி, 3)** பூமியை **ஆளுகை செய்து, 4)** பூமியைப் **பண்படுத்தி, 5) காத்துக் கொள்ள** வேண்டும். ... தேவன் அவர்களை நோக்கி: நீங்கள் பலுகிப் பெருகி, பூமியை நிரப்பி, அதைக் கீழ்ப்படுத்தி, ... ஆண்டுகொள்ளுங்கள் ... (ஆதி. 1:28) தேவனாகிய கர்த்தர் மனுஷனை ஏதேன் தோட்டத்தில் அழைத்துக்கொண்டு வந்து, அதை பண்படுத்தவும் காக்கவும் வைத்தார். ஆதி. 2:15 **(... subdue it; and have dominion. ... dress it and to keep it)**

ஆதியாகமம் 1, 2 அதிகாரங்களின் காலக் கட்டத்தில் தான் பூமி தேவனுடைய பரிபூரணமான சித்தத்தின் கீழ் இருந்தது. அதனால் இந்த இரண்டு அதிகாரங்களில் வருகிற இந்தக் காரியங்கள் தான் தேவனுடைய பரிபூரணமான சித்தமாகும்; அதையே திட்டமாக்கினார். அந்த திட்டங்களை இந்த பூமியின் மீது நடைமுறைபடுத்துவதற்காகத்தான் மனிதனை உண்டாக்கினார். நாம் இருக்கிற இந்த பூமியாகிய பூலோகம் பரலோகத்தின் விரிவாக்கம்தான் **(extension)** என்பதைப் பார்த்தோம். *(ஆதி 1, 2 அதிகாரங்களையும், வெளிப்படுத்திய விசேஷம் 21, 22 அதிகாரங்களில் உள்ள வசனங்களை ஒப்பிட்டுப் பார்த்தால் புரியும்)* அதனால் தான் பூமியை நிரப்பி, அதைக் கீழ்படுத்தி, ஆளுகை செய்ய; பண்படுத்தி, காத்துக்கொள்ள தன்னைப் போலவே மனிதனை உருவாக்கினார்.

பரலோகமல்லாத வேறு எதுவோ ஒரு **project**-ஐ தேவன் திட்டமிட்டிருந்தாரானால்; அதைக் கவனித்துக் கொள்ள தன்னைப் போலவே மனிதனைப் படைக்க வேண்டிய அவசியமில்லையே! நம்முடைய பிதாவாகிய தேவன் பரலோகத்தைக் கீழ்படுத்தி ஆளுகை செய்கிறார்; பண்படுத்தி காத்துக் கொண்டு வருகிறார். இதுவரையிலும் அங்கே எந்தவொரு பிரச்சனையும் வரவில்லை. அங்கே பிரச்சனையை உண்டாக்க முயற்சித்த காரியங்கள் (சாத்தான் – **Lucifer**) அப்புறப்படுத்தப்பட்டான். ஆனால் பூலோகத்தில் அதே பிரச்சனை தோன்றின போது; முதல் மனிதன் கதவைத் திறந்து விட்டு விட்டான். உள்ளே நுழைந்த சாத்தான் மனிதன் இருக்க வேண்டிய இடத்தில் தன் சிங்காசனத்தை போட்டு விட்டான்!

தேவனுடைய சிங்காசனத்திற்கு மேலாக தன்னுடைய சிங்காசனத்தை உயர்த்த முடியாமல் போனதால்; சாத்தான் தேவனைப் போ**லி**ருக்கும் மனிதனுடைய சிங்காசனத்திற்கு மேலாக தன் சிங்காசனத்தை உயர்த்திப் போட்டுக் கொண்டான்! பிறகு நடந்தது என்ன? மனிதனைக் குறித்த தேவனுடைய திட்டம்; இப்போது சாத்தானுடைய திட்டமாகிப் போனது. அதாவது சாத்தான் பூமியை **1) நிரப்பி 2) கீழ்ப்படுத்தி, 3) ஆளுகை செய்து, 4) பண்படுத்தி, 5) காத்துக் கொள்ள** ஆரம்பித்தான்!

தேவனுடைய திட்டம் மாறாமல் இருந்திருந்தால் ... அது மனிதனால் வெற்றியாக முடிக்கப்பட்டிருந்தால் ... ? இப்போது பூமி எந்த குறைவுமில்லாத இன்னொரு பரலோகமாக மாற்றப்பட்டு; பரலோகத்துடன் இணைக்கப்பட்டிருக்கும். அது எப்படி என்று பார்ப்போம்:

### *1) பலுகிப் பெருகி... பூமியை நிரப்பி...*

பலுகிப் பெருகி... பூமியை நிரப்பி... என்றவுடன் வெறும் “மக்கள் தொகைப் பெருக்கம்” மட்டும்தான் கண் முன்னே வருகிறது. ஆது அவசியம் தான் என்றாலும், இங்கே தேவன் சொல்லுகிற பெருக்கம் அதுவல்ல! பிதாவாகிய தேவன் நம் முதல் மனிதர்களாகிய ஆதாமையும் ஏவாளையும் ஆசீர்வதித்து அவர்களைப் பலுகிப் பெருகி பூமியை நிரப்பும்படி சொல்கிறார். சும்மா வெறுமனே பிள்ளைகளைப் பெற்று பூமியை நிரப்ப வேண்டும் என்பதல்ல; தன்னுடைய திட்டத்தை நிறைவேற்றக்கூடிய ரீதியில் பலுகிப் பெருகுங்கள் என்று சொல்கிறார்.

இஸ்ரவேல் பூப்பூத்து... தன் பலனால் பூமியை நிரப்பும் காலம் வரும். Ref.: ஏசாயா27:6 “யாக்கோபு வோ பற்றி, இஸ்ரவேல் பூத்துக் காய்த்து உலகத்தைப் பலனால் நிரப்பும் **நாட்கள் வரும்.**” அதாவது தன் பலனால் பூமியை நிரப்ப வேண்டும். அதாவது ஆதாமின் சந்நததியார் வெறும் ஜனத்திரளாக இருந்தால்

மட்டும் போதாது. அவர்கள் அந்தச் சந்ததியாராகிய நாம் இந்தப் பூமியில் பலுகிப் பெருகி (சகலவித ஆசீர்வாதங்களினாலும்) இந்தப் பூமியைக் கீழ்ப்படுத்தி... ஆளுகை செய்து... பண்படுத்தி... பாதுகாப்பவர்களாய் இருத்தல் வேண்டும்.

அப்படிப்பட்ட சந்ததியை உருவாக்கும்படியே தேவன் கட்டளையிடுகிறார். ஆனால் நடந்தது என்ன? அது தான் தெரியுமே என்று நினைத்துவிடக்கூடாது. ஆவியானவர் நமக்கு வெளிப்படுத்தும் வார்த்தைகளைப் பார்ப்போம். பலுகிப் பெருகும் ரீதியில் அவர்கள் தங்கள் சந்ததியைப் பெற்றெடுக்கவில்லை. ஆனால் அதற்கு மாறாக தேவனுடைய வார்த்தைக்குக் கீழ்ப்படியாமல் ஏதேனை விட்டு வெளியேற்றப்படுகிறார்கள். இன்னும் ஏதேன் தோட்டத்தைப் போல மாற்றப்படாத வெளியிடத்தில்; மகிமையிழுந்த தங்கள் சரீரங்களின் மூலமாக ஒரு கீழ்ப்படியாத சந்ததியையே உருவாக்கி; அதையே பலுகிப் பெருகும்படி செய்து விட்டார்கள்.

தேவ திட்டத்திற்கு மாறான ரீதியில் கருவுற்ற ஏவாளின் மகன் காயீன் தன் சகோதரனாகிய ஆபேலைக் கொலை செய்ததன் மூலமும் தேவன் தந்த பலுகிப் பெருகும் திட்டத்தைக் கவிழ்த்து கெடுத்துப் போட்டு விட்டார்கள்.

ஆனால் தேவனுடைய திட்டங்களை சாத்தான் தன் கையிலெடுத்துக் கொண்டு, அதைத் தன்னுடைய ரீதியில் செயல்படுத்த ஆரம்பித்து விட்டான். தன்னுடைய சாப சீர்கேடுகளை – வியாதிகளை –உபத்திரவங்களை மற்றும் ஏராளமான கெடுதலான காரியங்களால் இந்தப் பூமியை நிரம்ப வைத்தான். மனிதர்களைத் தன் வசப்படுத்தி அவர்களைத் தனக்கேற்றபடி “பலுகிப் பெருகும்படி” செய்கிறான். அவனடைய செயல்பாட்டை முறியடிக்கும் வகையில் நாம் செயல்பட்டாக வேண்டும். தேவ திட்டத்தைச் செயல்படுத்தும் விதத்தில் பிள்ளைகளை வளர்க்க வேண்டும்.

பிள்ளையாண்டான் நடக்க வேண்டிய... அவன் தன் முதிர் வயதிலும்... (வசனம்) நம் பின் சந்ததியாரான நம் வா–பப் பிள்ளைகளைத் தேவ ரீதியில் செழித்து; பூமியைத் தங்கள் பலனினால் நிரப்ப வழி வகை செய்து தர வேண்டும்.

நம் பிள்ளைகளுக்கு பிரகாசமான மனக் கண்களைக் கொடுக்க ஜெபித்து, தேவனைக் குறித்த அறிவில் வளர்க்க வேண்டும். தேவ இரகசியங்களை அவர்களோடு பகிர்ந்து கொள்ள வேண்டும். பவுல் செய்த ஆவிக்குரிய மல்யுத்த ஜெபங்களை பிள்ளைகளுக்காகத் தொடர்ச்சியாக ஏறெடுக்க வேண்டும். (Ref.: எபே. 1:17–19, எபே. 3:16,19, பி–ப்பியர் 1:9–11, பிலே. 1:6, 2 தெச.1:12, 2 தெச.3:12, எபி. 13:18, கொலோ. 4: 3,4.)

சோர்ந்து போகாமல் இந்த வசனங்களைப் பிடித்துத் தொங்கி, ஜெபிக்கும் போது; நமது ஜெப வார்த்தைகள் (வசனங்கள்) வான மண்டலத்தில் பதனிடப்பட்டு (Processing) பூமிக்குரிய ரீதியில் ஊருமாறி நம்மைப் பலுகிப் பெருக வைக்கும் என்பதில் ஐயமில்லை.

வானங்களில் என் **பட்டயம் (வசனங்கள்) வெறி கொண்டது**. ...நான் சங்காரத்துக்கு நியமித்த ஜனத்தின்மேலும், அது நியாயஞ் செய்ய இறங்கும். ஏசாயா 34:5

விசுவாசம் பொறுமையோடு காத்திருக்கும் போது; நம்முடைய பிள்ளைகளின் மனக்கண்கள் திறக்கப்படும். பிறகென்ன? நம் வேலை முடிந்தது நமது வருங்கால சந்ததி பார்த்துக்கொள்ளும். இந்தப்பூமி மீண்டும் ஏதேனாய் மாறும்.

## *உ) கீழ்ப்படுத்தி...* replenish the earth, and subdue it:

அதாவது பூமியை மனிதன் தன்னுடைய அதிகாரத்தின் கீழ் வைத்துக் கொண்டு; அதை பரிபூரணப்படுத்த வேண்டும் என்பது தேவனுடைய திட்டமாக இருந்தது. **(Replenish the earth, and subdue it)** ஆளுகை என்பது ஏதாவது ஒரு காரியத்தின் மீது நமக்கிருக்கும் அதிகாரத்தைக் குறிக்கிறது. ஒரு வீட்டின் வேலைக்காரன் அந்த வீட்டின் எஜமானனின் ஆளுகைக்கு கீழ்ப்பட்டிருக்கிறான். அந்த வேலைக்காரன் மீது எஜமான் அதிகாரம் செலுத்தலாம். எஜமான் எதைச் சொன்னாலும் அதை வேலைக்காரன் செய்தாக வேண்டும். அப்படி செய்ய வேண்டுமானால் அந்த வேலைக்காரனை தனது அதிகாரத்தின் கீழ் வைத்திருப்பது அவசியம். அப்படி வைத்திருந்தால் தான் அவன் சொன்னபடி செய்வான். வேலைக்காரனை அவனுடைய இஷ்டத்திற்கு, அவனுடைய போக்கில் விட்டுவிட்டால்; காலப்போக்கில் அவன் தன் எஜமானனுக்கு கீழ்ப்படிய மாட்டான். சொன்னதை செய்யமாட்டான்; மாறாக தனக்கு சாதகமாக வேறு எதையாவது செய்வான். இன்னும் காலம் போகப்போக எஜமானனையே தன் அதிகாரத்திற்குக் கீழே கொண்டு வர முயற்சிப்பான். கொஞ்சம் கொஞ்சமாக அந்த முயற்சி வெற்றியடைந்ததும்; எஜமானனையே **Black mail** செய்வான்! **Greenmail, Graymail** என்று அதை

**colorful** ஆகவும் செய்வான்!

பூமியை மனிதன் தன்னுடைய ஆளுகைக்கு – அதிகாரத்திற்கு கீழாக வைத்துக்கொள்ளும் ரீதியில் தான் தேவன் நியமித்திருந்தார். அப்படி அவன் வைத்துக் கொண்டால்தான் திட்டத்தை வெற்றியாக முடிக்க முடியும். பூமியும் அவனுடைய வார்த்தைக்குக் கீழ்ப்படியும். கொஞ்சம் கொஞ்சமாக பூமி முழுவதையும் ஏதேனைப் போலவே ஆக்கிவிட முடியும். மனிதன் தேவனைப் போலவே இருக்கிறபடியால் அது சாத்தியம் தான். தேவன் ஆதியாகமம் 1ஆம் அதிகாரத்தில் வார்த்தையை சொல்லிச் சொல்லியே எல்லாவற்றையும் உண்டாக்கியதைப் போலவே மனிதனாலும் முடியும். அதாவது வார்த்தையாலேயே சாதிக்கலாம்!

ஆனால் நடந்தது என்ன? எல்லோருக்கும் தெரிந்தது தான். நிலைமை தலைகீழாகி விட்டது, பிளேட்டையே திருப்பிப் போட்டுவிட்டான்! மனிதன் ஆளுகை செய்ய வேண்டிய பூமியை சாத்தான் கைப்பற்றி ஆளுகை செய்ய ஆரம்பித்தான். சாபத்தினால் பூமியின் மீது தோன்றிய சீர்கேடுகள் எல்லாம் மனிதனை ஆள ஆரம்பித்தன. பூமி, மனிதனுடன் ஒத்துப் போக மறுத்தது! சாபத்துக்கு ஆதரவாக கை கொடுத்தது! இப்போது சாத்தான் மனிதனை **Black mail** செய்து, மிரட்டி, உருட்டி வருகிறான். மனுக்குலம் அவன் கையில் பகடைக்காயாகிப் போனது! இந்த நிலைமையை இனிமேலும் நீடிக்க விட்டால் தேவனுடைய திட்டத்தை வெற்றியாக முடிக்க முடியாது, **M.Phil., Ph.D.,** என்று பட்டங்களை நம் பெயருக்குப் பின்னால் போட்டுக் கொள்ளவும் முடியாது! அதற்காகத்தான் இந்த கடைசி நாட்களில் தேவன் அதிகப்படியான வெளிப்பாடுகளை சபைக்கு கொடுத்து வருகிறார்.

தேவனற்ற உலக ஜனங்கள் திட்டத்தை முடிப்பதில் கைதேர்ந்தவர்களாக இருக்கிறார்கள். அதாவது சாத்தானுடைய திட்டத்தில் **expert** ஆக, **specialist** ஆக இருக்கிறார்கள்! மனிதனுக்காக படைத்து; அவன் ஆளுகை செய்வதற்காக தேவனால் தரப்பட்டிருக்கும் பூமியை சாத்தான் ஆளுகை செய்கிறான். அதுமட்டுமல்லாமல் தேவபிள்ளைகளைப் பயமுறுத்தி தேவனுடைய திட்டங்களுக்கு மாறாக தனக்காக பிரயோஜனப்படுத்துகிறான். **(abuse, illuse, misuse, misappropriate, misapply)**

*"பிசாசானவனுடைய இச்சையின்படி செய்ய அவனால் பிடிபட்டிருக்கிற அவர்கள் ... 2 தீமோ. 2:26."* அதாவது முதல் மனிதனின் விழுகையினால் பூமியில் தோன்றின சாப நியமத்தை தனக்கு சாதகமாக்கிக் கொண்டான். அந்த சாபத்தின் வெளியீடுகளான பாவங்கள், வியாதிகள், தரித்திர நிலை **(output - yield)** போன்ற காரியங்களை பூமியின் மேல் நிறைவேற்ற பூமியின் ஆளுகையை பெற்ற, தேவனைப் போலிருக்கிற மனிதர்களையே உபயோகிக்கிறான் என்றால் ... ! மனுவர்க்கத்தை அவன் எந்த அளவுக்கு அடிமுட்டாளாக்கி இருக்கிறான் என்பதை யோசித்துப் பாருங்கள்! வீறு கொண்டு எழுவோம் என்று பாடுகிறான் சுதந்திர தாகமுள்ள உலக மனிதன். பரலோகவாசிகளோ பேசாமல் சாப்பிட்டு விட்டு படுத்து தூங்குங்கள்; அவனோடு ஏன் மல்லுக்கு நிற்கணும்? என்கிறார்கள்!

*"... பிசாசுக்கு எதிர்த்து நில்லுங்கள்; அப்பொழுது அவன் உங்களைவிட்டு ஓடிப்போவான். யாக். 4:7"* என்று தான் எழுதியிருக்கிறது. **"எதிர்த்து நிற்காவிட்டால்? அவன் உங்களை விட்டு ஓடிப்போக மாட்டான்"** என்று எழுதியிருக்கவில்லை தான். ஆனால் அந்த வசனத்தின் எதிர்மறை விளக்கம் **(mirror image)** அதுதான்! பிசாசை விரட்டாமல் கூடவே வைத்துக்கொண்டு தேவ இராஜ்ஜியத்தை கட்ட முடியுமா? கட்டிப்பாருங்கள், நீங்கள் கட்ட, கட்ட அவன் கீழே இருந்து ஒவ்வொரு செங்கலாக உருவிப் போட்டுக் கொண்டே இருப்பான்! அவன் சும்மா இருக்க மாட்டான்; அவனால் சும்மா இருக்க முடியாது! எந்தப் பிரச்சனையும் இல்லாத பரலோகத்திலேயே சும்மா இருக்க முடியாமல் தில்லுமுல்லுகள் செய்து கீழே விழுந்த அவன்; பிரச்சனைகளால் சூழப்பட்டிருக்கும் இந்த பூலோகத்தில் எப்படி சும்மா இருப்பான்?

நமக்கு கொடுத்திருக்கும் அதிகாரங்களை அனைத்தையும் பிரயோஜனப்படுத்தி பூமியைக் கீழ்ப்படுத்துவோம். பூமி நம் கால்களுக்கு கீழேதான் இருக்கிறது; ஆனால் நான் அதைச் சொல்ல வரவில்லை. பூமியின் மீது சாபத்தினால் உருவான சகல சீர்கேடுகளும் நம்மை **overcome** செய்ய இடம் கொடுக்காமல் அவற்றை நமக்கு கீழ்ப்படுத்த வேண்டும். எப்படி? சத்தியத்தை அறிந்து கொள்வதால் தான்! அது? நாம் சாத்தானிடமிருந்து, பாவத்திலிருந்து, வியாதியிலிருந்து, நியாயப்பிரமாணத்திலிருந்து, அழிவுக்குரிய அடிமைத்தனத்திலிருந்து விடுதலையாக்கப் பட்டிருக்கிறோம். *(Ref: லூக். 1:71, 13:12, ரோ. 6:18, 7:6, 8:20)* *"விடுதலையாகிக்கொண்டிருக்கிறோம்"* என்றல்ல, *"விடுதலையாவோம்"* என்றல்ல, *"விடுதலையாவதற்கு சந்தர்ப்பம் இருக்கிறது"* என்றும் அல்ல, *"விடுதலையாகி விடலாம் என்று விசுவாசிக்கிறேன்"* என்றும் அல்ல, ***"விடுதலையாக்கப்பட்டிருக்கிறோம்"*** என்ற உண்மையை அறிந்து கொண்டாலே போதும். சகலமும் நமக்கு கீழே தான் இருக்கும்!

## 2) ஆளுகை செய்து ...

ஆளுகை என்றவுடன் அரசாங்கம், ராஜா, சிங்காசனம், செங்கோல், கிரீடம், அரண்மனை, ராஜவீதிகள் ஞாபகத்திற்கு வரும்! அது ... அதைத் தாங்க சொல்ல வருகிறோம்! ... நம்மை ராஜாக்களும் ஆசாரியர்களுமாக்கின அவருக்கு ... வெளி. 1:6

***நாம் ராஜாக்களாக்கப்பட்டிருக்கிறோம்;*** (கவனியுங்கள், நாம் பண்டாரம் பரதேசியாக்கப்படவில்லை!) நாம் ராஜாவாக இருந்தால் தான் பூமியை ஆள முடியும்; அதனால் தான் தேவன் நம்மை ராஜாவாக்கினார். ராஜாவின் கட்டளையின்படி தான் தேசங்களில் காரியங்கள் நடக்கும் என்பது எல்லோருக்கும் தெரியும். நாம் பேசுகிற காரியங்கள் தான் இந்த பூமியின் மீது நடந்து வருகிறது என்பதைப் பார்த்து வருகிறோம். நாம் ராஜா என்பதினால் நம் வாயில் அதிகாரம் இருக்கிறது. அதனால் தேவனுடைய திட்டம் நிறைவேறுவதற்கேதுவான வார்த்தைகளைப் பேச வேண்டும். அப்படிப்பட்ட வார்த்தைகளை வேதத்தை ஆராய்ச்சி செய்வதன் மூலமாக கண்டுபிடிக்க வேண்டும். (கதை புஸ்தகம் போல பக்கம் பக்கமாக புரட்டி புரட்டி வாசித்துத் தள்ளினால் கண்டுபிடிக்க முடியாது!)

நான் பைபிளை 25 முறை வாசிச்சிருக்கேன், அட்டை to அட்டை 100 முறை படித்திருக்கிறேன் என்று காலரை தூக்கி விட்டுக் கொண்டிருப்பவர்களுக்கு: பைபிள் புரியாமல் இருக்கும் வரையிலும் நீங்களும், இன்னமும் ஒரு முறை கூட வாசித்து முடித்திருக்காதவர்களும் ஒன்று தான்! யாரையும் குறை சொல்லவில்லை, என் கதையையே சொல்லுகிறேன். நான் சுமார் குறைந்தது 10 முறையாவது வேதத்தை வாசித்து முடித்திருப்பேன்; ஆனால் கடந்த 3 வருஷங்களாகத்தான் எனக்கு பைபிள் புரிகிறது! புரிந்து கொள்ளும்படியாக எனக்கு பிரகாசமுள்ள மனக்கண்களைத் தந்த தேவனுக்கு நன்றி செலுத்துகிறேன்.

ஏதேன் தோட்டத்தில்; மனுக்குலத்தின் பிரதிநிதியாக தேவனால் படைக்கப்பட்ட முதல் மனிதனான ஆதாம் தனக்கு கொடுக்கப்பட்ட ஆளுகையை புறக்கணித்து விடுகிறான். ஏன்? அவனுக்கு தான் யார் என்றே புரியவில்லை. தான் தேவனைப் போலிருக்கும் உண்மையை அவன் உணர்ந்திருப்பானானால் பூமியை சாத்தானுக்கு விட்டுக் கொடுத்திருப்பானா? நிச்சயமாக கொடுத்திருக்க மாட்டான்! அவனுக்கு சாத்தானையும் அடையாளம் தெரியவில்லை, ஏவாளிடம் பேசியது சர்ப்பம் தான் **(reptile - snake - legless animal)** என்று தவறாக நினைத்து விடுகிறான்.

மனிதனுக்கு தான் யார் என்ற உண்மை தெரியாமல் போனதினால்; தன்னால் பூமியைக் கீழ்ப்படுத்தி ஆளுகை செய்ய முடியும் என்ற உண்மையும் தெரியாமல் போனது. தான், தேவசாயலாக படைக்கப்பட்டிருக்கிறோம், தேவனைப் போலவே இருக்கிறோம், தேவனாகவே இருக்கிறோம், தேவனுடைய பிள்ளைகளாயிருக்கிறோம், ராஜாக்களாயிருக்கிறோம், சகலமும் நமக்கு கீழ்ப்படுத்தப் பட்டிருக்கிறது போன்ற உண்மைகளை மனிதன் அறிந்து உணர்ந்து நிதானிப்பானானால் **(realize)** பூமியை தூக்கி ஒரு **football** போல தன் காலுக்கு அடியில் வைத்து மிதித்துக் கொண்டு; வானத்துக்கும் பூமிக்குமாய் விஷ்வரூபமெடுத்து இடிமுழக்கம் போல கெர்ஜிப்பான் அல்லவா! யோசித்துப் பாருங்கள்: தேவனால் செய்ய முடிவதை அவருடைய பிள்ளைகளால் ஏன் செய்ய முடியாது? ராஜாவுக்கு இருக்கிற அதே மரியாதை இளவரசனுக்கும் இருக்குமல்லவா? சிங்கம் கெர்ஜிப்பதைப் பார்த்த குட்டி சிங்கம் வளர வளர அதைப்போலவே கெர்ஜிக்கப் பழகுகிறதே!

தான் யார் என்று தெரிந்தால் மனிதன் பூமியைப் பார்த்து, பூமியின் மீது நடக்கும் நிகழ்வுகளைப் பார்த்து பயப்பட மாட்டானே? பூமி சூடாகிறது என்ற பயம் ஒரு பக்கம், விண்கற்கள் நட்சத்திர தாக்குதல்களால் பூமி சீக்கிரமே அழியும் என்ற பயம் மறுபக்கம்! இயற்கை சீற்றங்களைப் பற்றிய பயம் இன்னொரு பக்கம், உலகத்தையே அழிக்கக்கூடிய அணுகுண்டுகளைப் பற்றின பயம் இன்னொரு மறுபக்கம்! (தன்னுடைய கண்டுபிடிப்புகளைவிட தான் பெரியவன் என்ற உண்மைகூட அவனுக்குப் புரியவில்லை!) இப்படியாக பயப்படுவதற்கு பக்கமே இல்லாத அளவுக்கு பயங்களால் சூழப்பட்டு கிடக்கிறான் மனிதன்! தேவனைப் போல வாழ வேண்டிய மனிதனின் நிலைமையை யோசித்துப் பாருங்கள். சீறி எழு! வீறுகொண்டு எழும்பு! சிலிர்த்து எழும்பு! பாய்ந்து செல்! விடாதே பிடி! என்று உலக மனிதர்கள் எதெதெற்கெல்லாமோ சொல்லி, தங்களையே உற்சாகப்படுத்திக் கொள்கிறார்கள். உண்மையில் இதெல்லாம் நாம் செய்ய வேண்டிய வேலைகள்!

துணிந்து நில், தொடர்ந்து செல், தோல்வி கிடையாது தம்பி! உச்சி மீது வானிடிந்து வீழுகின்ற போதிலும் அச்சமில்லை, அச்சமில்லை, அச்சமென்பதில்லையே! நாம் பாடவேண்டிய பாடல்களையெல்லாம் உலக விடுதலைக் கவிஞர்கள் பாடிக்கொண்டிருக்கிறார்கள். பூமியைக் காப்பாற்றவும், அதில் இருக்கிற

காரியங்களை பாதுகாக்கவும், மனுக்குலத்துக்கு நல்ல வாழ்க்கையை கொடுக்கவும் தான் உலக மனிதர்களும் முயற்சிகள் எடுக்கிறார்கள். தேவனை அறியாத உலக மனிதர்கள் கூட மனித குலம் தழைக்க வேண்டும், நன்றாக இருக்க வேண்டும், நல்லவர்களாக வாழ வேண்டும், கெட்டவர்கள் திருந்தி நல்லவர்களாக வேண்டும், எல்லா மக்களுக்கும் தேவையான வாழ்வாதாரங்கள் கிடைக்க வேண்டும் என்றே முயற்சிகளை மேற்கொள்கிறார்கள். உலகத்தின் சகல தேசங்களிலும் சகல ரீதியிலும் சகல விதமான முயற்சிகளும் இதற்காக நடக்கின்றன. அதிரடியாக மின்னல் வேகத்தில் கூட சில காரியங்கள் நடக்கின்றனதான். அனுதினமும் மனிதனின் வாழ்க்கை எளிதாகும் விதமாக புதிய புதிய விஞ்ஞானக் கண்டுபிடிப்புகள் உருவாக்கப்பட்டுக் கொண்டே இருக்கின்றன. சிந்தனையாளர்கள் புதிது புதிதாக எதையெதையோ எழுதி குவித்துக் கொண்டுதான் இருக்கிறார்கள். தொண்டு நிறுவனங்கள் ஓடியாடி வேலை செய்தபடிதான் உள்ளனர். என்றாலும்... பூமி... ? இன்னமும் மனிதனின் காலுக்கு கீழ் வந்தபாடில்லை, மனிதன் ஆளுகை செய்த பாடுமில்லை!

ஏன்? என்னவாயிற்று? தேவனை அறியாத மனிதனுக்கும் தன்னை உருவாக்கினவருடைய தாக்கம் இருக்கிறது என்பது மட்டும் தெரிகிறது! அதனால்தான் நல்லதாக எதையாவது செய்யத் துடிக்கிறான். எதையாவது செய்து சீரழிந்து கொண்டிருக்கும் மனிதனின் வாழ்க்கையை மாற்றிவிட முடியாதா என்று ஏங்குகிறான். *"... உலகத்தையும் அவர்கள் உள்ளத்திலே வைத்திருக்கிறார்; ஆதலால் தேவன் ஆதிமுதல் அந்தம் மட்டும் செய்து வரும் கிரியையை மனுஷன் கண்டுபிடியான். பிர. 3:11"* எந்தவொரு மனிதனும் தேவனைப் போல் தான் இருக்கிறான். தேவனுடைய சாயலின்படி படைக்கப்பட்ட ஒவ்வொரு மனிதனுக்குள்ளும் தெய்வத்துவம் இருக்கிறது. ஆனால் உள்ளான மனிதனின் ஆவிக்குரிய கண்கள் குருடாக்கப்பட்டிருப்பதால் தேவனைக் குறித்து அறிந்து கொள்ள முடியாமல் இருக்கிறான். தேவனைக் குறித்த அறிவில்லாத காரணத்தினால் அவனுடைய முயற்சிகள் கடலில் கரைத்த பெருங்காயம் போல வீணாகிக் கொண்டிருக்கின்றன.

மக்களை நல்வழிபடுத்த தேவனை அறியாத ஒரு கூட்ட உலக ஜனங்கள் போராடுகிறார்கள். இயேசுவை ஏற்றுக் கொண்ட, ஆனால் உள்ளான மனிதனின் கண்கள் திறக்கப்படாத நியாயப்பிரமாணத்திற்குட்பட்ட சபையிலுள்ள விசுவாசிகளும் போராடுகிறார்கள். உள்ளான மனிதனின் கண்கள் திறக்கப்பட்ட; புதிய பிரமாணத்திற்குட்பட்ட, தேவனை அறிந்து கொண்ட ஒரு கூட்டத்தாரும் போராடுகிறார்கள். இதில் எந்த கூட்டத்தாருடைய முயற்சி வெற்றியடையப் போகிறது? மூன்றாவது கூட்டத்தார் தான் என்பதை இப்போதைக்கு இரகசியமாக வைத்துக் கொள்ளுவோம். இன்னும் கொஞ்சம் நாட்களில் அவர்களுக்குத் தானாகவே தெரிந்து விடப் போகிறது!

*"என் பரிசுத்த பர்வதமெங்கும் தீங்குசெய்வாருமில்லை; கேடு செய்வாருமில்லை, சமுத்திரம் ஜலத்தினால் நிறைந்திருக்கிறது போல், பூமி கர்த்தரை அறிகிற அறிவினால் நிறைந்திருக்கும். கர்த்தர் சீயோனுக்கு ஆறுதல் செய்வார், அவர் அதின் பாழான ஸ்தலங்களையெல்லாம் தேறுதலடையச் செய்து அதன் வனாந்திரத்தை ஏதேனைப் போலவும், அதன் அவாந்தரவெளியைக் கர்த்தரின் தோட்டத்தைப் போலவும் ஆக்குவார்;* ***(wilderness like Eden, desert like the garden of the Lord)*** *சந்தோஷமும் மகிழ்ச்சியும் துதியின் கீதசத்தமும் அதில் உண்டாயிருக்கும். ஏசா. 11:9, ஏசா. 51:3"*

சரி, இந்த வேலையை நாம் எப்படி செய்து முடிக்கப் போகிறோம்? சாதாரணப்பட்ட வேலையில்லை இது. பூலோகத்தை பரலோகமாக்கும் பெரிய **Assignment!** தான்...

*"நான் என் ஊழியக்காரரின்* ***வார்த்தையை நிலைப்படுத்தி, (confirmed the word of his servant)*** *என் ஸ்தானாபதிகளின் ஆலோசனையை நிறைவேற்றி குடியேறுவாய் என்று எருசலேமுக்கும், கட்டப்படுவீர்கள் என்று யூதாவின் பட்டணங்களுக்கும் சொல்லி, அவைகளின் பாழான ஸ்தலங்களை எடுப்பிப்பவர். ஏசா. 44:26." "கோரேசைக் குறித்து: அவன் என் மேய்ப்பன்; அவன் எருசலேமை நோக்கி நீ கட்டப்படு என்றும்; தேவாலயத்தை நோக்கி: நீ அஸ்திபாரப்படு என்றும் சொல்லி, எனக்குப் பிரியமானதையெல்லாம் நிறைவேற்றுவான் என்று சொல்லுகிறவர் நான். (ஏசா. 44:28)"* தேவன் அவருடைய திட்டத்தைப் பற்றி அறிந்திருக்கிற அவருடைய ஊழியக்காரர்களை வைத்துத் தான் இந்த வேலையை பூமியின் மீது நிறைவேற்றப் போகிறார். நம்மையல்லாமல் அவராகவே தனித்து எதையும் பூமியின் மீது செய்யப் போவதில்லை. நமக்கேன் வம்பு? அவரே பார்த்துக் கொள்வார், நாம் பேசாமல் ஈஸி சேரில் உட்கார்ந்து, முன்னாலும் பின்னாலுமாக ஆடி ஆடி தூங்கலாமே! தாராளமாகத் தூங்கலாம்; அதைப் பற்றியெல்லாம் தேவனுக்குப் பிரச்சனையில்லை. நாம் மாம்ச சரீரமாகிய கூடாரத்தில் இருக்கிறோம்; சரீரத்திற்கு தூக்கம் வரத்தான் செய்யும், அதனால் தாராளமாகத் தூங்கலாம், தேவன் தூக்கத்திற்கு எதிரியல்ல. ஈஸி சேருக்காக தேவனுக்கு நன்றி சொல்லுங்கள்.

ஆனால் பூமியின் மீது தேவனுடைய திட்டத்தை நிறைவேற்றி முடிக்கும் வேலையை நாம் தான்

செய்தாக வேண்டும்; வேறு வழியில்லை. தேவன் பூமியின் மீது தன் திட்டத்தை நிறைவேற்ற நம்மை எவ்விதம் உபயோகப்படுத்தப்போகிறார்? நம்மை எப்படி செயல்பட வைக்கப்போகிறார்? நம் வாயில் இருந்து வெளிவருகிற வார்த்தைகளின் மூலமாகத்தான் என்பதைப் பார்க்கிறோம்! ஆனால் நம் வாயிலிருந்து வருகிற எல்லா வார்த்தைகளையும் தேவனால் உபயோகப்படுத்த முடியாது. ஏனென்றால் தேவனுடைய திட்டத்தைப் பற்றி எதுவும் தெரியாத தேவ பிள்ளைகள் யோசிக்காமல் எதை வேண்டுமானாலும் பேசிக் கொண்டிருப்பார்கள். ஏனென்றால் தங்கள் வாயின் வார்த்தைகள் தான் இந்த பூமியின் மீது நடக்கிறது என்பது பாவம் அப்பாவிகளாக இருக்கிற அவர்களுக்குத் தெரிவதில்லை. அதனால் இருதயத்தில் இருப்பதையெல்லாம் கொட்டித் தீர்ப்பார்கள். அவர்களின் இருதயத்தில் கண்டகண்ட குப்பைகளெல்லாம் கொட்டிக்கிடக்கிறது! விழுந்து போன உலகத்தின் காரியங்களை அவர்கள் பார்க்கிறார்கள்; அவைகள் கண்களின் வழியாக இருயத்தின் சிந்தனைப் பகுதிக்குள் போய்விடுகிறது. பிறகு அதையே சிந்திக்கிறார்கள், அவைகள் படமாக நினைவில் படிகிறது. பிறகு அதையே பேசுகிறார்கள், பேசுவதே நடக்கிறது!

இதனால் தேவனுடைய திட்டம் சிதைவடைகிறது. பூமி இப்போது இருக்கும் நிலைமையை நான் யோசித்துப் பார்த்தேன். உலகத் தோற்றமுதல் ஆண்டாண்டுகாலமாக சாபம் காற்றழுத்த மண்டலங்கள் போல காணப்படுகிறது. சாபம் பலவிதமான பாவங்களையும், அது உற்பத்தி செய்யும் **(production)** சகலவிதமான சீர்கேடுகளினாலும், வியாதிகளினாலும், வருத்தங்களினாலும், துக்கிப்பினாலும், அழுகை புலம்பல்களாலும் சூறாவளிகளை உண்டாக்குகிறது. மனிதன் வந்த சூறாவளிக் காற்றுகளுக்கு மட்டுமல்ல வரப்போகிற சூறாவளிகளுக்கும் சூட்டுவதற்காக பெயர்களை தயாராக வைக்கிறான். அவனுடைய வார்த்தைகளின்படியே புயல்கள் வருகின்றன. தொடர்ச்சியான இப்படிப்பட்ட சூறாவளி காற்றுகளால் பூமியே ஒரு தூசு மண்டலம் போல காணப்படுகிறது. என்ன நடக்கிறது என்பதே யாருக்கும் புரிவதில்லை. மனிதனுடைய வாழ்க்கை மர்மங்கள் **(suspense)** நிறைந்ததாக காணப்படுகிறது. புதிர்களை விடுவிக்க ஆளில்லை.

இப்படிப்பட்ட மோசமான சூழ்நிலையில் தேவனுடைய திட்டம் நிறைவேறுமா? மனிதனால் நிறைவேற்ற முடியுமா என்றால்... நிச்சயமாக முடியும் என்பதே எங்கள் பதில். தேவனால் (நம்மாலும்) கூடாத காரியம் எதுவுமில்லை. தேவன் பூமியின் மீது எதையும் சொல்லி நிறைவேற்றுகிறார் என்பதைப் பார்க்கிறோம். அப்படிப் போலவே மனிதனும் எதையும் சொல்லித்தான் உருவாக்க வேண்டும். அதாவது இரண்டு வசனங்களையும் சேர்த்துப் பாருங்கள். தேவன் தன் திட்டத்தில் இருக்கிற தனது ஊழியக்காரனின் வாயின் வார்த்தையை சரி செய்து; அதை இந்த பூமியின் மீது பேசும்படி செய்கிறார். விசுவாச அறிக்கையின் மூலமாக தேவபிள்ளையின் வாயின் வார்த்தைகள் சரி செய்யப்படுகிறது. விசுவாச அறிக்கை இருதயத்தின் விசுவாசத்தில் இருந்து வெளிவருகிறது. இருதயத்தில் விசுவாசம் கேள்வியினால் (அதாவது சத்தியத்தை சரியானபடி போதிக்கிற பிரசங்கங்களிலிருந்து) வருகிறது. அப்படிப்பட்ட விசுவாசத்தை கட்டியெழுப்புகிற பிரசங்கங்கள் வேத வசனங்களிலிருந்து தயாரிக்கப்படுகிறது. சும்மா அல்ல, வேத வசனங்களை ஆராய்ச்சி செய்து; தேவதிட்டத்தை இந்தப் பூமியின் மீது நிறைவேற்றி முடிக்க பயன்படுகிற வசனங்களை மட்டும் எடுத்து; அதன் மூலமாகத் தயாரிக்கப்படுகிறது.

வேதத்தில் இருக்கிற எல்லா வசனங்களையும் நாம் எடுக்கக்கூடாது என்று சொன்னால் பலருக்கு அது அதிர்ச்சியாக இருக்கிறது. உம்முடைய வசனம் சமூலமும் சத்தியம், **(Your word is true from the beginning)...** சங். 199:160 என்று வசனம் இருக்கிறதே? உண்மைதான், வேதத்தில் எழுதப்பட்டிருக்கும் சகல காரியங்களும் உண்மை. கற்பனை கதைகளும் அல்ல, கற்பனை கதாபாத்திரங்கள் அதில் உலாவரவும் இல்லை. ஆனால் எல்லாவற்றையும் நமக்காக எடுத்துக் கொள்ளச் சொல்லி வேதம் நமக்கு போதிக்கவில்லை.

*"... நீயும் உன் சந்ததியும் பிழைக்கும்படிக்கு, நீ ஜீவனைத் தெரிந்து கொண்டு, **(Choose life)** உபா. 30:19."* வேத வசனங்களை நன்றாக வாசித்து, இரவும் பகலும் தியானித்து, ஆராய்ந்து நாம் செழித்து வாழ்ந்து நன்றாக இருப்பதற்கு தேவையானதை மாத்திரமே அதிலிருந்து தெரிந்தெடுக்கச் சொல்லி வேதம் நமக்குப் போதிக்கிறது. அதைவிட்டுவிட்டு, வேதத்திலிருக்கும் எல்லாமே சத்தியமானவைகள் அதனால் எதை வேண்டுமானாலும் **select** பண்ணலாம் என்று நினைத்து சாபத்தை தெரிந்தெடுத்தால் நாமும் நம் சந்ததியும் பிழைக்க முடியாது; செத்து மடிய வேண்டியதுதான். நாம் எதை தெரிந்தெடுக்கிறோமோ அது நம்மை நிர்பந்திக்கிறது, துரத்துகிறது, பிடிக்கிறது, சிக்க வைக்கிறது.

தேவன் பூமியின் மீது எல்லாவற்றையும் சொல்லி, சொல்லியே உண்டாக்கினார். அதைப் போலவே சொல்லி, சொல்லி, பூமியின் மீது உண்டாக்கும் ரீதியில் தான் நம்மையும் உண்டாக்கியிருக்கிறார். இந்த சத்தியத்தை பெரும்பான்மையான கிறிஸ்தவர்கள் **realize** செய்வதில்லை, நாம் சொல்வது தான் இந்தப் பூமியின் மீது நடக்கிறது என்பதை **agree** பண்ணுவதில்லை. இதைப் பற்றிய விழிப்புணர்ச்சி சபையில்

மிக மிக குறைவாகவே இருக்கிறது; அதனால் வாயில் வந்ததையெல்லாம் பேசுகிறார்கள்; எச்சரிக்க ஆளில்லை. இவர்களின் பேச்சில் பெருமளவு தேவ திட்டத்திற்கு மாறானதையெல்லாம் பூமியின் மீது உருவாக்குவதாகத்தான் இருக்கிறது.

பேசுவதெல்லாம் எப்படி நடக்கும் என்று நாம் சொன்னால் அது அவர்களுக்கு கிண்டலாக வேறு இருக்கிறது! இதைப் பற்றிய விழிப்புணர்ச்சி இல்லாததினால் ஒரு பெரிய பரலோக **Project** தொடர்ச்சியாக தோல்வியை தழுவிக்கொண்டே இருக்கிறது! கீழே வரும் வசனங்களை வாசியுங்கள், யோசியுங்கள்:

தேவன் பூமியின் மீது எல்லாவற்றையும் சொல்**லி**ச்சொல்**லி**யே உருவாக்கினார் *(ஆதி. அதி.1)*. இறந்து போனவர்களின் உடல்களை போட்டு மூடும் பிரேதக் குழியை திறந்தால் ... அடி வயிற்றி**லி**ருந்து குமட்டும் அதன் நாற்றம்! அப்படிப்போலவே சிலருடைய தொண்டை இருக்கிறது. மோசமான வார்த்தைகள் அந்த அளவுக்கு மோசமான **effects**-ஐ பூமியின் மீது ஏற்படுத்துகிறது. இலங்கையை சேர்ந்த ஒரு தோழி எனக்கு உண்டு. ஒரு நாள் ரோட்டில் நடந்து போய்க்கொண்டிருக்கும்போது இரண்டு பேர் ஏதேதோ சொல்லி வாக்குவாதம் செய்தபடி சண்டையிட்டுக் கொண்டிருந்தனர். அதைப் பார்த்துக் கொண்டிருந்த என் தோழி: அங்கே பாரு, "சண்டை நாறுது" என்றாள்! அவளுடைய இலங்கைத் தமிழைக் கேட்டு எனக்கு சிரிப்பு வந்தது. ஆனால் அவள் சொன்ன வார்த்தைகளின் அர்த்தத்தை நினைவு கூறும்போது; இப்போது சிரிப்பு வருவதில்லை. *(ரோமர். 3:13)*

நாக்கு, அது தீக்குச்சி இல்லாமலேயே நெருப்பை பற்ற வைத்துவிடும்! அந்த நெருப்பு நம் வாழ்க்கையையே கொழுத்திவிடும். அற்ப ஆயுசில் பொட்டுன்னு போயிட்டானே என்று ஒப்பாரி வைத்து அழ வேண்டிய சூழ்நிலையை உண்டாக்கும். *(யாக். 3:6)* நாக்கு: அது ஒரு **razor!** *(சங். 52:2)* காட்டு வழியில் நடந்து போய்க்கொண்டிருக்கிற ஒரு மனிதனை பிடித்து அடித்து கொன்று, துண்டு துண்டாக வெட்டி, நெருப்பில் போட்டு வறுத்து எடுக்கிற நாக்கு! அதன் பேச்சு! *(சங். 57:4)* நாவின் வார்த்தைகள்; அது சூறாவளிக் காற்றைப் போல புறப்பட்டு வந்து மனிதனின் வாழ்க்கையையே வேரோடு சாய்த்துவிடும்! சுனாமி என்ற புயல்காற்றினால் பாதிக்கப்பட்ட இடங்களில் இப்போது யாருமே குடியிருப்புகளை ஏற்படுத்துவதில்லை. *(சங். 64:8)*

நாவு என்பது நம் வாயிலிருந்து புறப்படும் வார்த்தைகளைக் குறிக்கிறது. நாம் எதைப் பேசினாலும் சரி; அந்த வார்த்தைகள் பூமியைச் சுற்றி வருகிறது. வார்த்தைகள் அது அனுப்பப்பட்ட நோக்கத்தை செய்து முடித்துவிட்டுத்தான் திரும்பும் என்று வேதம் எச்சரிக்கிறது. *(சங். 73:9)* வாயில் வருவதையெல்லாம் பேசிக் கொண்டு திரிபவர்களுக்கு: வாயிலிருந்து புறப்படும் வார்த்தைகள் குறி தவறாதவன் சுடும் துப்பாக்கி குண்டைப் போன்றது; வேட்டையாடிவிடும் ஜாக்கிரதை! *(சங். 140:11)* வாழ்வா, சாவா? அதை நம் வார்த்தைகள் தான் தீர்மானிக்கின்றன! *(நீதி. 15:4)*

பொய் பேச பேச தேவனை அறிந்து கொள்ளக்கூடிய சாத்தியக்கூறுகள் குறைந்து கொண்டே வருகிறது. ஏனென்றால் பொய் பேசுகிறவன் யாருக்கோ எதற்கோ பயப்படுகிறான். பயம் என்பது ஒருவகையான எதிர்மறையான விசுவாசம் என்று பார்த்தோம். நாம் விசுவாசிப்பது நமக்கு நடப்பதைப் போலவே நாம் பயப்படுவதும் நமக்கு நடக்கும். பொய் வார்த்தைகள் மோசமான, தேவ சித்தத்திற்கு எதிரிடையான விளைவுகளை வாழ்க்கையில் ஏற்படுத்துகிறது. *(எரே. 9:3)* வெட்டு ஒண்ணு துண்டு ரெண்டு என்றாக்கும் சக்தி வார்த்தைகளுக்கு உண்டு!

*"கர்த்தருடைய வார்த்தையைக் கேட்டு, அவருடைய வசனத்தின்படி செய்கிற பலத்த சவுரியவான்களாகிய அவருடைய தூதர்களே, அவரை ஸ்தோத்திரியுங்கள். சங். 103:20"* கர்த்தருடைய வார்த்தையின்படி செய்வதற்காகவே தேவ தூதர்கள் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். அதாவது நம் வாயிலிருந்து புறப்படுகிற கர்த்தருடைய வார்த்தையின்படி அவர்கள் செயல்படுகிறார்கள்; ஏனென்றால் தேவ தூதர்கள் நமக்கு பணிவிடை செய்கிறவர்கள். நம் நாவிலிருந்து புறப்படுகிற வார்த்தையின்படி அவர்கள் செயல்படுவதால்; பார்த்து பேச வேண்டியது அவசியமாயிருக்கிறது. அதாவது வேதத்திலுள்ள நல்ல, ஆசீர்வாதமான, வாக்குத்தத்த வசனங்களை, தேவ திட்டத்தை நிறைவேற்றுகிற வசனங்களாக தேடியெடுத்து பேச வேண்டும். அப்போது தேவதூதர்கள் அந்த வார்த்தைகளின்படி செய்ய புறப்பட்டுப் போகிறார்கள். தேவன்+தூதர்கள்=தேவதூதர்கள்! நமக்குத்தான் அவர்கள் தூதர்கள்; வேதம் நம்மை தேவர்கள் என்று அழைக்கிறது; தேவர்களுக்கு அவர்கள் தூதர்கள், அதாவது வேலைக்காரர்கள்.

நமக்காக தேவன் நியமித்திருக்கும் தேவதூதர்களை நாம் சரியான விதத்தில் பிரயோஜனப்படுத்திக்கொள்ள வேண்டும். தேவனுடைய திட்டம் வெற்றியாக பூமியின் மீது நிறைவேறுவதற்கேதுவாக அவர்களை வேலை வாங்க வேண்டும். நம் வீட்டிலிருக்கும் வேலைக்காரனை நோக்கி வா என்றால் வருகிறான், போ என்றால் போகிறான்! (நாம் வா என்று சொல்லும்போது அவன்

போய்க்கொண்டே இருப்பானானால் நடப்பதே வேறு!) ஆவிமண்டலங்களிலும் நம் தூதர்கள் அப்படித்தான் நமக்காக வேலை செய்கிறார்கள். வேதத்தில் காணப்படும் சகல வாக்குத்தத்த வசனங்களும் தேவனுடைய திட்டத்தை இந்தப் பூமியில் நிறைவேற்றி முடிக்கும் வகையில் தான் எழுதித் தரப்பட்டிருக்கின்றன. அதனால் ஜெப நேரத்தில் வாக்குத்தத்தங்களை சுட்டிக்காட்டி தேவனிடம் பேசுவோம். அப்படி **Claim** பண்ணும்போது தேவனுடைய **assignment** –ஐ வெற்றியாக நடத்தி முடிக்கும் அளவில் நம்மால் ஆளுகை செய்ய முடியும். ஏனென்றால் வேதத்தின் வாக்குத்தத்தங்கள் தேவனுடைய திட்டம் பூமியில் நிறைவேறுவதற்கு ஏதுவாக எழுதப்பட்டிருக்கிறது. அதாவது மீண்டும் பூமி (ஆதி. 1, 2, & 3ஆம் அதிகாரத்தில் பூமியின் மீது சாபம் வரும் வரையிலான வசனங்கள் வரை) அதிகாரங்களில் இருக்கும் வண்ணமாக மாறும் அளவில் அவை எழுதப்பட்டிருக்கின்றன. அதைவிட அதிகப்படியாக மாறும் அளவிலும் எழுதப்பட்டிருக்கின்றன.

கீழ்ப்படுத்தி ... ஆளுகை ... செய்ய கற்றுக் கொண்டோம். அடுத்தபடியாக பண்படுத்தி, காத்துக் கொள்வது எப்படி என்று பார்ப்போம்:

### *3) பண்படுத்தி ...:*

தேவனாகிய கர்த்தர் மனுஷனை ஏதேன் தோட்டத்தில் அழைத்துக்கொண்டு வந்து, அதைப் பண்படுத்தவும் காக்கவும் **(Dress it and to keep it)** வைத்தார். (ஆதி. 2:15). தேவன் தன்னுடைய சாயலாக தான் சிருஷ்டித்த தன்னுடைய பிள்ளைகளை (மனிதனை) ஏதேன் தோட்டத்திற்குள் கூட்டிக்கொண்டு வருகிறார். உலக மனிதர்கள் கூட தன் பிள்ளைகளுக்காக வாங்கும் எந்த பொருளையும், செய்யும் எந்த காரியத்தையும் தனக்கிருப்பதைவிட நல்லதாக, தரம் வாய்ந்ததாக, அதிக வசதி வாய்ப்புகள் உள்ளதாக **(better, more acceptable, greater quality, effective, more advantageous)** வாங்குகிறார்கள், செய்கிறார்கள். இந்த குணாதிசயத்தை மனிதர்கள் இயற்கையாகவே தங்களுடைய சிருஷ்டிகரிடமிருந்து பெற்றிருக்கிறார்கள்.

இப்போது நான் சொல்லப்போவது உங்களுக்கு **Shock** ஆக இருக்கலாம்; என்றாலும் பரவாயில்லை சத்தியத்தை சொல்லியாக வேண்டுமே! தேவன் மனிதனுக்காக உருவாக்கின பூலோகத்தை தானிருக்கும் பரலோகத்தைவிட **better** ஆகத்தான் உருவாக்கினார்! **(O! My God!** அப்படிப்பட்ட பூலோகமா இப்போது இந்த இலட்சணத்தில் இருக்கிறது!) பூமி ஏன் இப்படி ஆகிப் போனது என்பதைப் பற்றி பார்த்து வருகிறோம். மனிதன் தடம் மாறாமல் தேவனுடைய பூலோக திட்டத்தை வெற்றியாக முடித்திருந்திருப்பானானால்; நிச்சயமாக தேவன் இந்த பூலோகத்தை விட **better** ஆன வேறொரு திட்டத்தை மனிதனைக் கொண்டு ஆரம்பித்திருந்திருப்பார்!

என்றாலும் நாம் கவலையில் மூழ்கிப் போக வேண்டிய அவசியமில்லை. தேவன் உருவாக்கிய ஆதி பூமியை விட இன்னும் நல்லவிதமாக அதை உருவாக்கக்கூடிய ஆயுதங்கள் நம் கையில் இருக்கும்போது நாம் ஏன் கலங்க வேண்டும்? *“எங்களுடைய போராயுதங்கள் மாம்சத்துக்கேற்றவைகளாயிராமல், அரண்களை (Strongholds) நிர்மூலமாக்குகிறதற்குத் தேவபலமுள்ளவைகளாயிருக்கிறது. 2 கொரி. 10:4.”* அந்த போராயுதங்களை நாம் *எபே. 6: 14–18* வசனங்களில் பார்க்கலாம். அவைகள் எல்லாமே தேவனுடைய வார்த்தைகளைக் கொண்டு உருவாக்கப்பட்டவைகள் தான். அதனால் அவைகளை எடுத்து நாம் இந்த பூமியின் மீது பேச வேண்டும். பூமியின் மீது காணப்படுகிற சகலவிதமான சாப பாழ்க்கடிப்புகளின் மீது, பாவ சீர்கேடுகளின் மீது, வியாதிகளான கர்ப்ப வேதனைகளின் மீது, தரித்திரத்தின் மீது பேச வேண்டும். அதாவது அவைகள் செயலிழக்கத்தக்கதாக, உருவழிந்து இல்லாமல் போகத்தக்கதாக பேச வேண்டும், பேசிக்கொண்டே இருக்க வேண்டும். பேசிய படி நடக்கும் என்று விசுவாசிக்க வேண்டும். நம் விசுவாசம் தானாகவே நம்முடைய வாயின் அறிக்கை மூலம் வெளியே வந்து விடும்.

பேச பேச பூமி ஆரம்பத்தில் இருந்தது போல ... அதைவிட **better** ஆக, **best** ஆக மாற ஆரம்பிக்கும். இவ்விதமாக நாம் பூமியை பண்படுத்துவோம். பண்படுத்துதல் என்றால்? பூமியை ஏதேனின் மகிமையை விட, அழகைவிட இன்னும் அழகாக கவர்ச்சியாக மாற்றுவது. அதாவது அழகுக்கு அழகு செய்வதைப் போல! **Decorate,(to make something more attractive)** ஒரே நாளில் நடக்கிற விஷயமில்லைதான் என்றாலும் இனிமேல் அது தாமதிப்பதில்லை **(it will not tarry)**! *(ஆப. 2:3)*

### *4) காத்துக் கொள் ... :*

பூமியைக் காப்பாற்றுவோம் என்று தேவனில்லாத உலகத்தார் ஆவேசமாக குரலெழுப்பிக்கொண்டிருக்க ... தேவனை உள்ளே வைத்திருக்கிற தேவ பிள்ளைகள் பூமியா? அதற்கும் எனக்கும் சம்பந்தமில்லை, பரலோகம் தான் எங்க தாய் வீடு என்று சொல்லி பெட்டியையும் படுக்கையையும்

மூட்டை கட்டி தூக்கிக்கொண்டு ரொம்ப தூரம் போயாச்சு! ஹலோ பிரதர், சிஸ்டர் கொஞ்சம் திரும்பி வாங்க! பரலோகம் பத்திரமாகத்தான் இருக்கிறது; எப்போ வேண்டுமானாலும் போய்க் கொள்ளலாம். தேவன் நம்மை நம்பிக் கொடுத்த பூமியைத்தான் காத்துக் கொள்ளாமல் தாரை வார்த்து விட்டோம். இப்போது பூமியைக் காப்பாற்றும் பொறுப்பு நம் கையில் தான் இருக்கிறது. அதைக் காப்பாற்ற வேண்டியது மிகமிக அவசியம்.

அது சரிதான், ஆனால் அது சாத்தியமா? சாத்தியமில்லாத எதுவுமே நமக்கு இல்லை என்பதை விளங்கிக் கொள்ளுவோம். ஏனென்றால் நாம் தேவனைப் போலிருக்கிறோம்! சாத்தியமில்லாத எதையுமே தேவன் நம்மைச் செய்யச் சொல்ல மாட்டார். ஏனென்றால் பூமி அவருடைய பிரதானமான **Assignment.** தன்னைப் போலவே மனிதனை உருவாக்கி; அவனுக்கு ஒரு மாம்சீக கூடாரத்தைக் கொடுத்து; தான் இருக்கும் பரலோகத்தைப் போலவே இன்னொரு பரலோகத்தை உருவாக்கி; ஆனால் காணக்கூடிய ரீதியில் அதை பூலோகமாக வடிவமைத்து கொடுத்த தேவன் விளையாட்டுத்தனமான அர்த்தமில்லாத காரணம் விளங்காத பொறுப்பற்ற காரியங்களை பூமியின் மீது செய்யச் சொல்லி மனிதனை ஏவ மாட்டார் என்பதையும் விளங்கிக் கொள்ளுவோம்.

எப்படி காத்துக் கொள்வது? ஏவாள் சாத்தானின் பேச்சைக் கேட்டு அதன்படி செய்தபோது; பூமியை பாதுகாக்க முடியாமல் போனது. அதாவது பூமி தன் பாதுகாப்பை இழந்தது; அதன் செழிப்பு களவு போனது. அந்த ஆதாம் ஏவாளைப் போல நாமும் சாத்தானின் பேச்சைக் கேட்காமல், கேட்டு அதன் படி செய்யாமல் இருந்தாலே போதும் இந்த பூமியை மீண்டுமாக மீட்டுக் கொள்ளலாம். மீண்டும் பறிபோகாமல் பாதுகாத்தும் கொள்ளலாம். சாத்தானின் பேச்சைக் கேட்டு அனுதினமும் பூமியின் பாதுகாப்பு வேலியை பிடுங்கிப் போடுபவர்கள் வேறு யாராகவாவது இருந்தால் பரவாயில்லை, இயேசுவை ஏற்றுக் கொண்ட தேவபிள்ளைகளாகிய சபை விசுவாசிகளே அவர்கள் என்பது தான் அதிர்ச்சி தரும் தகவல்! புதிய உடன்படிக்கையின் பிள்ளைகளாகிய நமக்கிருக்கும் அனுகூலங்கள் எதுவுமே அன்று ஏதேனில் ஆதாமுக்கும் ஏவாளுக்கும் இல்லை. (ஆனால் இன்று நமக்கில்லாத பல அனுகூலங்கள் அன்று அவர்களுக்கு இருந்தது என்பதும் உண்மை.) இன்றைக்கு இயேசு மகிமையின் நம்பிக்கையாக நமக்குள் இருக்கிறார். அதாவது ஏதேனின் மகிமையை மீட்டுக் கொள்வதற்கேதுவான காரியங்களை நமக்குள் செய்வதற்காக இருக்கிறார். அன்று ஆதாமுக்கு இந்த பாக்கியம் இருந்திருக்கவில்லை.

இப்படி சொல்வது சரியாகுமா? ஆதாம் வாழ்ந்த பூமியின் ஆரம்பக்கட்டத்தில் பூமியில் எந்த குறைபாடும் இல்லை, பாவ சூழ்நிலை இல்லை, சாப சீர்கேடுகள் எதுவுமே இல்லை, பூமியின் மீது ஆசீர்வாத நியமம் இயங்கி வந்தது. இவ்வளவு அனுகூலங்கள் இருந்துமே ஏவாள் சாத்தானின் பேச்சைக் கேட்டு இயங்கினாள் என்றால்; சுமார் **6000 – 6500** ஆண்டுகளாக சாபத்தால் தாக்கப்பட்டு, சூறையாடப்பட்டு, துண்டாடப்பட்டு, கூறுபோடப்பட்ட இந்தப் பூமியில் இருந்து கொண்டு; நாம் எப்படி பூமியை பாதுகாக்க முடியும் என்று தோன்றலாம். கொஞ்சம் பொறுங்கள், அதற்கும் வழி இருக்கிறது சொல்கிறேன்:

தேவன் மனிதனை எல்லாவிதத்திலும் தன்னைப் போலவே, சித்த சுயாதீனம் உள்ளவனாக, தானாக சிந்தித்து, முடிவெடுத்து, செயல்படும் ரீதியில் உருவாக்கினார். தேவன் தனக்கிருக்கும் இந்த சுயாதீனத்தை ஒருபோதும் தவறாக உபயோகித்ததில்லை என்பது மறுக்க முடியாத உண்மை. அதற்காக தன்னைப் போலிருக்கும் மனிதனும் அப்படியே இருப்பான், தவறே செய்ய மாட்டான் என்று உறுதியாக சொல்ல முடியாத ஒரு சூழ்நிலை அக்கால கட்டத்தில் பூமியின் இருந்தது. அதாவது பிரதான தூதனானவன் மனுக்குலத்தின் பாதுகாப்புக்காக ஏதேனில் தான் முதலில் வைக்கப்பட்டிருந்தான். அவன் தவறு செய்து பிசாசாக மாறி தள்ளப்பட்டு விழுந்ததும் இதே பூமியின் மேல் தான். அதனால் அவன் எந்த நேரத்திலும் ஏதேனுக்குள் நுழையவும் முதல் மனிதர்களிடம் பேச்சுக் கொடுக்கும் வாய்ப்பும் கண்டிப்பாக இருந்தது. அந்த வாய்ப்பை சாத்தான் பிரயோஜனப்படுத்திக் கொண்டான்.

தான் செய்யப் போகும் இந்த தவறினால் பூமி இந்த அளவுக்கு பாழாகிப் போகும் என்பது ஆதாமுக்கும் ஏவாளுக்கும் தெரிந்திருக்கவில்லை என்பதே உண்மை! தெரிந்திருக்குமானால் நிச்சயமாக சாத்தானிடம் பேச்சுக் கொடுத்திருக்க மாட்டார்கள், பேசினாலும் அவன் வார்த்தைகளுக்கு கீழ்ப்படிந்திருக்க மாட்டார்கள். ஆனால் நம் நிலவரம் அதுவல்ல; தவறு செய்தால் அதன் பலன் எந்த அளவுக்கு இருக்கும் என்பது நமக்கு நன்றாகவே தெரியும்! விதைப்பின் இரகசியச் செயல்கள் நமக்கு அத்துப்படி! ஏனென்றால் உலக தோற்றமுதல் நடந்தவைகளெல்லாம் நமக்கு திருஷ்டாந்தங்களாக **(Demonstration, testified)** எழுதி கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆனால் ஆதாம், ஏவாளுக்கு இப்படிப்பட்ட விளக்கங்கள் எதுவுமே எழுதித் தரப்படவில்லை. காரணம் அவர்கள் தான் முதல் மனிதர்கள் என்பதால் அது சாத்தியமில்லாமல் போனது.

பட்டால்தான் புத்தி வரும் என்று பெரியவர்கள் தங்கள் பிள்ளைகளைத் திட்டுவதுண்டு; அப்படித்தான் ஆகிப்போனது நம் நிலைமை! எப்படியோ புத்தி வந்ததே... அதற்காக தேவனுக்கு நன்றி சொல்லுவோம். இதைப் பிடித்துக் கொண்டு நாம் உபத்திரவப்படுவது நல்லது, உபத்திரவம் வந்தால்தான் நாம் ஒழுங்காக இருப்போம் என்பதால் உபத்திரவங்களை தேவனே வரவிடுகிறார் என்று சொல்பவர்களை மிகச் சாதாரணமாக சபை வட்டாரத்தில் பார்க்க முடிகிறது. அதை நியாயமாக்க இந்த வசனத்தைத்தான் காட்டுகிறார்கள்: ***“நான் உபத்திரவப்பட்டது எனக்கு நல்லது; அதனால் உமது பிரமாணங்களைக் கற்றுக்கொள்ளுகிறேன். சங். 119:67.”*** உபத்திரவத்தை தேவன் அனுப்பியதாகவும், அவற்றைத் தாங்க முடியாமல் அவர்கள் தேவனிடம் ஓடியதாகவும், தேவனிடம் வந்த பிறகு அவருடைய சட்டதிட்டங்களை அறிந்து கொண்டதாகவும் நம்பிக் கொண்டிருக்கிறார்கள். அந்த நம்பிக்கை தரும் அற்ப சந்தோஷத்தில் கண்ணீர் மல்க காலத்தை ஓட்டிக்கொண்டிருக்கிறார்கள்.

ஆனால் கீழே வரும் முந்தைய வசனம் உபத்திரவங்கள் வந்ததற்கு தேவன் காரணர் அல்ல என்பதைத் தெளிவாக புரிய வைக்கின்றன. ***“நான் உபத்திரவப்படுவதற்கு முன் வழி தப்பி நடந்தேன்; இப்பொழுதோ உம்முடைய வார்த்தையைக் காத்து நடக்கிறேன். சங். 119:67.”*** அதாவது தாவீது உபத்திரவப்படுவதற்கு முன்னதாக வழி தப்பி நடந்திருக்கிறான். போக வேண்டிய பாதையை தவறவிட்டுவிட்டு தவறான பாதையில் சென்று எங்கெங்கோ அலைந்திருக்கிறான் என்பதை மட்டும் புரிந்து கொள்ள முடிகிறது. தேவனுடைய நீதி நேர்மையாக பரிசுத்த வழிகளை விட்டு; தன்னுடைய சுய நீதியின்படி அசுத்தமான பாவ வழிகளில் நடந்ததினாலேயே அவனுக்கு உபத்திரவங்கள் வந்தது என்பதைப் பார்க்கிறோம். தாவீது செய்த பாவங்கள் எல்லோருக்குமே தெரியும், அவற்றையெல்லாம் தேவனா செய்யச் சொன்னார்? பாவங்கள் செய்து உபத்திரவப்பட்டால்தான் என் பிரமாணங்களை கற்றுக் கொள்ள முடியும் என்று ஆலோசனை கொடுத்தாரா? அப்படியானால் தேவன் தான் பாவத்துக்கு காரணர் என்றல்லவா ஆகிறது? என்ன ஒரு மதியீனமான பேச்சு!

தேவனுடைய குணாதிசயங்களை சாத்தானுடையதாகவும், சாத்தானுடைய குணாதிசயங்களை தேவனுடையதாகவும் சித்தரிக்கும் நியாயப்பிரமாணம் சார்ந்த உபதேசங்களால் வந்த குழப்பங்கள்தான் இவைகளெல்லாம். தாவீது பாவம் செய்ததினால்தான் அவனுக்கு உபத்திரவம் வந்தது. அந்த உபத்திரவ சூழ்நிலையில் அவன் தேவனைத் தேடினான்; அவருடைய பிரமாணங்களை அறிந்து கொண்டான். அதனால் பாவங்களிலிருந்து விடுபடக்கூடிய சாத்தியக்கூறுகளை கண்டுபிடித்தான்; அவற்றை செயல்முறைப்படுத்தி பாவங்களிலிருந்து விடுதலையை பெற்றுக் கொள்கிறான். (1 இராஜா 1:4)

பூமியைக் கீழ்ப்படுத்தி ஆளுகை செய்து; பண்படுத்தி காத்துக் கொள்வதற்கு முன்னதாக இன்னொரு முக்கியமான வேலை இருக்கிறது. அது என்னவென்றால் முதலில் பூமியை மீட்டுக் கொள்ள வேண்டும். ... உலகத்தைச் சுதந்தரிப்பான் என்கிற வாக்குத்தத்தம் ஆபிரகாமுக்காவது அவன் சந்ததிக்காவது நியாயப்பிரமாணத்தினால் கிடையாமல் விசுவாசத்தினால் வருகிற நீதியினால் கிடைத்தது. ரோமர். 4:13. இந்தப் பூமியை நாம் கைப்பற்றி நமக்கு சொந்தமாக்க வேண்டும். எப்படி? வாக்குத்தத்தங்கள் வழியாகத்தான்! வேதத்தில் தேவன் ஆபிரகாமுக்கும் அவனுடைய விசுவாச சந்ததியினராகிய நமக்கும் எழுதிக் கொடுத்திருக்கும் ஆயிரக்கணக்கான வாக்குத்தத்தங்கள் ஒவ்வொன்றும் ஏதேனை நோக்கியே பயணம் செய்கின்றன. ஆதி. 1, 2 அதிகாரங்கள் வரையிலும் பூமி மனிதனுக்கு சொந்தமானதாகத்தான் இருந்தது; 3 வது அதிகாரத்தில்தான் அதைச் சாத்தான் கைப்பற்றுவதைப் பார்க்கிறோம். சாத்தானிடமிருந்து பூமியை மீண்டுமாக பிடுங்கி, நமக்கு சொந்தமாக்கிக் கொள்ளவே தேவன் வாக்குத்தத்தங்களை எழுதிக் கொடுத்தார். எந்தவொரு வாக்குத்தத்தத்தை எடுத்துக் கொண்டாலும் சரி; அதில் ஏதேனின் சாயலைப் பார்க்க முடியும், ஏதேனின் மகிமை அதில் **reflect** ஆவதை பார்க்க முடியும்!

நாம் வாழும் இந்தப் பூமியை மீண்டும் ஏதேனாக மாற்ற முதலில் நாம் அதை, நமக்குச் சொந்தமாக்க வேண்டும். இந்த பூமியின் சகல செழிப்புக்களையும் நம் ஆளுகைக்குக் கீழாக கொண்டு வர வேண்டும். இப்போது நாம் பார்க்கும் பூமியின் சகல நல்ல வாழ்வாதாரங்களும் 99% தேவனில்லாத ஜனங்களிடத்திலும், பெயர்கிறிஸ்தவர்களிடத்திலும், நியாயப்பிரமாணத்திற்கு கீழ்ப்பட்டவர்களிடத்திலும் மண்டிக் கிடக்கின்றன. புறமதஸ்தர்கள் தேவனை அறியாமலிருக்கிறபடியினால்; அவர்கள் சுபாவத்தின்படி நல்லவர்களாகவே இருந்தாலும், அவர்கள் தேவனுடைய திட்டத்தை செயல்படுத்த திராணியில்லாதவர்களாக இருக்கிறார்கள். அந்த ஐஸ்வரியங்களை நாம் சுதந்தரிப்போமானால்; வாக்குத்தத்தங்களின் வழியாக பயணம் செய்து தேவனுடைய திட்டத்தை இந்தப் பூமியின் மீது நிறைவேற்றி முடிப்பவர்களாக காணப்படுவோம் அல்லவா?

இழந்து போன ஆதி மேன்மையை, மகிமையை இந்தப் பூமியின் மீது கொண்டு வருவதுதான் தேவனுடைய நோக்கமாயிருக்கிறது. பெயர்க்கிறிஸ்தவர்களும் ஏறக்குறைய புறமதஸ்தர்களைப் போலத்தான் செயல்படுகிறார்கள். தேவனுடைய திட்டத்தைப் பற்றியெல்லாம் இவர்களுக்கு எதுவும் தெரியாது.

நியாயப்பிரமாணத்திற்கு கீழ்ப்பட்டிருக்கும் தேவபிள்ளைகள் இன்னமும் விடுதலையாகாமலிருக்கிறார்கள். சத்தியம் இன்னமும் வெளிப்படாததினால் தாங்கள் என்ன செய்கிறோம் என்பதே தெரியாமல் இடக்குமடக்காக எதையாவது செய்து மாட்டிக்கொள்கிறார்கள். தாங்கள் அளவுக்கதிகமான தேவபக்தியில் நடப்பதாக நினைத்துக் கொண்டு; தங்கத்தை புறக்கணித்துவிட்டார்கள். தேவனுடைய திட்டத்திற்கு எதிரியான சாத்தானும் அவனுடைய தூதர்களும் தங்களுடைய விக்கிரக அலங்கரிப்புகளுக்காக அவற்றை எடுத்துக் கொண்டு போய்விட்டார்கள்! உலக தேசங்களின் பொருளாதாரமே தங்கத்தின் மேல் தான் நிற்கிறது. பணத்திற்கு பின்னால் நின்று தங்கம் தான் பேசுகிறது; ஒரு நாட்டின் செல்வ வளத்தை தங்கத்தால் தான் மதிப்பிடுகிறார்கள், இதை தங்கப் பிரமாணம் **(Gold standard)** என்று குறிப்பிடுகிறார்கள். நிலைமை இப்படி இருக்க, தங்கக்கட்டிகளை அவனிடம் கொடுத்துவிட்டு; மண்ணாங்கட்டிகளை வைத்துக் கொண்டு தேவனுடைய திட்டத்தை முடிக்க புறப்பட்டிருக்கிறோம்! பணத்தைத் தங்கத்தின் மீது முதலீடு செய்யுங்கள்! பூமியின் கடைசி மனிதன் வரைக்கும் பூரண சுவிசேஷத்தின் இரகசியத்தை எடுத்துச் செல்ல வேண்டிய முக்கியமான வேலை நமக்கு கொடுக்கப்பட்டிருக்கிறது.

சுவிசேஷம் அறிவிக்க பணம் தேவையில்லை என்று சாத்தான் விடும் டுபாக்கூர் கதைகளை நம்பாதிருங்கள். தேவபிள்ளைகள் பணக்காரர்களாக இருக்கக்கூடாது, கலர் சட்டை போடக்கூடாது, பூ வைக்கக்கூடாது, நகை போடக்கூடாது, முடியை பின்னக்கூடாது, செருப்பு போடக்கூடாது, வீடு வாசல், தோட்டம் தொறவு வாங்கக்கூடாது, பேங்கில் அக்கௌண்ட் இருக்கக்கூடாது, காரில் போகக்கூடாது ... இப்படி ஏகப்பட்ட கூடாது, கூடாதுகளை கேட்டுக் கேட்டு, அதன்படி நடந்து, நடந்து சில தலைமுறையே ஒன்றுமில்லாமல் போய்விட்டது! தன்னுடைய பிள்ளைகள் அனுபவிக்க வேண்டும் என்பதற்காக பார்த்து பார்த்து ஏற்படுத்தின செல்வச் செழிப்புகளை வேண்டாம் என்று உதறித் தள்ளிவிட்டு; பரிதாபமாக செத்துப் போன கடந்த கால தேவபிள்ளைகளின் கல்லறைத் தோட்ட வாசலோரம் அழுது கொண்டு நிற்கிறார் நம் தேவன் இயேசு!

***“(இயேசு) ... நகரத்தைப் பார்த்து, அதற்காகக் கண்ணீர் விட்டழுது, உனக்கு கிடைத்த இந்த நாளிலாகிலும் உன் சமாதானத்துக்கு ஏற்றவைகளை நீ அறிந்திருந்தாயானால் நலமாயிருக்கும், இப்பொழுதோ அவைகள் உன் கண்களுக்கு மறைவாயிருக்கிறது. உன்னைச் சந்திக்குங்காலத்தை நீ அறியாமற்போனபடியினால் உன் சத்துருக்கள் உன்னைச் சூழ மதில்போட்டு, உன்னை வளைந்துகொண்டு, எப்பக்கத்திலும் உன்னை நெருக்கி, உன்னையும், ... உன் பிள்ளைகளையும் தரையாக்கிப்போட்டு, உன்னிடத்தில் ஒரு கல்லின்மேல் ஒரு கல்லிராதபடிக்கு செய்யும் நாட்கள் உனக்கு வரும் என்றார். லூக். 19: 41–44”***

நாம் பூமியில் சமாதானமாக வாழ்ந்திருக்க தேவையான காரியங்களை அறியாமல் போனபடியினால்; நமக்கு ஏற்பட்ட பேரிழப்புகள் ஒன்றல்ல, இரண்டல்ல ... அது எண்ணிக்கைக்கு அடங்காததாயிருக்கிறது. தேவனைக் குறித்த அறிவில்லாததினால்; வசனத்தைக் குறித்த வெளிப்பாடு இல்லாததினால், பிரகாசமுள்ள மனக்கண்கள் இல்லாததினால்; சாத்தான் சாபத்தை தனக்கு அனுகூலமாக்கிக் கொண்டு நம்மை சுற்றி வளைத்தான். நமக்கு யாரும் சத்தியத்தை சொல்–க் கொடுக்காத காரணத்தினால் நம் வாழ்க்கை சாத்தானால் நசுக்கப்பட்டது. அதைவிட பரிதாபம் நம்முடைய அறியாமையினால்; சத்தியத்தை நம்முடைய பிள்ளைகளுக்கு சொல்–க்கொடுக்க முடியாமல் போனதினால் அவர்களுடைய வாழ்க்கையும் சூறையாடப்பட்டது.

ஆனால் தேவன் தன்னுடைய அநாதி அன்பினால், நித்திய கிருபையினால் எங்களுக்கு சத்தியத்தை வெளிப்படுத்தினார். பிரசங்கங்களினாலும், பிரசங்கியார்களினாலும் குழப்பப்பட்டிருந்த என் குழப்பத்தை தீர்க்கும் வண்ணமாக தன்னை வெளிப்படுத்தினார். எங்களுக்குச் சொல்லப்பட்டதை இன்று நாங்கள் உங்களுக்குச் சொல்லுகிறோம். ***“அசட்டைக்காரரே, பாருங்கள், பிரமித்து அழிந்துபோங்கள்! உங்கள் நாட்களில் ஒரு கிரியையை நான் நடப்பிப்பேன், ஒருவன் அதை உங்களுக்கு விவரித்துச் சொன்னாலும் நீங்கள் விசுவாசிக்கமாட்டீர்கள் என்று சொல்–யிருக்கிறபடி, உங்களுக்கு நேரிடாதபடிக்கு எச்சரிக்கையாயிருங்கள் ... அப். 13:41”*** என்று சொல்லி எச்சரிக்கிறோம்.

எங்களுக்கு சத்தியம் பிரசங்கிக்கப்பட்டபோது அதை அசட்டை பண்ணாம–ருக்க தேவன் உதவி செய்தார். காது கொடுத்து கேட்டேன்; வார்த்தைகளை கவனித்தேன்; உள்வாங்கினேன். பிதாவாகிய தேவன் தன் ஒரே பிள்ளை இயேசுவின் மூலமாக சிலுவையில் செய்த காரியங்களை ஒரு பிரசங்கியார் விவரித்தபோது பிரமிப்புடனும், ஆச்சரியத்துடனும், ஆசையாக கேட்டேன். தினம் தினம் தொடர்ச்சியாக கேட்டேன். திரும்பத் திரும்ப கேட்டேன் **CD** க்களை வாங்கி போட்டு கேட்டேன், குறிப்பெடுத்தேன். கண்கரிக்க, தலைவ–க்க தூங்காமல் விழித்திருந்து தேவனுடைய வார்த்தைகளை **absorb** செய்தேன். என்ன செய்வது? சத்தியத்தை அறிந்துக் கொள்ள வேண்டுமானால் அதற்கு கஷ்டப்பட வேண்டியதாயிருக்கிறது, கிரையம் செலுத்த வேண்டியதாயிருக்கிறது. பூமி சாபத்துக்கு அனுகூலமாக

இருக்கிறபடியினால் அதற்கு எதிராக, அதாவது சாப பிரமாணத்தை எதிர்த்து ஆசீர்வாத பிரமாணத்தை இயக்க வேண்டியதாயிருக்கிறது. புவியீர்ப்பு பிரமாணத்தை எதிர்த்து ஆகாயவிமானம் **take off** ஆகி வானத்தில் பறப்பதைப் போல செயல்பட வேண்டியதாயிருக்கிறது.

அதனால்தான் தேவனுடைய திட்டத்தில் இருக்கும் தேவனுடைய பிள்ளைகளின் செயல்களைப் பாரத்தால் அவர்கள் ஏதோ சர்க்கஸ் காட்டுவதைப் போலத் தோன்றும்! சர்க்கசில் கயிற்றின் மேல் நடந்து சாகசங்கள் செய்வதைப் பார்த்திருப்பீர்கள்! எரிந்து கொண்டிருக்கும் நெருப்பு சுருளுக்குள் பாய்ந்து செல்வதையும், சிங்கத்தின் வாய்க்குள் தலையை விடுவதையும், தலைகீழாக சைக்கிள் ஒட்டுவதையும் பார்த்து ஆச்சரியத்துடன் கைதட்டி சந்தோஷப்பட்டோமே! சத்தியத்தை அறிந்து கொள்ள, அதை செயல்முறைப்படுத்தி தேவதிட்டத்தைப் பூமியின் மேல் செய்ய தேவபிள்ளைகள் எடுக்கும் ஆவிக்குரிய ரீதியிலான முயற்சிகள் இப்படித்தான் இருக்கிறது பாருங்கள்!

ஆதி. 1, 2ம் அதிகாரத்தில் பூமியின் மேலாக இருந்த சகல ஐசுவரியங்களும், செல்வச் செழிப்பும், சுகவாழ்வும் 3ம் அதிகாரத்திலிருந்து துவக்கி வைக்கப்பட்ட சாபத்தால் உள்வாங்கப் பட்டு, விழுங்கப்பட்டுப் போனது! கொஞ்சம் கொஞ்சமாக காலப்போக்கில் சகல ஆசீர்வாதங்களும் பூமிக்குள் புதையுண்டு போனது. பூமியதிர்ச்சி ஏற்படும் போது விழுங்கப்பட்டுப் போன மொஹஞ்சதரோ, ஹாரப்பா கதையாகிப் போனது. பூமி உருவாகிய நாளிலிருந்து காலம் என்ற பிரமாணம் இயங்கிக் கொண்டிருக்கிறது. அந்த கால ஓட்டத்தின் வெகுதூரத்திற்கு வந்துவிட்ட நாம் சத்தியத்தை அறிந்து கொள்ள வேண்டுமானால் கஷ்டப்படத்தான் வேண்டியதாயிருக்கிறது பாருங்கள்! வேதத்தை வாசித்து; வார்த்தைகளைத் தோண்டி ஆராய்ச்சி நடத்த வேண்டியதாயிருக்கிறது!

## *தங்கம்!:*

*கர்த்தருடைய வேதம் குறைவற்றதும், ஆத்துமாவை உயிர்ப்பிக்கிறதுமாயிருக்கிறது; ... அவைகள் பொன்னிலும், மிகுந்த பசும்பொன்னிலும் விரும்பப்படத்தக்கதும், சங்: 19: 7, 10.* தங்கத்துல நகைகள் போட்டுக்கறது சரியா? தவறா? என்று இப்போது பட்டிமன்றம் நடத்த வரவில்லை. இயேசுகிறிஸ்துவின் பூரண சுவிசேஷத்தின் ஒளிக்குள் பிரவேசித்திருக்கிற உங்களுக்கு ஒவ்வொன்றாக சொல்லிக்கொடுக்க வேண்டிய அவசியமுமில்லை. ஒரு முக்கியமான ஆவிக்குரிய சத்தியத்தை விளக்குவதற்கு, விளங்கிக்கொள்வதற்கு உதாரணமாக தங்கத்தை எடுத்துக் கொண்டேன்.

பூமியை சாபம் தாக்கியதிலிருந்தே மேலிருந்த பல காரியங்கள், செழிப்பான பூமியின் மேற்பகுதி காலப்போக்கில் கொஞ்சம்கொஞ்சமாக புதையுண்டு கடைசியில் பூமியின் மிக ஆழமான பகுதிகளுக்குள் போய்விட்டன; அதில் தங்கமும் ஒன்று! என்றும் மங்காப் புகழுடன் இருந்து வரும் தங்கம் ஆபரணங்கள் செய்வதற்கு மட்டுமல்ல, அநேக நடுத்தர குடும்பங்களின் ஆபத்து கால காப்பாளனாகவும் இருந்து வருகிறது. தங்கம் பூமிக்கடியில் பாறைகளுக்கு நடுவே கொடிபோல் பரவிக் கிடக்கிறது. இந்த தங்கப்படிகக் கற்கள் அதிக ஆழங்களில் காணப்படுவதால்; தங்கத்தை சுரங்கம் தோண்டிதான் வெட்டி எடுக்க வேண்டியதாயிருக்கிறது.

முதலில் தங்கத்தை தேட குழிகள் தோண்டி ஆராய்வார்கள். தங்கம் இருப்பது தெரிந்ததும் அந்த இடத்தில் தொடர்ந்து மண்ணை குடைந்து கொண்டே செல்வார்கள். மண் சரிந்து விழாமல் இருக்க பக்கவாட்டில் அடைப்புகளை ஏற்படுத்துவார்கள். 200 அடி வரையிலும் ஏணி வைத்து இறங்குவார்கள். அதற்கு கீழ் செல்லும்போது இரும்புக் கூண்டுக்குள் மனிதர்கள் அமர்ந்து கருவிகளுடன் இறங்குவார்கள். கூடவே டெலிபோன் தகவல் தொடர்புகள் இருந்து கொண்டே இருக்கும்.

சுமார் 2,300 மீட்டர் ஆழமுள்ள ஒரு தங்கச் சுரங்கத்தை பார்த்துவிட்டு வந்த பிரெஞ்ச் எழுத்தாளர் டாக்டர் லூக் டூர்ட்டேன் தன்னுடைய புத்தகத்தில் தன் அனுபவத்தை எழுதியிருக்கிறார். அதிலிருந்து சில பகுதிகள்: "மோரோ வெல்ஹோ" என்ற புகழ்பெற்ற அந்த தங்கச் சுரங்கம் ரியோ டி ஜெனிரோவிலிருந்து சுமார் 400 கி.மீ. தொலைவில் இருக்கிறது. 16 மணிநேர பயணத்திற்கு பிறகு, நாலுபக்கமும் காடால் சூழப்பட்ட ஆழமான பள்ளத்தாக்குக்குள் இறங்கிச் சென்றாராம். தங்க அடுக்கு கீழே சாய்ந்து செல்லுகிறது. சுரங்கத் தலைவர் கூடவே வருகிறார். முதல் அடுக்கில் நல்ல வெளிச்சம் இருந்தது. இனிவரும் ஆழமான இடங்களை குளிர்விப்பதற்காக ஏற்பாடு செய்யப்பட்டிருக்கும் காற்றோட்ட அமைப்பிலிருந்து வரும் மைனஸ் 4 டிகிரி காற்று வெடவெடக்க வைக்கிறது.

முதல் 700 மீட்டர் குடைவுக் கிணற்றின் வழியாக குறுகலான ஒரு உலோகக் கூண்டில் சென்று; இரண்டாவது குடைவை அடையலாம். பிறகு அடுத்த குடைவு கிணறு வழியாக கீழே செல்ல வேண்டும். காற்று அதிக வெப்பமடைகிறது, கடல் மட்டத்திற்கு கீழ் வந்தாகிவிட்டது. அடுத்த குடைவுக் கிணற்றின் காற்று முகத்தை சுட்டது. தணிவான கூரைக்கு அடியில் குனிந்தபடியே தான் நடக்க வேண்டியதாயிருந்தது.

சத்தமிடும் இயந்திரங்களை நோக்கி சென்றோம். அங்கே கண்ட காட்சி ... கல்நெஞ்சையும் உருக்கிவிடும். அடர்த்தியான புழுதிப்படலத்திற்கிடையே சுரங்கத் தொழிலாளர்கள் இடுப்புக்கு மேல் உடுப்பின்றி வியர்வை வழிந்தோட வேலை செய்கின்றனர். தண்ணீர் பாட்டில்கள் முடிவில்லாமல் தொடர்ச்சியாக கைமாறி சென்று கொண்டே இருக்கிறது! வெட்டி கீழே தள்ளப்படும் கனிப்பாளங்களை தொட முடியாது, அவை 57 டிகிரி வெப்பமுடையவை!

சகிக்க முடியாத இந்தப் பயங்கரப் பாடுகளை அனுபவித்து அந்தச் சுரங்கத் தொழிலாளர்கள் நாளொன்றுக்கு 10 கிலோ கிராம் தங்கத்தை எடுக்கின்றனர். மனிதன் அந்தகாரத்திலும் மரண இருளிலும் இருக்கிற கற்களைக் கடையாந்தரமட்டும் ஆராய்ந்து தேடி, இருளுக்கும் அங்கே முடிவுண்டாக்குகிறான். ***"கன்மலைகளுக் குள்ளும் நீர்கால்களை வெட்டுகிறான்; அவன் கண் விலையுயர்ந்த எல்லாவற்றையும் காணும். யோபு. 28: 3, 10"***

பூமிக்கடியில் புதைக்கப்பட்டுப்போன பொன்னின் நிலைமையில்தான் வேத வசனங்களின் இரகசியங்களும் இருக்கிறது. ஆரம்பத்தில் மேலோட்டமாக எளிதாக புரிந்து கொள்ளத்தக்க விதத்தில் இருந்த தேவனுடைய வார்த்தைகளின் அர்த்தம்; சாப ஓட்டத்தால் காலப்போக்கில் உள்வாங்கப்பட்டுப்போனது. ஆதி. 1, 2 அதிகாரங்களில் மனிதனின் ஆவி அவனுடைய சரீரத்தை மேற்கொண்டு மேலான நிலைமையில் இருந்தது. அதனால் அவனால் தேவனுடைய வார்த்தைகளை எளிதாக புரிந்து கொள்ள முடிந்தது, அவருடன் பேச முடிந்தது. ஆனால் இன்றோ ... ஒன்றல்ல, இரண்டல்ல, உலக தோற்ற முதல் ஆயிரமாயிரம் ஆண்டுகளாக புதைக்கடிக்கப்பட்டுப்போன வேதத்தின் இரகசியங்கள்! அதை புரிந்து கொள்ள மனிதன் எடுக்கும் ஆவிக்குரிய ரீதியிலான பாடுகள்; இந்த தங்கச் சுரங்கத் தொழிலாளர்களின் பாடுகளையே ஒத்திருக்கிறது.

ஆரம்ப ஏதேனில் மேலோட்டமான ஆற்றங்கரையோரங்களில் பொன் விளைந்து கொண்டிருந்தது! (ஆதி. 2:11). பூமியின் மீது சாபப் பிரமாணம் இயங்க ஆரம்பித்த பிற்பாடு மேலே இருந்த எல்லாமே புதைக்கப்பட்டுப் போன சோக நிகழ்வைப் பார்த்து வருகிறோம். தங்கம் பாறைகளுக்கு நடுவே கொடிபோல படர்ந்து விரிந்து செல்வதைப் பார்த்தாலே முற்காலத்தில் அது ஆறாக ஓடியிருப்பதைக் யூகிக்கலாம். வேதத்தின் இரகசியங்களை கண்டுபிடிக்க வசனங்களின் பூட்டை உடைக்க வேண்டியதாயிருக்கிறது. அதற்கு பரிசுத்தாவியானவர் நமக்கு உதவி செய்கிறார்.

***"வெண்கலக் கதவுகளை உடைத்து, இருப்புத் தாழ்ப்பாள்களை முறித்து, அந்தகாரத்தில் இருக்கிற பொக்கிஷங்களையும், ஒளிப்பிடத்தில் இருக்கிற புதையல்களையும் உனக்குக் கொடுப்பேன்; ... ஏசா. 45:4"*** இரும்புத் தாழ்பாள்களையுடைய வெண்கலக் கதவுகளைப் போட்டு அடைத்து; வசனங்களின் உட்பொருளை அறிந்து கொள்ளாதபடி சாத்தானின் செயல்பாடுகள் இருப்பதைப் பார்க்கிறோம். என்றாலும் பரிசுத்தாவியானவர் விடுவதாக இல்லை! நமக்கிருக்கும் அபிஷேகத்தை உபயோகித்து வசனத்திற்குள்ளாக சுரங்கப்பாதைகள் அமைத்து இறங்கும்படி செய்கிறார்! வசனங்களுக்குள் புதைக்கப்பட்டுக் கிடக்கும் ஆசீர்வாதங்களை அடைய நாம் காலம் என்ற பிரமாணத்தைத் தாண்டி பயணிக்க வேண்டியதாயிருக்கிறது. ஆதியி**லி**ருந்த மேன்மையான வாழ்க்கையை அடைய, அதைவிட மேன்மையானதாக அதை மாற்ற ஆதியாகமம் 1, 2 அதிகாரங்களுக்குள் பிரவேசிக்க வேண்டியதாயிருக்கிறது. ஏனென்றால் தேவனுடைய பரிபூரண திட்டம் அங்கே தான் வெளிப்படுகிறது. தேவனுடைய விருப்பம், அவருடைய சுபாவங்கள், அவர் செயல்படும் விதம், முக்கியமாக வார்த்தைகளை உபயோகித்து அவர் எல்லாவற்றையும் உருவாக்கும் அற்புதமான காட்சிகள் இவையெல்லாவற்றையும் இந்த அதிகாரங்களில்தான் பார்க்க முடியும். மொத்தத்தில் தெய்வத்துவத்தின் பரிபூரணத் தன்மைகளை தேவன் அந்த அதிகாரங்களில் தான் வெளிப்படுத்தியிருக்கிறார். இந்த அதிகாரங்களை தியானிக்கும் போதெல்லாம் பரலோகத்திற்குள் இருக்கும் உணர்வு ஏற்படுகிறது.

பரிசுத்தாவியானவருடன் வசன ஆழங்களுக்குள் இறங்கும் வெளிப்பாடுகள் பொன்னைப் போல விலையேறப்பெற்றது. சுரங்கத்தில் இருந்து எடுக்கப்படும் பொன் அப்படியே பயன்பாட்டுக்கு வந்து விடுவதில்லை. அது பல கால கட்டங்களையும், செயல்பாட்டுக் கட்டங்களையும் கடந்து வருகிறது. அதை 1063 டிகிரி சென்டிகிரேடு வெப்பநிலையில் உருக்கி; தகடாக அடித்து, கம்பியாக நீட்டி நாணயங்களாகவும், ஆபரணங்களாகவும் தயாரிக்கிறார்கள். அதற்குப் பிறகுதான் அது மக்களின் பயன்பாட்டுக்கு வருகிறது. அதைப் போலவே பெற்றுக் கொண்ட வெளிப்பாட்டை உலகத்துக்கு, உலக ஜனங்களுக்கு, சபைக்குள் இருக்கும் தேவ பிள்ளைகளுக்கு அறிவிக்க பரிசுத்தாவியானவர் சபையில் ஊழியங்களையும், வரங்களையும் ஏற்படுத்தியிருக்கிறார்.

எந்த ஊழியக்காரர்களையும் நம்பக்கூடாது; பைபிளை வாசித்தாலே போதும் என்று பேசிக்கொண்டிருப்பவர்கள் தங்களை அதிக அறிவுள்ள மேதாவிகளாக நம்பிக் கொண்டிருக்கலாம். ஆனால் நான் அப்படி நம்புவதில்லை. தங்கச் சுரங்கத்தி**லி**ருந்து வெட்டி எடுக்கப்படும் தங்கப் பாளங்களை தொட

முடியாது, அவை 57 டிகிரி வெப்பமுடையவை! பைபிளை வாசித்தாலே போதும்; யாரும் எங்களுக்கு உபதேசிக்க வேண்டியதில்லை என்ற பெருமையினால் சூடுபட்டவர்களைக் கொண்டு இன்றைக்கு சபைகள் நிரம்பி வழிகின்றன.

## போதனைகள் அவசியமா?

***"நீங்கள் அவராலே பெற்ற அபிஷேகம் உங்களில் நிலைத்திருக்கிறது, ஒருவரும் உங்களுக்குப் போதிக்க வேண்டுவதில்லை, அந்த அபிஷேகம் சகலத்தையுங் குறித்து உங்களுக்குப் போதிக்கிறது; ... 1 யோவான். 2:27"*** என்ற வசனத்தை காட்டிவிடுகிறார்கள். மேலோட்டமாக பார்க்கும் போது அப்படித்தான் தோன்றுகிறது. ஆனால் அப்படி அர்த்தம் எடுக்கக்கூடாது என்பதை நாம் பார்த்து வருகிறோம். வசனங்களை ஆராய வேண்டும்; அதன் ஆழங்களுக்குள் இறங்க வேண்டும், வெண்கலக்கதவுகளை உடைத்து, இரும்புத் தாழ்பாள்களை முறிக்க வேண்டியதாயிருக்கிறது. இதற்கு போதகர்களும், பிரசங்கங்களும் தேவையாயிருக்கிறது.

*தேவனானவர் சபையிலே... போதகர்களை... ஏற்படுத்தினார். 1 கொரி. 12:28*

*... எனக்கு ஒப்புவிக்கப்பட்ட பிரசங்கத்தினாலே தமது வார்த்தையை வெளிப்படுத்தினார். தீத்து. 1:4*

அப்படியானால் ஏன் யாரும் போதிக்கவேண்டியதில்லை என்று வருகிறது? அதாவது பிரசங்கியார் சொல்**லி**க்கொண்டு போகிற காரியங்களையெல்லாம் அப்படியே எடுத்துக் கொள்ளக்கூடாது என்று தான் அர்த்தம். கண்ணை மூடிக்கொண்டு வாய்க்குள் எதைப் போட்டாலும் லபக்கென்று விழுங்கி விடும் காக்கைக்குஞ்சைப் போல இருக்கக்கூடாது என்று தான் சொல்லப்பட்டிருக்கிறது. பிரசங்கியார் சொல்வது சரிதானா என்று சரிபார்க்க வேண்டும். "பெரோயா" பட்டணத்தார் அப்படித்தான் செய்தார்கள்.

*அந்த பட்டணத்தார் மனோவாஞ்சையாய் வசனத்தை ஏற்றுக்கொண்டு, காரியங்கள் இப்படியிருக்கிறதா என்று தினந்தோறும் வேதவாக்கியங்களை ஆராய்ந்து பார்த்ததினால் , தெசலோனிக்கேயில் உள்ளவர்களைப் பார்க்கிலும் நற்குணசா**லி**களாயிருந்தார்கள். அப். 17:11*

என்ன சொல்ல வருகின்றார் என்றால்; "பெரோயா" பட்டணத்தார் பிரசங்கத்தைக் மிகவும் விருப்பத்துடன் **(willingness)** கேட்டார்கள். கேட்டு, அதை அப்படியே விழுங்கி விடாமல்; பிரசங்கத்தை வசனத்தோடு ஒப்பிட்டுப் பார்த்து காரியங்கள் இப்படியிருக்கிறதா என்று ஆராய்ந்து **(search)** சரிபார்த்தார்கள் என்று அறிந்து கொள்ளலாம். அப்படி ஆராய்ச்சி செய்து எடுத்துக் கொண்டதினால்; அவர்கள் நற்குணசா**லி**களாயிருந்தார்கள் **(magnificent)** என்பதை அறியலாம். பள்ளிக்கூடத்தில் படிக்கும் மாணவர்களுக்கு பாடப்புத்தகங்கள் இருக்கின்றன, முதுகில் ஏற்றி கழுதையைப்போல சுமந்து செல்கிறார்கள். அவர்களே படித்துக் கொள்ளலாமே, பிறகு வாத்தியார் எதற்கு? எனக்கு நன்றாக தமிழ் வாசிக்கத் தெரியும், ஆங்கிலமும் தெரியும், அதனால் நானே படித்துக் கொள்வேன், வாத்தியார் தேவையில்லை என்று உங்கள் மகன் உங்களிடம் சொன்னால்...?

கவனியுங்கள், வாத்தியார் கண்டிப்பாகத் தேவை. நீங்களோ நானோ வாத்தியார் இல்லாமல் படித்திருந்தோமானால் ஒன்றாம் வகுப்பை விட்டு வெளியே வந்திருக்க மாட்டோம்! அதற்காக வாத்தியார் மிகச் சரியாக, நூறு சதவிகிதம் குறைபாடில்லாமல்தான் பாடத்தை சொல்**லி**த் தருகிறார் என்றும் சொல்**லி**விட முடியாது. அவர் கற்றுக் கொண்டதை நமக்குச் சொல்**லி**த் தருகிறார் அவ்வளவுதான். அவர் சரியாகத்தான் கற்றுக் கொண்டு வந்தார் என்றும் சொல்**லி**விட முடியாது. உலகளவில் எந்தவொரு காரியமானாலும் எதையுமே யாரும் இதுவரையில் முழுமையாக கற்றுக் கொள்ளவில்லை. கற்றது கையளவு கல்லாதது கடலளவு என்ற ரீதியில் தான் மனிதர்கள் ஓடிக்கொண்டிருக்கிறார்கள்.

மனிதன் யார்? அவனுடைய ஆரம்பம் எங்கே? அவன் எங்கேயிருந்து வந்தான்? எதற்காக வந்தான்? என்ன செய்கிறான்? ஏன் செய்கிறான்? எங்கே போகிறான்? அவனுடைய முடிவுதான் என்ன? கடவுள் என்று ஒருவர் இருக்கிறாரா? இருப்பாரானால் அவரைப் பற்றிய **details?** இப்படிப்பட்ட கேள்விகளுக்கே விடை கண்டுபிடிக்க முடியாத ஒரு மனிதனால் உலகத்தையும் அதனுடைய காரியங்களையும் பற்றி பெரிதாக எதையுமே கண்டுபிடித்துவிட முடியாது. கண்ணுக்கு முன்னால் தெரிகிற காரியங்களையும், கேள்விப்பட்ட காரியங்களையும், படித்த, ஆராய்ச்சி செய்த காரியங்களையும் வைத்து தன்னால் முடிந்ததை எழுதி வைக்கிறான். இயற்கையாகவே அவனுடைய உள்ளுணர்வு சொல்லும் காரியங்களையும், மனதின் படிவங்களையும் எடுத்துச் சொல்லுகிறான். தேவனைப் போ**லி**ருக்கும் மனிதன் இயல்பாகவே அவருடைய ஞானத்தையும் பெற்றிருக்கிறபடியினால்; அவனுடைய சிந்தனைகள் மிகவும்

சிறப்பானதாக, நல்லதாக, சிந்தனையை கவர்கின்ற வண்ணமாக இருக்கின்றன.

கையில் எடுத்தால் அதை படித்து முடித்துவிட்டுதான் கீழே வைப்பார்கள், அப்படிப்பட்ட புத்தகங்களையெல்லாம் நான் நிறைய படித்திருக்கிறேன்! (ஆனால் பலமுறை பைபிளை கையில் எடுத்து படிக்காமலேயே கீழே வைத்திருக்கிறேன்; ஒன்றும் புரியாததினால்!). நம்மால் படிக்க முடியும் என்பதற்காக வாத்தியார் தேவையில்லை என்று யாரும் சொல்வதில்லையே! அதற்காக வாத்தியார் சொல்**லி**க் கொடுத்ததையெல்லாம் அப்படியே வாயில் போட்டு விழுங்கி தண்ணீர் குடிப்பதும் இல்லை! கால ஓட்டத்தில், நாம் வாழ்க்கையில் போடும் எதிர்நீச்ச**லி**ல் எத்தனையோ காரியங்களை படிக்காமலேயே புரிந்து கொள்கிறோம். பல சந்தர்ப்பங்களில் பள்ளிக்கூட வாத்தியார் நமக்கு தப்புத்தப்பாக பல காரியங்களை சொல்**லி**க்கொடுத்திருப்பதையும் அடையாளம் கண்டு கொள்கிறோம்.

பிரசங்கம் கண்டிப்பாக கேட்க வேண்டும்; அதை தேவன் தான் ஏற்படுத்தினார். பிரசங்கியார்களை குறைவாக மதிப்பிடக்கூடாது; அவர்களைத் தேவன் தான் நியமித்திருக்கிறார். அதே நேரத்தில் அவர்களையே தேவனாக்கி, அவர்களின் காலடியில் தடாலடியாக விழுந்து வணங்கி; நீங்க சொன்னா சரியாத்தான் இருக்கும் பிரதர்! என்று மயக்கத்தில் புலம்பக்கூடாது, பிதற்றக்கூடாது! பிரசங்கம் கேட்கும் போது நம்மை சத்தியத்திற்குள் நடத்துவது பரிசுத்தாவியானவர்தான். அதனால் யார் எதைச் சொன்னாலும் கேட்டுக் கொண்டிருக்க வேண்டிய அவசியமில்லை, அதைப் பகுத்தறிந்து பார்க்கும் உரிமை நமக்கு கொடுக்கப்பட்டிருக்கிறது. இது தான் அந்த வசனத்தின் அர்த்தம்!

விதைகள் புத்தகங்களின் வழியாக எழுதுகிற பிரசங்க வாக்கியங்களையும் அப்படியே விழுங்கி விடுங்கள் என்று நானும் ஒருநாளும் சொன்னதில்லை. வேத வசனங்களையே ஆராய்ந்து பாருங்கள் என்று சொல்லப்பட்டிருக்க; பிரசங்க புத்தகங்களை ஆராய்ந்து பார்க்க வேண்டியதும் அதிக அவசியமல்லவா?

## இயேசு கற்பித்தார் ஒளி வீசவே ...

இயேசு கற்பித்தார் ஒளி வீசவே, சிறு தீபம் போல இருள் நீக்கவே, அந்தகார லோகில் ஒளி வீசுவோம், அங்கும் இங்கும் எங்கும் பிரகாசிப்போம். என்ற பாடலை ஞாயிறு பள்ளியில் சொல்**லி**க் கொடுத்த போது நான் இருளில் இருந்தேன். அர்த்தம் புரியாமலேயே வருஷக்கணக்கில் அந்த பாடலைப் பாடி வந்தேன். *இருளில் நடக்கிற ஜனங்கள் பெரிய வெளிச்சத்தைக் கண்டார்கள்; மரண இருளின் தேசத்தில் குடியிருக்கிறவர்களின் மேல் வெளிச்சம் பிரகாசித்தது. ஏசா. 9:2* இருளில் இருக்கும் ஜனங்கள் பெரிய வெளிச்சத்தைக் கண்டார்கள்; மரண இருளின் திசையி**லி**ருக்கிறவர்களுக்கு மேல் வெளிச்சம் உதித்தது என்று, ஏசாயா தீர்க்கதரிசியினால் உரைக்கப்பட்டது நிறைவேறும்படி இப்படி நடந்தது. மத். 4:15 அங்கே என்ன நடந்தது? இயேசு அவ்விடத்தில் வந்து தங்கியிருந்து சுவிசேஷத்தை பிரசங்கிக்க ஆரம்பிக்கிறார். அதைக் கேட்ட ஜனங்களின் மத்தியில் விழிப்புணர்ச்சி ஏற்பட்டு அநேகர் இரட்சிக்கப்படுகிறார்கள், அற்புதங்கள் அடையாளங்கள் நடக்கிறது, அவருடைய பெயர் எங்கும் பிரசித்தமாக ஆரம்பிக்கிறது. இதைத்தான் வெளிச்சம் பிரகாசித்தது என்று சொல்லப்பட்டிருக்கிறது.

இருளில் இருக்கும் ஜனங்கள் என்றால் அது தேவனை அறியாத உலக ஜனங்களைக் குறிக்கிறது என்று எளிதாகச் சொல்**லி**விடுவோம். ஒரு வகையில் அது சரிதான் என்றாலும் அது 1% தான். இயேசுவை ஏற்றுக் கொண்ட கூட்டத்தாரும் இன்னும் இருளில்தான் இருக்கிறார்கள் என்று சொன்னால் அது ஆச்சரியப்பட வைக்கிற விஷயம்; மட்டுமல்ல வேதனைப் பட வைக்கிற விஷயமும் கூட. இயேசுவை ஏற்றுக் கொண்டால் இரட்சிக்கப்படலாம், இரட்சிக்கப்பட்டவுடன் பரிசுத்தமாக வாழ வேண்டும், ஜனங்களுக்கு இயேசுவை அறிவிக்க வேண்டும், பிறகு ... ? செத்தபின் **straight forward** ஆக பரலோகம் போய்விடலாம்! அவ்வளவுதான், அதோடு எல்லாம் முடிந்தது. இப்படி நினைத்துக் கொண்டு இந்த உலகத்தில் வாழ்ந்து கொண்டிருக்கிற தேவனுடைய பிள்ளைகள் கூட இன்றளவும் இருளில்தான் இருக்கிறார்கள். அதுவும் சாதாரண இருளில் அல்ல, மரண இருளில் இருக்கிறார்களாம்!

இயேசு மட்டும் போதும் என்று நினைத்து, அதில் திருப்தியடைந்து, அவர் மூலமாக சிலுவையில் கொடுக்கப்பட்ட ஆயிரமாயிரமான ஆசீர்வாதங்களைப் பற்றிய அறிவில்லாமல் இருக்கிற ஜனங்களும் இன்னும் இருளில்தான் இருக்கிறார்கள். இழந்து போன ஏதேனின் மகிமையான வாழ்வை ஆபிரகாமின் ஆசீர்வாதம் என்ற **Package**-ல் வைத்து; அதை இயேசுவின் சிலுவைப் பாடுகளின் வழியாக நம்மை வந்து அடையும்படி செய்திருக்கிறார் என்ற இரகசியம் புரியாமல்... பரலோகம் தாய் வீடு அதை நோக்கி நீ ஓடு, இப்பூமி நமக்கு சொந்தமில்லை என்று பாடிக்கொண்டிருப்பவர்கள் எல்லோருமே கூட இன்னும் இருளில் தான் இருக்கிறார்கள்!

பரலோகம் தாய்வீடுதான்; சந்தேகமே இல்லை, அங்கேயிருந்து தான் வந்தோம். ஆனால் இந்தப்

பூமி நமக்கு சொந்தமில்லையென்று யார் சொன்னது? உடனே அந்த பாடலைப் பாடியவரின் பெயரைச் சொல்**லி**விடுவீர்கள். நான் அதைக் கேட்கவில்லை, அந்தப் பாடலை நீங்கள் கேட்டுக்கொண்டிருந்தபோது, உங்களை சத்தியத்திற்குள் நடத்திய பரிசுத்தாவியானவர் என்ன சொன்னார் என்பது தான் இங்கே முக்கியம்! பரலோகம் தாய்வீடு, அதைத்தேடி நீயும் ஓடு... இப்பூமி எனக்கு சொந்தமுங்க... எல்லாமே எனக்கு தாங்க... என்று பாடுவோம்.

*பூமியும் அதின் நிறைவும் கர்த்தருடையதுதான்; (1 கொரி. 10:26)* அதை இல்லையென்று சொல்லவில்லை. அவருடையதெல்லாமே நம்முடையது தான் என்றும் சொல்**லி**யிருக்கிறாரே. ஏனென்றால் நாம் அவருடைய பிள்ளைகள். நம்மை அவருடைய பிள்ளையான இயேசுவுக்கு ஈடாக மாற்றியிருக்கிறார்; அதனால் இயேசு நம்மை சகோரர்கள் என்று அழைக்கிறார். ஏனென்றால் அவரும் பிதாவாகிய தேவனுக்கு பிள்ளை, நாமும் பிதாவாகிய தேவனுடைய பிள்ளைகள் தான்! எபி. 2:11, 12. நாம் பிள்ளைகளானால் ...? நாம் சுதந்திரவாளிகள்! நாம் சுதந்தரவாளிகளானால்? கிறிஸ்துவுடன் நாம் உடன் பங்காளிகள்! அதாவது இயேசுவைப் போலவே நம்மையும் மகிமைப்படுத்தி, மேன்மைப்படுத்தி, உன்னதங்களில் அவரோடுகூட உட்காரவும் வைத்திருக்கிறார். அதாவது பிதாவின் வலதுபக்கத்தில் இயேசு உட்கார்ந்திருக்கும் அதே இடத்தில் நாமும் உட்கார வைக்கப்பட்டிருக்கிறோம்!

சகலத்தையும் அவருடைய பாதத்திற்கு கீழ்ப்படுத்தியிருக்கிறார். ஒட்டுமொத்த மனித குலத்தின் பிரதிநிதியாக இயேசு வந்தபடியினால் அவர் மூலமாக சகலமும் நம்முடைய பாதங்களுக்கு கீழாகவும் கீழ்படுத்தப்பட்டிருக்கிறது! அவர் சாபத்தால் பாவ இருள் சூழ்ந்திருந்த இந்த பூமிக்கு ஒளியாக வந்தார். ஆனால் அவர் இந்த பூமியின் மீது தன்னுடைய ஒளியை நம்மைக் கொண்டு தான் வீசச் செய்ய வேண்டும். அதனால் தான் *நீங்கள் உலகத்துக்கு வெளிச்சமாயிருக்கிறீர்கள்; ... மத். 5:14* என்றார்.

அவருடைய வெளிச்சத்தை நாம் பெற்று அதை இருள் சூழ்ந்திருக்கும் இடங்களில் பிரகாசிக்கச் செய்ய வேண்டும் (?) சூரியனிடமிருந்து சந்திரன் வெளிச்சத்தைப் பெற்றுக் கொண்டு இராத்திரி வேளைகளில் பூமியைச் சுற்றி வந்து வெளிச்சம் கொடுக்கிறதே, அதைப் போலத்தான்! நாம் கர்த்தருக்குள் வெளிச்சமாயிருக்கிறோம்; அதனால் வெளிச்சத்தின் பிள்ளைகளாய் நடந்து கொள்ளச் சொல்லி தேவன் உத்தரவிட்டிருக்கிறார். எபே. 5:8

நம்மில் இருக்கிற வெளிச்சத்தை எப்படி வீசச் செய்வது? தவலைப் பானையை தூக்கி தலைவழியாக கவிழ்த்துக் கொண்டு கட்டிலின் கீழே மறைந்து கிடக்கக்கூடாது! விளக்குத் தண்டின் மீது ஏற்றப்பட வேண்டும். கிறிஸ்துவின் சுவிசேஷத்தைக் குறித்து வெட்கப்படக்கூடாது என்று வேதம் நமக்கு போதிக்கிறது. கிறிஸ்துவின் சுவிசேஷம் என்றாலே, அவருடைய சிலுவை மரணத்தைக் குறித்த காரியங்கள் தான். கிறிஸ்து யார்? அவர் ஏன் பூமிக்கு அனுப்பப்பட்டார்? சிலுவையில் அவரை ஏன் தூக்கிப் போட்டார்கள்? அங்கே அவருக்கு என்ன நடந்தது? அவர் மூலமாக நமக்கு என்னென்ன நடந்தது? போன்றவைகளை... சத்தியத்தை... மறைக்காமல் எடுத்து சொல்ல வேண்டும். அப்படி சொல்லும்போது வெளிச்சம் பிரகாசிக்க ஆரம்பிக்கிறது. ஜனங்கள் ஒவ்வொருவராக கண்ணைக் கசக்கியபடி வெளிச்சத்தைப் பார்த்து வெளிய வர ஆரம்பிப்பார்கள்!

நமக்கு நம் அப்பாவினால் கொடுக்கப்பட்ட ஒரு செழிப்பான பூமியை, ஏவாளை ஏமாற்றிய சாத்தான் பிடுங்கிக் கொண்ட சம்பவத்தை நினைவுக்கு கொண்டு வாருங்கள். ஆதாம் இந்த பூமியை தவறவிட்டுவிடக்கூடிய சந்தர்ப்பம் வரலாம் என்று அறிந்திருந்த தேவன் சகல ஆசீர்வாதங்களின் சூத்திரங்களை இயேசு கிறிஸ்துவுக்குள் உலகம் உருவாவதற்கு முன்னதாகவே வைத்துவிட்டார். ஒருவேளை அசம்பாவிதம் எதுவும் நடந்தாலும்; மனுக்குலத்தின் பிரதிநிதியாக இயேசுவை மனிதனாக பூமிக்குள் அனுப்பி எல்லாவற்றையும் மீண்டுமாக மீட்டுக் கொள்ளலாம் என்று தேவன் திட்டமிட்டிருந்தார். அவர் நினைத்ததைப் போலவே பிரச்சனை வந்தது; இயேசுவை அனுப்பி பிரச்சனையைச் சரி செய்தார்.

## தேவன் தவறு செய்து விட்டாரா?

நல்ல தேவன் தன்னுடைய சாயலாக தன்னைப் போலவே மனிதனை படைத்திருக்கும் போது அவன் தவறு செய்தது எப்படி? ஏன்? ஏன் பாவம் செய்யக்கூடாத ரீதியில் மனிதனை தேவன் படைத்திருக்கக்கூடாதா? தேவனால் அது முடியாதா? இப்படி பல கேள்விகள் எனக்கு வந்தன... ஏன் உங்களுக்கே கூட வந்திருக்கலாம்... வரலாம்... பரிசுத்தாவியானவர் என் கையைப் பிடித்துக் கொண்டு மீண்டுமாக என்னை சத்தியத்திற்குள்ளாக நடத்திக் கொண்டு போனார். அங்கே... நான் கண்ட காட்சி... என்னைப் போலவே அநேகமாயிரம் ஆடுமாடுகள் செழிப்பான பிரதேசத்தில் புல் மேய்ந்து கொண்டிருந்தன! நானும் போய் சேர்ந்து கொண்டேன்!

தேவன் நம்மை, மாட்டைப் போல பகுத்தறிவில்லாதவர்களாக படைக்கவில்லை, அதனால் மாடாக

மாறி புல்லை மேய்ந்து கொண்டு போவதைப் போல கற்பனை செய்யக்கூடாது! தேவன் நம்மை அவரைப் போலவே பகுத்தறிவுள்ளவர்களாக, எதையும் கூர்ந்து பார்த்து ஆராய்ந்து நிதானிக்கிறவர்களாக உருவாக்கினார். நாம் எப்படி விரும்புகிறோமோ அப்படியே நம்முடைய வாழ்க்கையை அமைத்துக் கொள்ளும் ஆற்றல் உள்ளவர்களாகவே நம்மை உருவாக்கினார். தேவன் நமக்கு கொடுத்த இந்த மேன்மைதான் மனுக்குலமானது பாவத்தில் விழுவதற்கு ஏதுவாகிப்போனது. அப்படியானால் தேவன் நம்மைத் தப்பாக வடிவமைத்துவிட்டாரா? இல்லை இல்லை!

பரலோகத்தைத் தேவன் கீழ்ப்படுத்தி, ஆளுகை செய்து, பண்படுத்தி காத்துக் கொண்டும் வருகிறார். பரலோகத்தைப் போலவே இருக்கிற பூமியைக் கீழ்ப்படுத்தி, ஆளுகை செய்து அதை பண்படுத்தி பாதுகாத்துக் கொள்ள வேண்டுமானால் அதற்கு அவரைப் போலொத்தவர்களே தேவை. அப்படிப்பட்டவர்களால் தான் ஆளுகை செய்யவும் முடியும். தன்னைப் போல்லலாமல் வேறு ரீதியில் (பகுத்தறிவில்லாமல்), வேறே சாயலில் மனிதனை உருவாக்கியிருந்திருப்பாரானால் என்னவாகியிருக்கும்? மனிதனால் பூமியைக் கீழ்ப்படுத்தி ஆளுகை செய்ய முடியாது... பண்படுத்திக் காத்துக் கொள்ளவும் முடியாது. பூமியே திவாலாகி இருக்கும்! (இப்போது மட்டுமென்ன மனிதன் தேவனுடைய திட்டத்தைக் கெடுத்து குட்டிச்சுவர் ஆக்கிவிட்டானே? என்று கேட்கத் தோன்றினால்; கேட்டு விடுங்கள். கேட்கப்பட்ட கேள்விகள்தான் பதிலைக் கொண்டு வரும்) அதனால் தேவன் மனிதனைத் தன்னைப் போலவே உருவாக்கி; நூற்றுக்கு நூறு அவன் தன்னுடைய விருப்பத்தின்படியே பூமியின்மீது செயல்படும் அதிகாரத்தையும் கொடுத்துவிட்டார். மனிதன் தேவனுடைய திட்டத்தை கெடுத்திருக்கலாம்; என்றாலும் அவன் தேவனைப் போலிருப்பதால் தேவனுடைய ஒத்தாசையுடன் அதை சரி செய்து விடவும் முடியும். தேவனால் கூடாத காரியம் ஒன்றுமில்லை, தேவனைப் போலிருக்கும் தேவர்களால் (மனிதர்களால்—நம்மாலும்) கூடாத காரியமும் ஒன்றுமில்லை!

இப்படி மனிதன் சுதந்திரமாக செயல்பட அவனுக்கு அதிகாரம் கொடுத்தால் தவறு நடந்து விடுமோ? அல்லது மனிதன் தவறு செய்து விடுவானோ என்றெல்லாம் யோசித்துக் கொண்டு நிற்க முடியாது. ஏனென்றால் பரலோகத்தைப் போலவே இன்னொரு லோகத்தை தேவன் திட்டமிட்டார். அது பரலோகத்தின் விரிவாக்கமாக இருந்தது. அதை பரலோகத்தைவிட இன்னும் மேன்மையானதாக முப்பரிமாணமுள்ளதாக **(Three-dimensional)** திட்டமிட்டு உண்டாக்கினார். இதைச் செய்ய வேண்டிய கட்டாயத்தில் தேவன் இருந்தார். அப்படிப்பட்ட பூலோகத்தைக் கையாள தன்னைப் போலொத்தவர்களால் தான் முடியும்! அதனால் தன்னைப் போலவே ஆனால் **Three-dimensional** ஆக ஒரு ஜீவனை வடிவமைத்தார்; அவன் தான் மனிதன்! பிதா – குமாரன் – பரிசுத்தாவியானவர் என்ற மூன்றில் ஒன்றான தேவன் தங்களுக்குள்ளாகவே கலந்தாலோசித்து எடுத்த முடிவு இது! அதனால் இது நிச்சயமாக தவறாக இருக்க வாய்ப்பே இல்லை.

பூமியில் மனிதர்களாகிய நாமும் கூட பல காரியங்களை திட்டமிடுகிறோம்; செயல்படுகிறோம். ஒரு திட்டம் தோல்வியடைகிறது என்பதற்காக அந்தத் திட்டமே தவறு என்று சொல்லி, விட்டு விடுகிறோமா? இல்லையே! திட்டத்தில் தவறு எதுவுமில்லை, அதைச் செயல்படுத்த நாம் உபயோகித்தவர்கள் தவறு செய்துவிட்டார்கள். இல்லாவிட்டால் நாம் உபயோகப்படுத்தின உபகரணங்கள் கோளாறாகிவிட்டது, சரி, எதுவோ ஒன்று ஆகிவிட்டது என்று வைத்துக் கொள்வோம். அதனால் திட்டத்தில் தவறு, நாம் திட்டமிட்டது தவறு, நாமே தவறானவர்கள் என்று சொல்லி விட முடியுமா? முடியாதே! திட்டத்தை மீண்டுமாக சரியாக **layout** செய்து, தேவையானால் சில மாற்றங்களைச் செய்து, தவறுகளை சரி செய்து, சரியான நபர்களைக் கொண்டு அல்லது சரியான உபகரணங்களைக் கொண்டு மீண்டுமாக வெற்றியாக முடிக்க வேண்டும். நீங்களானாலும் சரி... நானானாலும் சரி அப்படித்தான் செய்வோம் இல்லையா? நம்முடைய இந்த இயல்பு நம் அப்பாவிடமிருந்து நமக்கு வந்தது தான்!

தேவன் மீண்டுமாக தன்னுடைய **assignment** ஐ வெற்றியாக முடிக்க நம்மிடமிருந்து தான் காரியங்களை எதிர்பார்க்கிறார். நாமோ அவர் ஏதாவது செய்யமாட்டாரா என்று எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறோம். அதில் தப்பில்லை, அவர் நம்முடைய அப்பா, அவர் தான் நம்மை அனுப்பியிருக்கிறார், அதனால் அவர் தான் நமக்கு உதவியாக வேண்டும். கண்டிப்பாக உதவி செய்கிறார், ஆலோசனை தருகிறார், இரகசியங்களை வெளிப்படுத்துகிறார், வெளிப்பாடுகளைத் தருகிறார். ஆனால் அவருடைய ஆலோசனை, உதவியோடு... நாம் தான் செயல்பட்டாக வேண்டும்; வேறு வழியில்லை. ஏனென்றால் பூமியையும், மனிதனையும் தேவன் அமைத்திருக்கும் விதம் அப்படி. கம்யூட்டரை மனிதன்தான் வடிவமைத்தான். ஆனால் அதில் ஏதாவது பிரச்சனை வரும் போது ... உதாரணமாக கம்யூட்டர் வைரஸ் **(Computer virus)** என்ற பிரச்சனையை எடுத்துக் கொள்வோம். இது ஒரு **self duplicating computer program** ஆகும். இது ஒரு கம்யூட்டரில் இருந்து அடுத்த கம்யூட்டருக்கு பரவுகிறது. **(biological virus** ஒரு மனிதனிடமிருந்து அடுத்தவருக்கு பரவுவதைப் போல) வேலைகளை செய்ய முடியாதபடி பல ரீதியில்

தடைகளை இந்த வைரஸ் உண்டாக்குகிறது.

இந்தப் பிரச்சனையை சரி செய்ய வேண்டுமானால்; மனிதனால் நேரிடையாக எதுவும் செய்ய முடியாது. விரல்களை உள்ளே நுழைத்து வைரசை பிடித்து வெளியே இழுத்துப் போட முடியாது. இதைச் சரி செய்ய **Anti-viral tactics** என்ற இன்னொரு **computer-based** முறைமையின்படி தான் செயல்பட்டாக வேண்டும். இல்லை... அது கஷ்டம் வேறே மாதிரி முயற்சி பண்ணலாம் என்று ஒரு ஸ்குரூ டிரைவரை எடுத்துக் கொண்டு போனால்... கம்யூட்டரை பகுதி பகுதியாக கழட்டிப் போடலாம்; ஆனால் பிரச்சனையை மட்டும் சரி செய்யவே முடியாது. சரி... ஒரு சுத்தியலை எடுத்துக் கொண்டு போனால்? கம்யூட்டரை அடித்து சுக்குநூறாக உடைத்துப் போடலாம்! ஒரு **viral fever** மாத்திரையைப் போட்டு தண்ணீர் ஊற்றி விழுங்கச் சொன்னால் அது விழுங்காது! கம்யூட்டருக்கு வாயோ, தொண்டையோ, இரத்த நாளங்களோ கிடையாது!

இப்போது புரிந்திருக்கும், தேவன் பூமியின் மீது நேரிடையாக செயல்பட முடியாது என்பதும். பூமிக்குரிய நியமத்தின்படி உருவாக்கப்பட்டிருக்கும் நம்மைக் கொண்டு தான் செயல்பட முடியும் என்று அறிந்து கொள்வது இனிவரும் காரியங்களை புரிந்து கொள்ள மிக உதவியாக இருக்கும். நாம் தேவனுக்கு மிகமிக முக்கியமானவர்கள் என்பதை புரிந்து கொள்வோம். தேவனுக்கு நம்முடைய ஒத்துழைப்பு அதை விட மிக மிக முக்கியம். நாம் தேவனை அறிந்து கொண்டு, அவருடைய மன விருப்பத்தை தெரிந்து கொண்டு, அதை நம்முடைய விருப்பமாக எடுத்துக் கொண்டு, அதை பூமியின் மீது நிறைவேற்ற வேண்டும். அது எப்படி என்பதை முன்னதாகவே பார்த்துவிட்டோம் (ஏசா. 44:28) சொல்லி சொல்லி நிறைவேற்ற வேண்டும். எதை? தேவனுடைய வசனங்களை எடுத்துச் சொல்ல வேண்டும். எல்லாவற்றையும் அல்ல, நாம் நன்றாக இருப்பதற்காக தேவனால் கொடுக்கப்பட்ட சுமார் 6000–க்கும் மேற்பட்ட வாக்குத்தத்தங்களை – அதைச் சார்ந்த நல்ல வார்த்தைகளை எடுத்துச் சொல்ல வேண்டும். அதாவது விசுவாச அறிக்கை செய்வதன் மூலமாக, தேவனுடைய திட்டம் இந்தப் பூமியில் நிறைவேற ஆரம்பிக்கும்.

இவ்விதமாக சொல்லிச் சொல்லி நாங்கள் தேவனுடைய திட்டத்தை இந்த பூமியின் மீது துவங்கி பல வருஷங்கள் ஆகிவிட்டன. நீங்களும் சேர்ந்துக் கொண்டீர்களானால் காரியத்தை சீக்கிரமாக முடிக்கலாம், சகலத்தையும் புதியதாக்கலாம்.

## பிரமாணத்தின் இயக்க ஆற்றல்:

புதிய பிரமாணம் ஒரு விடுதலையின் பிரமாணம் ஆகும். தேவனைப் போல இருக்கிற நாம் அவரைப் போலவே செயல்படுவதற்கு ஏற்ற பிரமாணமாக இது காணப்படுகிறது. தேவன் செயல்படும் போது முழுச் சுதந்திரத்துடன் செயல்படுகிறார்; அவரை யாரும் எதுவும் கட்டுப்படுத்துவதில்லை.

நம்முடைய தேவன் ஒரு வார்த்தையின் தேவன் என்பதை பார்த்து வருகிறோம். தன்னுடைய வார்த்தையினால் எல்லாவற்றையும் உருவாக்கி; அதே வார்த்தையினால் தான் உருவாக்கின எல்லாவற்றையும் நிலை நிறுத்தி வருகிறார். தான் உருவாக்கின எல்லா காரியங்களின் பின்னணியத்திலும் ஒரு பிரமாணம் **(law)** இயங்கிக் கொண்டிருக்கிறது. தேவன் செயல்படும் முறையே அப்படித்தான்; அதை நாம் மறுக்க முடியாது, மாற்றவும் முடியாது. சட்டம் **(rule)** என்று ஒன்று இருக்குமானால் அதை உருவாக்கி இயக்குகிற ஒருவர் கண்டிப்பாக பின்னணியத்தில் இருந்தே ஆக வேண்டும். இது நாம் கண்களினால் கண்டு உணர்ந்து புரிந்து கொண்டிருக்கிற ஒரு அனுபவப்பூர்வமான காரியமாய் இருக்கிறது.

காற்றடிக்கும்போது மரத்திலிருந்து பழுத்த நாவற்பழங்கள் உதிருகின்றன. தப்பித்தவறிக்கூட ஒன்றாகிலும் மேல்நோக்கி போவதில்லை, கீழ் நோக்கியே விழுகின்றன. இது இயற்கையில் நாம் காணும் புவியீர்ப்பு பிரமாணம். அதுமட்டுமல்ல பூமியின் மீது காணப்படுகிற எல்லாமே ஒன்றையொன்று ஈர்த்த வண்ணம் தான் இருக்கின்றன. பூமியின் மீது காணப்படுகிற எல்லாமே (நில நீர் காற்றுமண்டலங்களிலுள்ள சகல ஜீவராசிகளும், தாவர இனங்களும்) சட்டதிட்டத்தின் அடிப்படையில் தான் இயங்கி வருகின்றன. சட்டம் என்று ஒன்று இல்லாவிட்டால் இயக்கங்களில் ஒழுங்கும் கிரமமும் இல்லாமல் போகும்; அல்லது இயக்கமே நின்று போகும்!

அதனால் தான் தேவன் கண்களால் காணக்கூடிய இந்த பூமியையும் அதன் நிறைவையும் சட்டதிட்டங்களின் அடிப்படையில் அமைத்து தன்னுடைய அற்புதமான ஞானத்தையும் அறிவையும் வெளிப்படுத்துகிறார். (கொலோ. 2:3) நன்மை, தீமை என்பவைகள் கூட ஒரு பிரமாணம் தான்!(ரோம. 7:21) மரணம் ஒரு பிரமாணத்தின்படியும், சரீரம் ஒரு பிரமாணத்தின்படியும் இயங்குகிறது; பாவம் கூட ஒரு பிரமாணம்தான்! (ரோம. 7:23) நல்ல காரியங்களெல்லாம் தேவன் ஏற்படுத்தின பிரமாணத்தின்படி இயங்குகின்றன. அப்போ கெட்ட காரியங்களெல்லாம் சாத்தான் ஏற்படுத்தின பிரமாணத்தின்படியா? இல்லையில்லை... சாத்தான் எதையும் திட்டமிடவில்லை, உருவாக்கவுமில்லை. தேவன் ஏற்படுத்தியிருந்த

நல்ல ரீதியிலான பிரமாணங்களை திசைதிருப்பி, தரித்து **(counter clockwise) (anti clockwise)** ஓட வைத்து இருக்கிறான்.

அதனால் இந்தப் பூமியின் மீது இரண்டு ரீதியிலான பிரமாணங்களுமே இயக்கத்தில் இருக்கின்றன. பூமி சபிக்கப்பட்டிருக்கும் (ஆதி. 3:17) என்று தேவன் சொன்னதன் அர்த்தம் இது தான். அதாவது தேவனின் நியமங்கள் சாத்தானால் திசை திருப்பப்பட்டு விட்டது என்று தான் அர்த்தம். இது எப்படி நடந்தது என்றால்; பூமியின் ஆளுநர்களாக இருந்த முதல் மனிதர்களாகிய ஆதாமையும் ஏவாளையும் சாத்தான் திசை திருப்பினான்; பூமி தானாகவே திசை திரும்பி விட்டது! தேவனுடைய வார்த்தைகளைக் கேட்டு அதன்படி நடந்து வந்த ஆதாமுக்கு அதுவரை எல்லாம் நல்லபடியாக அமைந்தது. தேவனுடைய திட்டம் சரியானபடி பூமியின் மேல் செயல்பாட்டில் இருந்தது. என்றைக்கு ஆதாம் சாத்தானுடைய வார்த்தையைக் கேட்டு அதன்படி செய்ய ஆரம்பித்தானோ; அந்த நொடிப்பொழுதிலிருந்து தேவனுடைய திட்டம் **(authoritative principle)** திசை திருப்பப்பட்டது, சாத்தானுடைய திட்டம் செயல்பாட்டுக்கு வந்தது. நம் கற்பனைக்கு எட்டாத அளவுக்கு, நினைத்தே பார்க்க முடியாத அளவுக்கு அது பூமியில் தன்னுடைய நிகழ்வுகளை நடத்தி வருகிறது.

நாம் தேவனுடைய வார்த்தைக்கு செவி கொடுத்து நல்லதை செய்யும்போது; ஆசீர்வாத பிரமாணத்தை இயக்குகிறோம். அதே நேரத்தில் சாத்தானுக்கு செவிகொடுத்து; தேவனுடைய பிரமாணங்களுக்கு எதிரிடையான காரியங்களை செய்யும்போது; (அதாவது பாவம் செய்யும் போது) சாபப் பிரமாணத்தை இயக்குகிறோம். ஆக, பூமியையும் அதன் நிறைவையும் இயக்கும் ஆற்றலை மனிதன் பெற்றிருக்கிறான் என்று பார்க்கிறோம். நம்மை தம்மைப் போலவே உருவாக்கி; தன்னுடைய ஆற்றலையும் நமக்குள் வைத்தவர் தேவன். அதனால் நாம் நன்றியறிதலுள்ளவர்களாக இருந்து; அவருக்கு துரோகம் பண்ணாமல், அவர் சார்பில் சாய்ந்து, சார்ந்து செயல்படுவோமானால்; பூமியை மீண்டுமாக பரலோகமாக்கிய பாக்கியம் நம்மை வந்து சேரும்.

நான் ஒருவன் மட்டும் சரியாக இயங்கினால் போதுமா? எல்லாம் மாறிவிடுமா? என்று கேள்வி கேட்டுக் கொண்டு நிற்கக்கூடாது. நிற்காதீர்கள். தான் ஒருவராய் பெரிய காரியங்களை செய்கிற நம் தேவன்; அவரைப் போலவே நம்மையும் உருவாக்கியிருக்கிறார். அதனால் ஒருவராய் தனித்து நின்று சமாளிப்பதும், சாதிப்பதும், காரியத்தை வெற்றியாக முடிப்பதும் நமக்கு சாத்தியம் தான்! *...நானே எல்லாவற்றையும் செய்கிற கர்த்தர்; நான் ஒருவராய் வானங்களை விரித்து, நானே பூமியைப் பரப்பினவர். ஏசா. 44:24*

*நான் தேசத்தை அழிக்காதபடிக்குத் திறப்பிலே நிற்கவும் சுவரை அடைக்கவுந்தக்கதாக ஒரு மனுஷனைத் தேடினேன், ஒருவனையும் காணேன். எசே. 22:30* என்ற தீர்க்கதரிசன வார்த்தை உரைக்கப்பட்டது பழைய உடன்படிக்கையின் காலத்தில். இயேசு கிறிஸ்து மனிதனின் பாவத்திற்காக பரிகார பலியாக மரிக்காததினால்; மனிதன் பாவத்திலிருந்து விடுதலையாகாமலிருந்தான். சாத்தான் தோற்கடிக்கப்படாமலிருந்த காலகட்டத்தில்; மனிதன் பாவம் செய்யாமலிருக்க முயற்சித்தும் முடியாமல் தோற்றுப் போய்க் கொண்டிருந்தான். புதிய ஏற்பாட்டின் காலத்தில் இப்போது வழக்கத்திலிருக்கிற இரட்சிப்பு, மனந்திரும்புதல், பரிசுத்தாவியானவரின் அபிஷேகம், வரங்கள், நற்செய்திகளடங்கிய சுவிசேஷம், பரிசுத்தாவியானவரின் முத்திரை, உயிர்த்தெழுந்த இயேசுவின் வல்லமை ... இப்படிப்பட்ட எத்தனையோ காரியங்கள் அக்காலங்களில் இல்லை. மனிதன் நிராயுதபாணியாக போர் முனையில் பரிதபித்துக் கொண்டிருந்தான்.

அதனால் தான் தேவன் தன்னுடைய சொந்தக் குமாரனையே பூமிக்கு மனிதனாக அனுப்பினார். இயேசுவைப் பூமியில் பிறக்க வைத்து, இயேசுவாகிய அந்த மனிதனின் மூலமாகவே செயல்பட்டு; பூமி நிர்மூலமாகிவிடாதபடி பாதுகாத்தார்! மனிதனாக வந்த இயேசு என்ற ஒருவரால் தனியாக நின்று சாதிக்க முடியும் என்றால்; அவரைப்போலிருக்கிற நம்மாலும், தனியாக நின்று சாதிக்க முடியும்! மனுக்குலத்தின் பிரதிநிதியாக வந்த இயேசுவால் ஒரு காரியத்தை செய்ய முடியுமானால்; அதை எல்லோராலும் செய்ய முடியும் என்றே அர்த்தமாகிறது! அதற்காக இயேசுவைப் போல சிலுவையை சுமக்க சொல்லவில்லை. அவர் செய்து முடித்த எதையும் இனி மேல் நாம் செய்ய வேண்டியதில்லை. அவர் சிலுவையில் நமக்காக ஏற்படுத்தியிருக்கும் காரியங்களை மட்டும் நன்றாக அறிந்து கொண்டு அதனடிப்படையில் செயல்பட வேண்டும். நிறைய வேலைகள் இன்னும் காலியாக இருக்கின்றன.

புதிய (– கிருபை – விசுவாச – நீதி – கிறிஸ்துவின் – சிலுவை) பிரமாணத்தின் அடிப்படையில் விதைப்பைப் பற்றி கொஞ்சம் பார்ப்போம். இதுவரை வந்த விதைகள் புத்தகங்களில் விதைப்பு – காணிக்கை – தசமபாகம் – தான தர்மம் இவைகளைப் பற்றி ஆணித்தரமாக, முடிவாக, நிச்சயமாக எதையும் நான் சொல்லவில்லை. ஏனென்றால் எல்லாவற்றைப் போல இந்த காரியங்களும்

ஆராய்ச்சியினடிப்படையில் தான் எழுதப்பட்டு வருகின்றன. நமக்கு இருக்கிற சகல சந்தேகங்களையும், அறியாமைகளையும் நீக்கி தெளிவான, சரியான பதிலைக் கொடுக்க தேவன் வல்லமையுள்ளவராயிருக்கிறார். சீக்கிரமாகவே கேள்விக்குறிகளுக்கான பதில்கள் பரிசுத்தாவியானவரிடமிருந்து வெளிப்பட்டு நம்மை ஆச்சரியக் குறியிட வைக்கும் என்று நம்புகிறேன்! தேவனுடைய ஆவியானவர் தாமே நம்மை சரியான பதிலுக்குள் நடத்துவாராக, ஆமென்!

சிலுவையில் அறையப்பட்ட இயேசுவை பிரசங்கித்த பவுல்; தனது கடிதங்களில் புதிய பிரமாணத்தின் அடிப்படையில் விதைப்பைப் பற்றி எழுதியிருப்பதை பார்ப்போம். நாம் வாழும் இந்த பூமி சட்டதிட்டங்களினடிப்படையில் இயங்கி வருகிறது என்பதை பார்த்தோம். பூமி சாபத்திற்குள்ளாவதற்கு முன்னதாகவே தேவன் விதைப்பு என்ற ஒரு ஒழுங்கு முறையை உருவாக்கியிருப்பதையும் பார்க்கிறோம். விதைப்பு Vs அறுப்பு என்ற பிரமாணத்தின் (விதைப்பும் அறுப்பும்)அடிப்படையில் தான் பூமி இயங்கியாக வேண்டும். இது தேவன் பூமியின் காரியங்களின் மீது நிர்மாணித்த இன்னொரு பிரமாணம். விதைக்கப்படுகிற காரியம், அது எதுவானாலும் சரி, அது முளைத்தே தீரும். நம்மை, நம்முடைய விசுவாசத்தை, நம்முடைய வார்த்தைகளை, நம்முடைய நற்கிரியைகளை (இதில் தர்ம காரியங்கள் அடங்கும்) விதைக்கும் போது அது முளைக்கிறது.

தேவன் ஒரு நல்ல நோக்கத்தோடுதான் இந்த நியமத்தை ஏற்படுத்தினார். ஆனால் சாபத்திற்கு பிற்பாடு இதுவும் பிரச்சனைக்குள்ளாகிப் போனது. சாபத்திற்கு முன்பு பூமி ஆசீர்வாத நியமத்தின்படி இயங்கிக் கொண்டிருந்தது. அந்தக் காலகட்டத்தில் விதை விதைத்து அதை விளையச் செய்தால் தான் பிழைப்பு நடக்கும் என்ற நிலைமை மனிதனுக்கு இருக்கவில்லை. அதாவது விதைப்பும் அறுப்பும் என்ற பிரமாணம் இருந்தது; ஆனால் இந்த பிரமாணத்தின்படி தான் பிழைப்பு நடத்தியாக வேண்டும் என்ற கட்டாயம் அப்போது இல்லை.

## சிலுவையின் நிழ–ல் ...

சிலுவையின் நிழ–ல் அனுதினம் அடியேன் சாய்ந்திளைப்பாறிடுவேன்; என்று பாடி பாடி சிலுவையினடியிலேயே **struck** ஆகி நின்று போனவர்களின் கூட்டம் மலைபோல் குவிந்து விட்டது! சிலுவைக்கருகில் வந்ததும் பாவமூட்டையை இறக்கி வைத்துவிட்டு; அங்கே படுத்து தூங்கச் சொல்லவில்லை! சிலுவையில் எல்லாம் முடிந்து விடவில்லை, அங்கே தான் ஆரம்பமே ஆகிறது! சிலுவையை மேன்மை படுத்துகிறோம், புகழ்ந்து பாடல்கள் பாடுகிறோம். சிலுவையை புனித சின்னமாக மதித்து செயினில் டாலராக அணிந்து கொள்கிறோம். இவையெல்லாமே நல்லது தான் என்றாலும் அதில் அறையப்பட்ட இயேசு அதைவிட முக்கியமானவர் என்பதை யோசிக்கத் தவறி விட்டோம். சிலுவையில் அவர் பட்ட பாடுகளின் காரண காரியங்கள் அதைவிட முக்கியமானவைகள். ஆண்டாண்டு காலமாக மனதிற்குள் புகைந்து கொண்டிருந்த எத்தனையோ கேள்விகளுக்கான பதில்கள் இங்கே தான் புதைந்து கிடக்கின்றன.

சிலுவையில் அறையப்பட்ட இயேசுவைப் பற்றின அறிவு கொஞ்சமாவது இருந்திருக்குமானால்; இந்நேரம் தேவபிள்ளைகள் சிங்காசனத்தை நோக்கி நடக்க ஆரம்பித்திருப்பார்கள். இரட்சிக்கப்பட்டவுடன், இதுவே போதும் என்று திருப்தியுடன் தலையணை வைத்து நிம்மதியாக தூங்கிக் கொண்டிருப்பவர்கள் தூக்கம் கலைந்து எழுந்திருக்க வேண்டிய நேரமிது. தூங்குகிறவர்கள் நிம்மதியாக தூங்கிக் கொண்டிருக்கட்டும், அவர்களை எழுப்ப வேண்டாம் என்று போக முடியாத சூழ்நிலை எங்களுக்கு! தூங்கிக்கொண்டிருப்பவர்களை எழுப்பி அவர்களை சிம்மாசனத்திற்கு அழைத்துச் செல்வதற்காகவே இந்த ஊழியம் எங்களுக்கு கொடுக்கப்பட்டிருக்கிறது.

## நல்ல போராட்டம்:

சிலுவையின் மூலமாக நமக்கு கொடுக்கப்பட்ட புதிய உடன்படிக்கையின் இரகசியங்களில் விசுவாசம் எந்த அளவுக்கு முக்கியமானது என்பதைப் பார்த்து வருகிறோம். விசுவாசமானது நம்பப்படுகிறவைகளின் உறுதியும் காணப்படாதவைகளின் நிச்சயமுமாயிருக்கிறது (**... faith is the substance of things hoped for, the evidence of things not seen.**) எபி. 11:1 கண்களினால் காணாத, இல்லாத ஒரு காரியத்தை அல்லது பொருளை அது இருப்பதாகவே காண்பது தான் விசுவாசம். நாம் விரும்பும் அந்த பொருள் இல்லாவிட்டாலும்; அது இருப்பதாகவே காண்பது தான் விசுவாசம்! விசுவாசம் இல்லாததை இருப்பதாக கற்பனை செய்கிறது. அந்த கற்பனை நல்லதாகவே இருக்கிறது; எப்படியென்றால் அது தேவனுடைய விருப்பத்திற்கேற்றதாக இருப்பதால். விசுவாசம் தன்னுடைய கற்பனைக்கான கருப்பொருளை தேவனுடைய வார்த்தைகளிலிருந்து எடுத்துக் கொள்கிறது. தேவனுடைய வாக்குத்தத்தங்களிலிருந்து ஆசீர்வாதத்திற்கடுத்த காரியங்களை தன்னுடைய கற்பனைகளுக்கு ஆதாரமாக்கிக் கொள்கிறது இந்த விசுவாசம்!

விசுவாசம் என்பது ஒரு ஆவிக்குரிய காரியமாகும். கண்களால் காணமுடியாத ஆவி மனிதர்களாகிய நாம்; கண்களால் காணக்கூடிய இந்த பூமியில் இருந்து கொண்டு, கண்களால் காணமுடியாத காரியங்களை நம்ப வேண்டுமானால் அது இலேசான காரியமல்ல. கண்களால் காணமுடியாதவைகளை அவை இருப்பதைப் போலவே ஏற்றுக் கொள்வதில் பல பிரச்சனைகள் குறுக்கிடுகின்றன. அவற்றில் முக்கியமானது கண்களால் காணக்கூடிய ரீதியில் தேவனால் படைக்கப்பட்டிருக்கும் இந்த பூமியும் அதிலுள்ள காரியமும். அதிலும் மிக மிக முக்கியமானது என்னவென்றால் கண்களால் காணக்கூடிய ரீதியில் தேவனால் நமக்குக் கொடுக்கப்பட்டிருக்கும் நம்முடைய பூமிக்குரிய கூடாரமாகிய நம்முடைய சரீரம் தான்!

நம்முடைய விசுவாசத்தை நாம் சரியாக கையாள முடியாதபடி கண்களால் காணக்கூடிய காரியங்கள் தடை செய்கின்றன. இயேசுவின் தழும்புகளால் குணமானீர்கள் என்கிறது வேதம். அந்த தெய்வீக சுகத்தை நாம் விசுவாசத்தின் மூலமாக மட்டுமே பார்க்க முடியும். ஆனால் நம்முடைய மூளையறிவு அதை ஒத்துக் கொள்வதில்லை. டாக்டர் சொன்ன வியாதிக்கான அறிகுறிகளை அது நம் முன்னே கொண்டு வந்து நிறுத்துகிறது; உடனே மனசு தடுமாறுகிறது. ஒரு பக்கம் தேவனுடைய வாக்குத்தத்தம், மறுபக்கம் டாக்டரின் வாக்குமூலம்! இதன் நடுவில் சிக்கிக் கொண்டு தவிக்கிறது நம்முடைய விசுவாசம்.

செழிப்பான இடத்திற்கு நாம் வந்திருப்பதாக வசனம் சொல்லுகிறது; சூழ்நிலையோ **empty money burse**-ஐ திறந்து காட்டுகிறது. நாம் சாபத்திலிருந்து மீட்கப்பட்டிருக்கிறோமென்று வேதம் சொல்கிறது; ஆனால், வீட்டில் வளர்த்து வந்த கோழிகள் – ஆடுகள் ஒன்றன் பின் ஒன்றாக வியாதி வந்து சாகிறது, முதலுக்கே மோசம் வருகிறது! நாம் பாவத்திலிருந்து விடுதலையாக்கப் பட்டிருக்கிறோம் என்று வசனம் சொல்கிறது; வீட்டில் அனுதினமும் கோபம் தலைக்கேறி விடுகிறது, வாய் கிழிய சண்டை நடக்கிறது!

சரீரம் கண்களால் காண்பதை நம்பச் சொல்லி, நம்மை கட்டாயப்படுத்துகிறது; நம் ஆவியோ காணாதிருக்கும் காரியத்தை நம்பச் சொல்லி நம்மை ஏவுகிறது. இதைத்தான் விசுவாசத்தின் நல்ல போராட்டம் என்று வேதம் சொல்கிறது. ***"விசுவாசத்தின் நல்ல போராட்டத்தைப் போராடு, நித்திய ஜீவனைப் பற்றிக்கொள்; அதற்காகவே நீ அழைக்கப்பட்டாய்; அநேக சாட்சிகளுக்கு முன்பாக நல்ல அறிக்கை பண்ணினவனுமாயிருக்கிறாய். 1 தீமோத். 6:12."*** அதாவது விசுவாசம் என்பது தேவன் நமக்கு தந்திருக்கும் ஒரு வரப்பிரசாதம் என்று எடுத்துக் கொள்ளலாம். இது நம்முடைய உயிர் மூச்சு! நம் பிழைப்பே இதில் தான் இருக்கிறது; நம் உயிரே விசுவாசத்தில் தான் ஊஞ்சலாடுகிறது. இந்த விசுவாசம் மட்டும் நம் வாழ்க்கையில் இல்லாமல் போச்சுதுன்னா... ? பிறகு நாம் எதற்குமே லாயக்கில்லாதவர்களாகி விடுவோம்! இந்த விசுவாசம் இல்லாமல் பிழைக்க வழியேயில்லையா? **No chance!** விசுவாசமே உலகத்தை ஜெயிக்கிற ஜெயம்...

விசுவாசம் என்பது ஒரு பிரமாணம் **(Law, principle, rule)** ஆகும். இந்த பிரமாணத்தின் அடிப்படையில்தான் விசுவாசிகளாகிய நாம் செயல்பட்டாக வேண்டும். வேறு மாதிரி செயல்பட்டால் அது சரியாக வராது! கண்களால் காணக்கூடாத காரியங்களை நாம் நம்புவதற்கேதுவாக இந்த விசுவாசம் என்கிற பிரமாணம் செயல்படுகிறது. கண்களால் காணக்கூடியதை நம்புவதற்கு இந்த பிரமாணம் தேவையில்லை. காணக்கூடியதை நாம் விசுவாசிக்க வேண்டியதில்லை, அது தான் நம் கண்முன்னால் இருக்கிறதே! வியாதி நம் கண் முன்னால் இருக்கிறது; டாக்டர் அதை எழுதி நம் கையிலும் கொடுத்து விடுகிறார், அதை நாம் நம்புகிறோம், இதில் கஷ்டம் எதுவும் இல்லை. இதற்காக நாம் போராட வேண்டிய அவசியமுமில்லை.

ஆனால் சுகம் நம் கண்களால் காணக்கூடாதபடி இருக்கிறது; அந்த சுகத்தை நம்ப வேண்டுமானால்; நாம் தான் விசுவாச பிரமாணத்தை இயக்கியாக வேண்டும். ஆனால் கண் முன்னால் பூதாகரமாக நின்று கொண்டிருக்கும் வியாதிக்கு முன்னால் விசுவாச பிரமாணத்தை இயக்க வேண்டுமானால் அது நீங்க நினைக்கிற மாதிரி இலேசுபட்ட காரியமல்ல! இல்லாததை விசுவாசிக்க நாம் போராட வேண்டியதாயிருக்கிறது. நம்முடைய விசுவாசத்தை பாதுகாத்துக் கொள்ள, தக்க வைத்துக்கொள்ள போராடித்தான் ஆக வேண்டியதாயிருக்கிறது, வேறு வழி இல்லை. இதைத்தான் நல்ல போராட்டம் என்று வேதம் சொல்கிறது.

இந்த உலகத்தில் எத்தனையோ விதமான போராட்டங்கள் நடக்கின்றன. நாட்டுக்கு நாடு, வீட்டுக்கு வீடு எத்தனையெத்தனையோ சண்டைகள், தர்க்கங்கள், அடிதடிகள்! ஆனால் இவைகளையெல்லாம் நல்ல போராட்டங்களென்று யாருமே சொல்வதில்லை. ஒரு இடத்தில் சண்டை நடக்கிறது என்றாலே அங்கே துக்கமும், அழுகையும், வேதனையும், புலம்பல்களுமே காணப்படும். ஆனால் இங்கே நாம் பார்க்கும் இந்த விசுவாச போராட்டமானது கெட்டதல்ல, அது ஒரு நல்ல போராட்டமாகும்! ஏனென்றால் இந்த போராட்டத்தில் முடிவில் நமக்கு ஒரு மாபெரும் வெற்றி காத்திருக்கிறது, சுகம்

காத்திருக்கிறது, எந்த குறைவுமில்லாத ஒரு செழிப்பான வாழ்க்கை காத்திருக்கிறது. அந்தச் செழிப்பு நம்மை வாழ வைக்கும், இந்த உலகத்தையும் வாழ வைக்கும்! எந்த குறைவுமில்லாத ஒரு செழிப்புள்ள பூமியின் மீது தேவனுடைய திட்டம் வெற்றியாக நிறைவேற உதவியும் செய்கிறது.

## முடிக்கப்போகும் முன்னதாக...

முடிக்கப்போகும் முன்னதாக இன்னும் ஒரு சில காரியங்களைப் பார்த்து விடுவோம். சாத்தானால் மாற்றியமைக்கப்பட்ட பொய் பைபிள் ஒன்று வெளியிடப்பட்டிருப்பதாக சபை விசுவாசிகளுக்கு எச்சரிக்கை விடப்பட்டது சில வருடங்களுக்கு முன்! சாத்தான் வசனத்தை எப்படியெல்லாம் மாற்றியிருக்கிறான் என்பதைக் காட்ட சில வசனங்களை ஒப்பீடு செய்து காட்டியிருந்தார்கள். உதாரணத்திற்கு தேவ ஆவியானவர் ஜலத்தின் மேல் அசைவாடிக் கொண்டிருந்தார் என்ற வசனம் ஜலத்தின் மேல் காற்று அடித்துக் கொண்டிருந்தது என்பதாக மாற்றப்பட்டிருக்கிறது. சாத்தானுடைய இந்த கொடிய வஞ்சகத்திற்கு தப்பித்துக் கொள்ள வேண்டும் என்ற கரிசனையுடன் சில ஊழியக்காரர்கள் இதற்கான எச்சரிக்கை மணியை அடித்தது நல்லது தான்.

என்றாலும் இதைவிட ஒரு அதிபயங்கரமான வஞ்சகம் இருப்பது இக்கால சபை விசுவாசிகளுக்கு தெரியாமல் இருக்கிறது. சாத்தான் வசனங்களை மாற்றி வேறு அர்த்தம் வரும்படி எழுதியிருப்பானானால்; அது வாசிக்கும் போதே தெரிந்து விடும். ஆனால் இங்கே நான் சொல்ல வருகிறது என்னவென்றால்: சாத்தான் பைபிளை கொஞ்சமும் மாற்றாமல் பரிசுத்தாவியானவர் தொகுத்துக் கொடுத்த உண்மையான பைபிளை நாம் வாசிக்கும்படி விட்டு விடுகிறான். அதற்கு அவன் எந்த தடையும் செய்வதில்லை! அப்படியானால் அவனுடைய வஞ்சம் தான் என்ன?

2 கொரிந்தியர் 4:4ல் வருகிறது அந்த வஞ்சகம், அது; தேவனுடைய சாயலாயிருக்கிற கிறிஸ்துவின் மகிமையான சுவிசேஷத்தின் ஒளி, அவிசுவாசிகளாகிய அவர்களுக்கு பிரகாசமாயிராதபடிக்கு, இப்பிரபஞ்சத்தின் தேவனானவன் அவர்களுடைய மனதைக் குருடாக்கினான் என்பது தான் அது. சாத்தான் பொய் வேதாகமத்தை வெளியிட்டபோது **alert** ஆக இருந்த விசுவாசிகள்; ஆரம்பத்தி**லி**ருந்தே இப்படியொரு கொடிய வஞ்சகம் வழக்கத்தில் இருப்பதை அறியாமல் போய்விட்டார்கள்! கொசுவை வடிகட்டிக் கொண்டிருந்தார்கள்; ஒட்டகம் ஹாயாக நீச்சலடித்துக் கொண்டிருந்ததை கவனிக்கக் கண்களில்லை! அதாவது கண்ணிருந்தும் பார்வையில்லை, பார்வையிருந்தும் பிரகாசமில்லை!

வசனத்தில், சாத்தான் மனதைக் குருடாக்கினான் என்று வருகிறது; அதாவது அது மனக்கண்களைத்தான் குறிக்கிறது. குருடாக்கினான் என்று வாசிக்கும்போதே மனதில் கண்ணின் படம் தான் வரும் இல்லையா? அடுத்தபடியாக இந்த பிரபஞ்சத்தின் தேவன் என்று சாத்தானை குறித்து சொல்லப்படுகிறது. ஆதாம் தவற விட்ட இந்த பூமிபந்து சாத்தானின் கைக்கு வந்தது. அன்று முதல் அவன் தான் பூமியை ஆளுகை செய்து வருகிறான்; அதாவது நேரிடையாக அல்ல, மனிதர்கள் மூலமாக! இயேசு சிலுவையில் சாத்தானை ஜெயித்து, அந்த பூமிப்பந்தை அவனிடமிருந்து திரும்ப பிடுங்குவதற்கு ஏதுவான பல காரியங்களை நம்மில் செய்து முடித்தார். அந்த காரியங்களை பிரயோஜனப்படுத்தி என்றோ மனிதன் பூமியை அவனிடமிருந்து பிடுங்கியிருக்கலாம். ஆனால் அந்த காரியங்கள் என்னவென்று விளங்காத காரணத்தினால் அவன் விளங்காமல் (உருப்படாதவனாக, உதவாக்கரையாக) போய்விட்டான்! அது எப்படி என்பதைப் புரிந்து கொள்ள என்னையே ஒரு உதாரணமாகக் கொண்டு வருகிறேன்.

## மண்ணில் புதையுண்ட மகிமை கிரீடம்:

1974–ஆம் வருடம், மார்ச் 1–ஆம் தேதி, சாயங்காலம் 7 மணியளவில், ஆனைமலை – வால்பாறையில் ஒரு பாரம்பரிய தேவாலயத்தின் முன்பாக இருந்த புல் தரையில் ஒரு நற்செய்தி கூட்டம் நடந்து கொண்டிருந்தது. நற்செய்தியாளர் ஒருவர் தேவனுடைய சாயலாயிருக்கிற கிறிஸ்துவின் மகிமையான சுவிசேஷத்தை பிரசங்கித்துக் கொண்டிருந்தார். “பளிச்” சென்று ஒரு வெளிச்சம், 24 வருடங்களாக குருடாயிருந்த லதா என்ற 24 வயது பெண்ணின் மனக்கண்கள் பிரகாசமடைந்தன! அவள் சரீரத்தில் தான் இருந்தாள்; ஆனால் அவளுடைய மனக்கண்கள் மட்டும் தேவனுடைய மகிமையை... மகத்துவங்களைக் கண்டன!

24 வருடங்களாக பட்டினியாக இருந்த அவளுடைய ஆவி மனிதனுக்கு பயங்கர பசி! பசிக்குத் தேவையான உணவளிக்க ஆளில்லை, உணவும் இல்லை! சத்தியம் தெரிந்த யாரும் அந்த ஆலயத்தில் இல்லை. சரி, சத்தியத்தை சரியாக போதிக்கிற வேறெந்த சபைக்காவது போகலாமென்று தேடிப்பார்த்தால் ... வெள்ளை டிரஸ்தான் போட்டுக்கணும், பூ வச்சுக்கக் கூடாது, தலையில் பின்னல் போடக்கூடாது, பவுடர் பூசக்கூடாது, செருப்பு போடக்கூடாது, நகை போடக்கூடாது, மொத்தத்தில் சொல்லப்போனால் ...

எனக்கு வார்த்தையே வரலை... அந்த அளவுக்கு மோசமான தோற்றத்துடன் இருந்தால் தான் பரலோகம் போக முடியும் என்று சொல்லுகிற ஒரு கூட்டத்தார் தான் தென்பட்டார்கள். நல்ல காலம்... நான் அவர்களிடம் சிக்கிக்கொள்ளாமல் தேவன் என்னைப் பாதுகாத்தார் பாருங்கள்!

நாம் நன்றாக இருக்க வேண்டுமென்பது தேவனுடைய விருப்பம்... செழிப்பு தேவன் நமக்காக நியமித்த காரியம், பணம் தவறல்ல, விசுவாச வார்த்தைகளினால் நாம் நினைத்ததை நடத்தி முடிக்கக்கூடிய சாதனையாளர்களாக மாறலாம் ... இது போன்ற சத்தியங்கள் அடங்கிய ஒரு ஊழியக்காரரின் புத்தகம் எனக்கு கிடைத்தது. ஒரு தங்கப் புதையல் கிடைத்ததைப் போன்றே சந்தோஷத்தில் மூழ்கிப் போனேன். மூழ்கி முத்துக்களை எடுக்க போன நேரத்தில் வஞ்சகச் சாத்தான் எனக்காக வைத்திருந்த பொறியில் என் கால் சிக்கிக்கொண்டது! அவன் கருப்பாக, பயங்கரமாக, வௌவால் இறக்கைகளுடன் வந்து இறங்கியிருந்தால் பிரச்சனையே இருந்திருக்காது. உடனே இயேசுவின் நாமத்தினாலே அப்பாலே போ சாத்தானே என்று சொல்லி விரட்டியிருப்பேன். ஆனால் நடந்ததே வேறு! வேறு ஒரு ஊழியக்காரரின் புத்தகங்கள் சிலவற்றை கொண்டு வந்து என் கையில் கொடுத்துவிட்டுப் போய்விட்டான்.

அந்த ஊழியக்காரரும் வேதவசனங்களை **base** பண்ணித்தான் புத்தகத்தை எழுதியிருந்தார். அதனால் தவறு இருக்க வாய்ப்பில்லை என்று நினைத்து அப்படியே விழுங்கினேன்; (பசி ருசி அறியாது!) என் வாழ்க்கையே எட்டிக் காயாக கசந்து போனது! அப்போதும் நான் **alert** ஆகவில்லை, ஏனென்றால் கிறிஸ்தவ வாழ்க்கை என்றாலே அது கசப்புத்தான் என்று போதித்தார் இன்னொரு ஊழியக்காரர்! இப்படியாக என் வாழ்க்கை பல தத்தளிப்பின் பாத்திரங்களை ஏந்திக் கொண்டே சென்றது. சேலை கட்டிய பிறகும் தத்தி தத்தி நடந்து போகும் செல்லப் பாப்பாவாகவே இருந்தேன். வாழ்க்கையின் முழுப் பகுதியும் தார்ப்பாலைவனமாகிப் போனது! கானல் நீரைத் தேடி ஓடும் மானாகிப் போனேன். இயேசு மட்டும் என்னை தேடிவராதிருந்தாரானால் தாகத்தில் சுருண்டு விழுந்து செத்துப் போயிருப்பேன்!

## நல்ல போராளிகளாக மாறுவோம்...

தேவனைக் குறித்த சரியான அறிவில்லாததினால்; தவறான அறிவு இருந்ததினால் பாலைவனத்திலேயே செத்துப் போனவர்கள் கோடானுகோடி! அவர்கள் இயேசுவை அறியாத உலக மனிதர்களாக இருந்திருந்தால் சகித்திருப்பேன்; ஆனால் ... ஐயோ, பரிதாபமே! இயேசுவை நெஞ்சிலே சுமந்து கொண்டிருந்தவர்களின் நிலைதான் இப்படியாகிப்போனது! கோடிகோடியான தேவபிள்ளைகளை அறியாமையில் மூழ்கடித்து கொன்று குவித்த பாலைவனங்கள் வெறித்தனமாக மணலை வீசிக்கொண்டிருந்தன! கண்ணுக்குத் தெரியாத கல்லறைகளுக்குள்ளிருந்து முனங்கும் சோகக்குரல்கள் என்னை சத்தியத்தை அறிந்துகொள்ள வேண்டும் என்ற தீவிரவாதத்திற்குள் என்னை உந்தித் தள்ளிவிட்டன!

நிஜ பைபிளை என் கையில் கொடுத்து என்னை வஞ்சித்த சாத்தானை என் காலின் கீழ் நசுக்கிப் பிடித்துக் கொண்டுதான் இந்த புத்தகங்களை எழுதிக்கொண்டிருக்கிறேன். தேவனுடைய இராஜ்ஜியத்தில் புதிதாக பிறக்கும் இளம் விசுவாசிகள் என்னைப்போல் புதைமணலுக்குள் கூட்டிச் செல்லும் காட்டுத்தீபங்களை நம்பி ஏமாந்துவிடக்கூடாது என்றே, இவைகளை எழுதுகிறேன். மானுடன், தான் இழந்த ஆதி மேன்மையினை, மகிமையை, மகத்துவத்தை மீண்டுமாக பெற்றுக் கொண்டே ஆகவேண்டும் என்ற பிடிவாதத்துடன் ஓடிக்கொண்டிருக்கும் ஒரு அன்பு தீவிரவாதியின் புத்தகங்கள் தான் இவை!

உலக நாடுகளின் பின்னணியத்தில் எத்தனையோ விதமான தீவிரவாத இயக்கங்கள் செயல்பட்டு வருகின்றன. இந்த இயக்கத்தை சேர்ந்த தீவிரவாதிகள் தங்களுடைய நோக்கம், விருப்பம் நிறைவேற வேண்டுமென்பதில் விடாப்பிடியாக இருக்கிறார்கள். அதையே **focus** செய்து; அதை அடைவதில் தீவிரமாக செயல்படுகிறார்கள். அதற்காக அவர்கள் தங்கள் குடும்பத்தைக் கூட புறக்கணித்து விடுகிறார்கள். தங்களுடைய வாழ்க்கையையும், சாப்பாட்டையும், ஏன் தங்கள் உயிரையும் கூட ஒரு பொருட்டாக அவர்கள் நினைப்பதில்லை. எல்லாக் காரியத்திலேயும் இச்சையடக்கமுள்ளவர்களாக இருக்கிறார்கள். சுயக்கட்டுபாட்டுடன் செயல்பட்டு ஒழுக்க நெறியுடன் வாழ்கிறார்கள். காவல்துறையினருக்கே அல்வா கொடுக்கிறார்கள்!

இவர்கள் எதைச் சாதிக்கத் துடிக்கிறார்கள்? இதனால் இவர்களுக்கு என்ன பிரயோஜனம்? இவர்களுக்கு கோடிகோடியாக பணம் வரப்போகிறதா? இல்லை! தங்களுக்கு சாதகமாக இல்லாத மனிதர்களுக்கு எதிராக, சமுதாயத்திற்கு எதிராக, அரசாங்கத்திற்கு எதிராக ஏன் இந்த உலகத்திற்கே எதிராக போர்க்கொடி உயர்த்துகிறார்கள். நல்ல போராளிகளாக, நினைத்ததை சாதித்து முடித்த திருப்தியில் இரத்தம் சிந்தி மரிக்கிறார்கள்.

தான் யார் என்றே தெரியாத, தன்னைப் படைத்த தேவனைப் பற்றி எதுவுமே புரியாத உலக

மனிதர்களின் தீவிரவாதம் இந்த அளவுக்கு உலகத்தை ஊடுருவுமானால்...

தேவபிள்ளைகளே, புரியாத புதிர்களுக்கான விடைகளை கையில் வைத்துக் கொண்டிருப்பவர்களே! ஏதேனின் புதிரை சிக்கறுத்தவர்களே! சிலுவையில் என்ன நடந்தது என்பதை புரிந்து கொண்டவர்களே, நீங்களும் நானும் இந்த பூமியில் தேவதிட்டத்தை நிறைவேற்றுவதில் எந்த அளவுக்கு தீவிரவாதிகளாக இருக்க வேண்டும் என்பதை நீங்களே **Calculate** செய்து பாருங்கள்.

**புதியதோர் உலகம் செய்வோம்...**

**சாபத்தால் சீர்கெட்ட இந்த உலகத்தை வேருடன் சாய்ப்போம்!**

**அச்சச்சோ... தப்பு, தப்பு!**

**சாபச் சீர்கேடுகளை வேருடன் சாய்ப்போம்!**
**உலகத்தை காப்பாற்றுவோம்!**

## ளிப்பாடுகளின் சிறகுகள்...

இன்றைக்கு நீ செத்துப்போனால் எங்கே போவாய்? பரலோகம் போவியா? இப்படி பாவம் செய்து கொண்டே இருப்பாயானால் நரகத்துக்குப் போயிருவே ஜாக்கிரதை! இப்படியெல்லாம் பூச்சாண்டி காட்டி யாரையும் நீங்கள் இரட்சிப்புக்குள் நடத்தவே முடியாது. எங்கே நிம்மதி என்று தேடியலைந்துக் கொண்டிருக்கும் மனிதர்களை நிம்மதி தரும் ஏதேனுக்குள் அழைத்துச் செல்லும்விதமாக நாம் சொல்லும் சுவிசேஷம் இருக்க வேண்டும். அடைக்கப்பட்ட ஏதேனின் கதவுகளை திறந்து வைக்கத்தான் இயேசு வந்தார் என்பதை அவர்களுக்குச் சொல்லுவதுதான் சுவிசேஷம்.

ஆதியாகம் 3 ம் அதிகாரத்திலிருந்து வேர்பிடிக்க ஆரம்பித்த முள்களையும் குருக்குகளையும் வெட்டிச் சாய்க்க கோடாரிகளுடன் புறப்படுவோம். ஏதேனுக்குச் செல்லும் பூர்வபாதைகளை செப்பனிடுவோம்.

வாருங்கள், நம் கால்களுக்குக் கீழாக தலை நசுக்கப்பட்டு செத்துக்கிடக்கும் ஒரு பாம்பை உங்களுக்கு காண்பிக்கிறேன்! ஏதேனில் மரத்தில் தலைகீழாக தொங்கியபடி ஏவாளிடம் பேச்சுக் கொடுத்து; நம் தேவனின் திட்டத்தையே கெடுத்துப்போட்ட அந்த சாத்தானைத்தான் சொல்லுகிறேன்!

செத்த பாம்பை அடிப்பதற்காக தடியை எடுத்துக் கொண்டு வந்து கொண்டிருக்கிற தேவப்பிள்ளைகளின் அறியாமையின் இருள் இயேசுவின் நாமத்தில் விலகுவதாக! பிரகாசமுள்ள மனக்கண்கள் உண்டாவதாக! ஆமென்!

*“அதிக உறுதியான தீர்க்கதரிசன வசனமும் நமக்கு உண்டு; பொழுது விடிந்து விடிவெள்ளி உங்கள் இருதயங்களில் உதிக்குமளவும் இருளுள்ள ஸ்தலத்தில் பிரகாசிக்கிற விளக்கைப்போன்ற அவ்வசனத்தைக் கவனித்திருப்பது நலமாயிருக்கும்! 2 பேதுரு1:19”*

**வெளிப்பாடுகளின் சிறகுகள் தொடர்ந்து பறந்து கொண்டே இருக்கும்... ?**

**வானை எட்டும் வரை...**

**(தேவ திட்டம் நிறைவேறும் வரை...!)**